சிந்தனையாளர்

# பிளேட்டோ

அரு. ராமநாதன்



28

சிந்தனையாளர் வரிசை : 2

# சிந்தனையாளர் பிளேட்டோ

3365

எழுதியவர் : அரு. ராமநாதன்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

PRESENTED BY
V. PR. P... M.
KASIVISVANATHAN C...
PAGAN...

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.




பிரேமா
பிரசுரம்
சென்னை—24

விலை ரூபாய் 1-4-0

பிரேமா பிரசுரம்—8

முதற் பதிப்பு: ஜனவரி—1954
இரண்டாம் பதிப்பு: ஜூன் 1955
பதிப்புரிமை வாய்ந்தது.

**வெளிவந்தவை :**

1. *சிந்தனையாளர் டார்வின்*
(எழுதியவர் : ஜெகசிற்பியன்)
2. *சிந்தனையாளர் பிளேட்டோ*
(எழுதியவர் : அரு. ராமநாதன்)
3. *சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்*
(எழுதியவர் ரா. தணலன்)
4. *சிந்தனையாளர் ரூஸோ*
(எழுதியவர் : கோமேதகவேலு)
5. *சிந்தனையாளர் பெஞ்சமின் பிராங்ளின்*
(அரு. ராமநாதன்
—மார்கரெட் களின்ஸ்)
6. *சிந்தனையாளர் அரிஸ்டாடில்*
(எழுதியவர் : கிருஷ்ணன் பாலா)

**அடுத்து வெளிவருபவை :**

*7—12* ?

அச்சிட்டோர் :
**பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,**
**சென்னை—24**

# சிந்தனையாளர் வரிசை

தயாரிப்பு — அரு. ராமநாதன்

3365

ALL TDD
00133

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION
PAGANERI.

2

மனிதன் எந்த அரசியலில்
எந்த விதமாக எதற்காக
வாழ்வது எனச் சிந்தித்தவர்

# சிந்தனையாளர் பிளேட்டோ

எழுதியவர் : அரு. ராமநாதன் சித்திரங்கள் : உகி

# பொருளடக்கம்

## I. முதற் பகுதி


சிந்தனைகளின் மூலவேர் எது ?

வாத்தியாரும் மாணவனும்

பிளேட்டோவின் வாழ்க்கை வரலாறு

பிளேட்டோவின் நூல்கள்


## II. இரண்டாம் பகுதி :

### சிந்தனை விளக்கமும் நூற் சுருக்கங்களும்


1. குடியரசு (Republic)
2. ஆத்மீகக் காதல்
   (கூடிக்களித்தல்) Symposium

3; 4; 5. ஆத்மீக வாழ்க்கை

6. பிளேட்டோவின் சிந்தனைகள்
   1. மதம், 2. கலைகள்,
   3. வைத்தியர்களும் நீதிபதிகளும்

7. பிளேட்டோவின் மணி மொழிகள்



3365

# சிந்தனைகளின் மூலவேர் எது?

### சிந்தனையாளன் பிளேட்டோ யார்?

அரசியலறிவு மேலோங்கியுள்ள இன்றையச் சிந்தனையாளர்களையும் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒருவன் மீண்டும் மீண்டும் சிந்திக்க வைக்கிறான். அவன் தான் பிளேட்டோ. இனிவரும் சமூக முன்னேற்றத்திற்கும், இன்றுள்ள சமுதாய நாகரிகத்திற்கும், அநாகரிக காலத்திலே ஒருவன் கருவூலம் அமைத்து விட்டுப் போனான். அவன்தான் சிந்தனையாளன் பிளேட்டோ.

நமது பண்பட்ட சிந்தனைகள் அனைத்திற்கும் அஸ்திவாரம் அமைத்த கிரேக்க தத்துவ ஞானி அவன்! இல்லாத கறுப்புப் பூனையை இருட்டறையில் தேடியலையும் குருடன்தான் தத்துவ ஞானி என்று சொல்வதுண்டு! ஆனால் தத்துவஞானி பிளேட்டோ குருடனல்லன். அவன் இருப்பது இருட்டறையுமன்று. அவன் தேடியலைந்தது மாயப் பூனையுமன்று. நடை முறையில் நல்லதொரு அரசியல் மனித சமுதாய அமைப்பு எதுவென்றுதான் தேடியலைந்தான். அவன் தேடித்தந்ததும் நாளைவரை நம் நினைவில் நிலைபெறக் கூடிய சமூக சித்தாந்தந்தான்; நிலைநிற்கக் கூடிய மனித தத்துவந்தான். பூலோக மக்களைச் சுவர்க்கத்துக்கு ஏற்றுமதி செய்யாமல் சுவர்க்கத்தைப் பூலோகத்திற்கு இறக்குமதி செய்ய முயன்ற தத்துவஞானி அவன்!

அவன் பொதுமேடைகளில் பிரசங்கங்கள் பொழியவில்லை; அரசியல் பதவிகளில் ஈடுபட வில்லை; கிணற்றுத் தவளையாக விளங்கவு மில்லை; பல நாடுகளிலும் சுற்றியலைந்து அறிவு பண் பட்டுச் சிந்தனைகள் பக்குவப்பட்ட பிறகே, நல்லதொரு அரசியல் சமுதாயக் கனவைத் தெளிவான கட்டுக் கோப்புகளுடன் எழுதி விட்டு மறைந்தான்; நல்லதொரு மனித வாழ்க்கையை, நல்ல தொரு காதல் வாழ்வை, வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியும்படி வரையறை செய்துவிட்டுப் போனான்.

சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸின் பொருளாதாரப் பொது வுடமை வாதப் புரட்சிக்கும், சிந்தனையாளர் டார்வினின் ஜீவமூலப் பரிணாமவாதப் புரட்சிக்கும், சிந்தனையாளர் ரூஸோவின் சமுதாய ஒப்பந்தப் புரட்சிக்கும், சிந்தனையாளர் இங்கர் சாலின் மூட நம் பிக்கைக் கண்டனப் புரட்சிக்கும், சிந்தனையாளர் நீட்ஸியின் ஆத் மீகப் புரட்சிக்கும், இன்னும் பல சிந்தனையாளர்களின் புரட்சி கள் அனைத்திற்கும் பிளேட்டோவின் சிந்தனைகளில் மூலவேர் இருப்பதைக் காணலாம்.


பெண்களின் சமவுரிமைப் போராட்டம் முதல், ருஷ்யாவின் பொதுவுடமை இலட்சியம் வரை சகல விதமான முற்போக்குக் கருத்துக்களும் அவனது நூல்களில் பொதிந்துள்ளன. நம் ஒளவை யாரின் அமைதியான சமுதாய அமைப்பு, திருவள்ளுவரின் 'வாழ்வாங்கு வாழும்' மனித வனப்பு, பகவத் கீதையின் கர்மா தர்மம், புத்தரின் சமதர்மம், உபநிஷதங்களின் ஆத்ம விசாரணை, நாஸ்திகர்களின் ஆஷாட திக்கண்டனம், மேரிஸ்டோப்ஸ் அம்மை யாரின் ஆண் பெண் உறவு சாஸ்திரம், ஹாவ்லக் எல்லீஸின் பால் இயல் ஆராய்ச்சி, பிராய்டின் கனவு இயல் பரிசோதனை, காந்திய டிகளின் இயற்கை வைத்தியம், சாணக்கியரின் ராஜதர்ம ஜாதீய வாதம், அமெரிக்காவின் ஜனநாயகம், இங்கிலாந்தின் மிதவாதம், ருஷ்யாவின் சோஷலிஸம், ஹிட்லரின் நாஜிஸம், முஸோலினியின் பேஸிஸம், சென்னை சர்க்காரின் முதியோர்கல்வித் திட்டம், இந் திய சர்க்காரின் 'ஜனன உற்பத்திக் கட்டுப்பாடு' பிரசாரம், பிலிம் சென்ஸார் போர்டின் தணிக்கை விதிகள் வரை பிளேட் டோவின் சிந்தனைகளில் இடம் பெறாதது எதுவும் இல்லை. ஆதாரக் கல்வி முறை, பெண்களுக்கு ராணுவப் பயிற்சி, மணமக்களுக்கு அரசாங்க அங்கீகார ஆரோக்கிய சர்டிபிகேட், முற்பிறவி, பிற் பிறவி, மறு உலகம் வரை சகல விதமான பிரச்னைகளும் பிளேட் டோவின் நூல்களில் விரவிக்கிடக்கின்றன.


ஐரோப்பாவின் நவீன சித்தாந்தங்களில் அறிந்தோ அறியா மலோ பிளேட்டோ ஆக்கம் பெற்றிருப்பது போல, வேறு எந்த அநாகரிக காலத்து மனிதனும் இடம்பெற்றதில்லை. இன்றுள்ள அரசியலமைப்புத் திட்டங்களுக்கெல்லாம், புரட்சி மூலங்களுக் கெல்லாம் ஆதித் தந்தை யாரென்றால், பிளேட்டோ என்று கூசா மல் சொல்லிவிடலாம்.

அரசியல் சமூகப் பிரச்னைகளில் மட்டுமல்ல, இலக்கியப் புரட்சிகளிலும் புதுமையான கவிதைப் போக்குகளிலும் பிளேட்டோவின் நிழல் தென்படுகிறது. கவி ஷெல்லி, ஸ்பென்சர், கோல்ரீட்ஜ், வேட்ஸ்வொர்த் முதலான நவீனக் கவிஞர்களிடமும் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பிளேட்டோவின் ஆதிக்கம் தென்படுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் தோன்றிய பிளேட்டோவின் ஞானக் கருத்துகளின் வாடை, செயின்ட் ஜானின் தெய்வீகக் கிரந்தத்திலும் மணக்கிறது. 'கண்முன் தென்படுபவை யெல்லாம் அநித்தியமானவை; கண்ணால் காணாதவை தாம் நித்திய மானவை' என்று முதன் முதலில் வாதம் புரிந்தவன் பிளேட்டோ.


ஆக, முற்போக்குப் பிற்போக்குக் கருத்துள்ள இரு சாராருமே, பிளேட்டோவின் வரலாற்றையும் சிந்தனை நூல்களையும் தெரிந்து கொள்வது மிக மிக அவசியம்.

தேசம், இனம், மதம், கலாசாரம் என்னும் குறுகிய எல்லைச் சுவர்களைத் தாண்டி, விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று, அடிவானத்துக்கு அப்பாலும் ஊடுருவிப் பார்த்து, எல்லாவிதச் சிந்தனைகளின் மூலவேர்களையும் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரு தனி மனிதன் சிந்தித்தான். அவன்தான் சிந்தனையாளன் பிளேட்டோ! சுருக்கமாகச் சொன்னால், அவன்தான் நவீனச் சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர்!





# வாத்தியாரும் மாணவனும்



சாக்ரடீஸ்

தியாக புருஷர் சாக்ரடீஸ்தான் நம் பிளேட்டோவின் வாத்தியார். பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பிளேட்டோவுக்கு, அவன் தாயாரின் உறவினர்கள் மூலம் ஞானி சாக்ரடீஸின் அறிமுகமும் சகவாசமும் கிடைத்தது. அப்பெரியாரின் அறிவுப் பண்ணையில் வளர்ந்து உலகம் வியக்கும் சிந்தனையாளனாக உருவான மாணாக்கன்தான் பிளேட்டோ.

உலகில் முதன் முதலில் சிந்தனை உரிமைக்கு வித்திட்டவர் சாக்ரடீஸ். எமனுக்குத் தத்தம் செய்யப்பட்ட நசிகேதன் எமனிடமே கேள்வி கேட்டதுபோல், பல புராதன தர்ம வாதிகளையும் பல கடவுளர்களையும் நோக்கி, 'ஒரே கடவுள் யார்?' எனக் கேள்வி போட்டார் அப்பெரியார். உலகம் அறியாமையால் இருண்டு கிடந்தபோது, இடி, மின்னல், பூகம்பங்களைக் கண்டு ஜனங்கள் மிரண்டு, கல்லை, மண்ணை, கண்டவைகளை யெல்லாம் கடவுளர்களாகக் கருதி, அன்பு மயமான ஆத்மார்த்தப் பக்திக்குப் பதிலாக மிருகப் பிராந்தியமான பயபக்தி கொண்டு, மூட நம்பிக்கைகளில் மூழ்கி, இயற்கையின் ஆச்சரியங்களைக் கண்டு மலைத்து நின்ற அந்த அநாகரிக காலத்திலே, இயற்கையின் ஆச்சரியக் குறிகளுக்குக் கேள்விக் குறிகள் போட்டார் சாக்ரடீஸ். 'நம்பிக்கை மட்டும் போதாது, சிந்திக்கவும் வேண்டும்' என்றார். அதற்காக அவரை நாஸ்திகர் எனக்குற்றம் சாட்டி, மக்களின் நீதிமன்றத்தில் நிறுத்தி, மரணதண்டனை விதித்து, விஷக்கோப்பையைப் பரிசளித்தது புராதன தர்மம், குடியாட்சிப் போர்வையிலே!

'சிந்திப்பதும் சிந்திப்பதைச் சொல்வதும் ஒவ்வொரு தனி மனிதனின் பிறப்புரிமை' என்று சொன்னார் சாக்ரடீஸ்; அதுவும், குடியரசும் தேர்தல் முறையும் உள்ள ஒரு நாட்டில்! நீதிமன்றத்தில் ஓட்டு எடுத்தபோது 'சாக்ரடீஸ்' குற்றவாளியென 281 ஓட்டுகளும், குற்றவாளியல்ல என 220 ஓட்டுகளும் கிடைத்தன. 61 ஓட்டு வித்தியாசத்தால், சாக்ரடீஸ் சிறையில் தள்ளப்பட்டு, நீதியின் பெயரால் படுகொலை செய்யப்பட்டார். உலகெங்கும் மனித வர்க்கம் சுதந்திரத்தைப் பற்றியே நினைக்கத் தொடங்குமுன், 'அபிப்பிராய சுதந்திரத்தை' நிலைநாட்டுவதற்காக, முதன் முதலில் உயிர் நீத்தவர் சாக்ரடீஸ்தான். அதற்குப் பிறகு அவருடைய அருமை மாணாக்கன் பிளேட்டோ, சிந்திப்பதே தன் தொழிலாகக் கொண்டு, மனிதன் நிம்மதியாக வாழக்கூடிய புதியதொரு அரசியல் சமுதாய அமைப்பைக் கனவுகாணத் தொடங்கினான்.

சாக்ரடீஸும், பிளேட்டோவும், குருவும் சீடனும்.—ஆனால் எவ்வளவோ வித்தியாசங்கள்; உருவத்தில், பிறப்பில், வாழ்வில், மேதையில், சிந்தனையில், கடைசியாக இறப்பில்! சாக்ரடீஸ், ஒரு சிற்பத் தொழிலாளிக்கும் மருத்துவச்சிக்கும் பிறந்து தாழ்ந்த குலத்திலிருந்து வந்தவர். பிளேட்டோ, தேசத்திலே பழம் பெருமை பெற்ற ஒரு மேல் குலத்தில் பிறந்தவன். சாக்ரடீஸ், உருவத்தில் மிகவும் அவலட்சணமானவர். பிளேட்டோ, மிகவும் அழகானவன். சாக்ரடீஸ், கிழவர்; நகரைவிட்டு எங்கும் போகாதவர்; கொள்கைக்காக உயிர் நீத்தவர்; போர்க்களத்தில் புகுந்து சமராற்றியவர்; மனைவி மக்கள் குடும்பம், குளிர், பனி, வெய்யிலைப் பொருட்படுத்தாமல் துறவிபோல் திரிந்தவர். பிளேட்டோ, இளைஞன்; பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவன்; கொள்கையை வருங் காலத்திற்கு வலியுறுத்துவதற்காக ஒதுங்கி வாழ்ந்தவன்; இயற்கையாக உயிர் நீத்தவன்; புகழ்பெற்ற இஸ்துமியான் குஸ்திப் பந்தயங்களில் கலந்துகொண்டு இருமுறை வெற்றிப் பரிசுகள் பெற்றவன்; பல சோக நாடகங்களும் கவிதைகளும் எழுதிய கலைஞன். கிழவர் சாக்ரடீஸ், 70 வயதில் கொலைத் தண்டனை விதிக்கப்படும் வரை, மதம், ஒழுக்கம், அரசியல், கல்வி, சாமானிய வாழ்க்கை பற்றி, ஓயாமல், சந்தித்தவரையெல்லாம் கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்தார். இளைஞன் பிளேட்டோ 25-வது வயதிலே, அவற்றிற்கெல்லாம் விடை காணச் சிறந்த அரசியல் அறிஞனாகத் திகழும் சக்தி பெற்றிருந்தான்.

'ஒவ்வொரு மனிதனும் இடையூறுகளுக்கும் ஆசைகளுக்கும் மத்தியில் எவ்வாறு வாழ்வது? மனம், மொழி, காயங்களில் தூய்மை; கொள்கையில் உறுதி; அவற்றோடு தன்னடக்கம், தீர ஆலோசனை, சிந்தனைத் தெளிவு, ஒழுக்க மேன்மை, கருணை கனிவு, பணிவு, கட்டுப்பாடு, புலனடக்கம், நேர்மை-இவைதாம் சரியான ஞானம்; வாழ்வின் வெற்றிக்குரிய இரகசியம்' என்று ஞானி சாக்ரடீஸ் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் போதனை செய்தார். மாணாக்


கன் பிளேட்டோவோ, பல் மனிதர்களைக்கொண்ட ஜன சமுத்திரத்தை ஒரு கூட்டாக நோக்கி, எல்லோரும் இன்புற்று வாழ எந்த அரசியல் முறை உகந்தது; எந்தச் சமுதாய அமைப்பு ஏற்றதெனச் சிந்தித்தான். மனிதரை வாத்தியார் பிரித்துப் பார்த்தார்; மாணாக்கன் தொகுத்துப் பார்த்தான்.

சாக்ரடீஸ், மனிதக் கும்பல் முன் நின்று பேசினார்; ஆனால் எதையும் எழுதவில்லை. பிளேட்டோ, மனித சமுதாயத்திற்காக எழுதினான்; எதையும் பேசவில்லை!

சாக்ரடீஸ் தம் அடையாளமாக எதையும் பின் சந்ததிகளுக்கு வைத்துவிட்டுப் போகவில்லை. ஆனால் பிளேட்டோ, தன் அடையாளமாக அறிவியல் நூல்களை மட்டுமல்ல, தேசச் சரித்திரத்திலும் 'அகடெமி' என்னும் கலைக் கல்லூரியை நிறுவி விட்டுப் போனான்!

சாக்ரடீஸ் பகுத்தறிவுகளின் பகுப்பு; பிளேட்டோ அறிவுகளின் தொகுப்பு - ஒற்றையடிப் பாதையும் ராஜ பாட்டையும் போல! சுருக்கமாகச் சொன்னால் வாத்தியாரும் மாணவனும், கேள்வியும் பதிலும் போல!





# பிளேட்டோவின் வாழ்க்கை வரலாறு


**பிறந்த இடம்**: கிரேக்க தேசத்திலுள்ள **ஏதென்ஸ்** நகரில் கி மு. 427-ல் பிளேட்டோ பிறந்தான் என்று சரித்திரம் சொல்லுகிறது. நமக்குப் பிறந்த இடமும் தேதியும் முக்கியமல்ல. அவன் பிறந்த மண்ணின் வாசனையும் சூழ்நிலையுந்தான் முக்கியம். அவை இரண்டுந்தான் ஒருவனது சிந்தனைகளுக்குப் பெரிதும் வித்திடுகின்றன.

பிளேட்டோ பிறந்த கிரேக்க தேசத்தின் மண்வாசனை எத்தகையது?...

கிரேக்க தேசம்! இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன், அது பலதிசை நாடுகளுக்கும் ஆசைவலை விரிக்கும் மோகினித் தீவு. கலைஞர்களின் கனவுத்தோப்பு. இலக்கிய மன்னர்களின் இதயப் பூங்கா. அழகு வனிதைகளின் மாயப் பஞ்சணை. மோகம் பிடித்த பெண்களின் கேளிக்கைக் கூடம். பல தேசத்து வியாபாரிகளின் சூதாட்டக் கிடங்கு. பலதிறப்பட்ட அரசியல் வாதிகளின் சதுரங்கப் பலகை. பல்வேறு அறிஞர்களின் பட்டிமண்டபம்! விசாலமாக இருண்டு கிடக்கும் அநாகரிக உலக அரங்கின் மத்தியிலே, ஒளி பரப்பிக்கொண்டிருந்த ஒருசிறு நாகரிக விளக்குதான் கிரேக்க தேசம்!

பூகோளப் படத்தை உற்றுப்பார்த்தால், கிரேக்க தேசம் எலும்புருக்கிக் கிழவனின் கைவிரல்களைப் போல, மத்தியதரைக் கடலுக்குள் நீட்டிக்கொண்டிருப்பது தென்படும்! கடலுக்குள் முத்துக்குளிப்பதும் கைதான்; கடவுளைக் கும்பிடுவதும் கைதான்; மற்றவன் கண்ணைப் பறிப்பதும் கைதான்; தானம் வாங்குவதும் கைதான்; தானம் வழங்குவதும் கைதான்; கைப்பற்றுவதும் கைதான்; கை கொடுப்பதும் கைதான்; பொதுவாகப் பரிவர்த்தனைக்கெல்லாம் மூலாதாரமானது கை! உலகின் உள்ளும் புறமும் விதியின் கையாக விளங்கியது கிரேக்க தேசம்!

கிரேக்க தேசம் எனும் பருவ அழகி கல் கலவென்று சிரித்து எந்தத் தேசத்தோடும் கைகோர்த்து விளையாட, அல்லது கையால் கிள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கத் தயாராயிருந்தாள். கிழக்கே துயிலும் ஏசியா மைனர், வியாபாரச் சூதாட்டத்திலும் வாணிபத் தொழில் செழிப்பிலும் வாலிப முறுக்கேறியிருந்த போது, அவனிடமிருந்து நாணயங்களையும் பொருள் பரிவர்த்தனைகளையும் கையாடினாள். தெற்கே துயிலும் கிரீட் தீவைக் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, நாகரிக வளர்ச்சியடையாத சிறு வயசிலேயே, கட்டியணைத்துக் கைப்பற்றிக்கொண்டாள். மேற்கே துயிலும் இத்தாலி, ஸிஸிலி, ஸ்பெயின் முதலான அந்நிய தேசங்




ஏதென்ஸ்

களிடம் கை நீட்டிப் பார்த்தாள். வடக்கே துயிலும் மாசிடோனியா, எபிரஸ், தெஸ்ஸாலி முதலான காட்டுமிராண்டிப் பிரதேசங்களின் ஆசைப் பலவந்தங்களுக்கு இணங்கி, கலாமேதையைப் பெற்றெடுத்துக் கொண்டாள்.

அலெக்ஸாந்தர் ஆக்ரமிப்பதற்கு முன்பே, இந்தியாவுக்குக் கிராமப் பஞ்சாயத்து முறையை இதழ் அமுதாய் அள்ளித் தந்தாள். சமஸ்கிருத இலக்கியத்திற்குத் தன் நாடகக் கலையைத் தானம் செய்தாள். தமிழ் நாட்டின் பண்பாட்டையும் இன்சொற்களையும் தானம் வாங்கிச் சென்றாள். இந்திய ரத்தத்தில் கலந்து உடல் திடமும் அழகு வடிவமும் உள்ள ஒரு புது யவன ஜாதியை உற்பத்தி செய்து விட்டுப்போனாள்.

எவரும் எட்டிப்பிடிக்க முடியாதபடி மலைப் புடைப்புகளையும் நீர்க் கிழிப்புகளையுமுடைய கிரேக்க தேசத்தில், உள் நாட்டிற்குள் சுலபமான போக்கு வரவுகளுக்கு வழியில்லாததால், ஆங்காங்குள்ள சமவெளிகளில், நம் காந்தியடிகள் கனவு கண்டதுபோல் சுயதேவைப் பூர்த்தியுள்ள பல சிறு கிராம ராஜ்யங்கள் ஏற்பட்டன. அவை மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் ஏதுமில்லாமல் சொந்த மொழி, மதப் பண்பாடுகளை வளர்க்கும் சிறு சிறு தன்னரசுகளாய் விளங்கின. இவ்வாறு சுயதேவைப் பூர்த்தியுள்ள, 'நகர ராஜ்யங்களின்' சிறப்பு ஏற்படுவதற்குக் காரணம், அத்தேசத்தின் இயற்கையமைப்புப் பிரிவினைகள்தாம். உலகிலுள்ள மற்ற நாடுகளிலெல்லாம் யதேச்சாதிகாரமும் முடியரசுகளும் விளங்கிய அந்த அநாகரிக காலத்தில் கிரேக்க தேசத்தில் மட்டும் குடியாட்சி அமைப்பு ஏற்பட்டதற்குக் காரணமும் அதன் 'சுய தேவைப் பூர்த்தியுள்ள' நகர ராஜ்யங்கள்தாம்! அத்தகைய நகர ராஜ்யங்களில் ஒன்றான ஏதென்ஸ் நகரில்தான் பிளேட்டோ பிறந்தான்.

**பிறந்த நகரம்:** ஏதென்ஸ் நகரில் ஓர் அழகிய துறைமுகம் உண்டு. அங்கே ஒரு பெரிய கப்பல் படையும் உண்டு. பாரசிக யுத்தத்திற்குப் பிறகு ஏதென்ஸ் தன் கப்பற் படையை வாணிபத் துறைக்கு உபயோகப் படுத்தி உலகிலே மாபெரும் வியாபார ஸ்தலமாக மாறியது. ஏதென்ஸ் நகரமானது கிரேக்க நாட்டிற்குத் தலைவாசல் போல் அமைந்திருப்பதால், அந்நகரின் வழியாகத்தான் நாட்டின் பொருள்களெல்லாம் ஏசியா மைனர், போன்ற அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி யாக வேண்டும். வேற்று நாட்டுக் கப்பல்களும், வாணிபப் பொருள்களையும் வித விதமான கலாசாரங்களையும் மதங்களையும் கருத்துகளையும் கொண்டுவந்து ஏதென்ஸ் நகரில் இறக்கின.



**கிரீஸ்**

மதத் தர்க்கங்களும் நூற்றுக்கணக்கான மத நம்பிக்கைகளும் ஒரு சிறு நாட்டில் மோதும்போது எந்த மதத்திலும் நம்பிக்கை ஏற்படாமல் நாஸ்திகம் வளர்வதற்கு இடமுண்டு. கப்பல் வியாபாரிகள் எதையும் சுலபத்தில் நம்ப மாட்டார்களாகையால் ஏதென்ஸ் நகரிலுள்ள சமயவாதிகளை முட்டாள்களென்றோ, வேஷதாரிகளென்றோ நினைத்தார்கள். பல்வேறு நாட்டு விஞ்ஞான முறைகளையும் வளர்த்தார்கள். நாணயப் பரிவர்த்தனைகளின் பெருக்கத்தினுல் கணித சாஸ்திரம் வளர்ந்தது. கப்பல் யாத்திரைகளின் மும்மரத்தினுல் வானசாஸ்திரம் வளர்ந்தது. செல்வத்தின் பெருக்கத்தால் ஓய்வும் நிம்மதியும் ஏற்பட்டு அண்ட பிரும்மாண்டங்களையும், ஆத்மாவையும், கடவுளையும் ஆராயும் தத்துவ சாஸ்திரம் வளர்ந்தது. இடி மின்னல், பூகம்பங்கள் போன்ற இயற்கை விளைவுகளை அதீத சக்திகளின் விளைவுகள் என்றும் கடவுளின் குரல்கள் என்றும் புராதன தர்மம் மூட நம்பிக்கைகளை வற்புறுத்தி வந்ததற்கு மாருக, அவற்றை விஞ்ஞான ரீதியாகச் சிலர் துணிந்து ஆராயத் தொடங்கினுர்கள். எந்த மதச் சடங்குகளையும் பற்றித் துணிந்து கேள்விகள் கேட்கத் தொடங்கினுர்கள். மாய மந்திரங்களும், வைதீகர்களின் தந்திரங்களும், மதச் சடங்குகளும் வலுக்குறையத் தொடங்கின. இத்தகைய புதிய சிந்தனைகளைத் தடுக்கவேண்டும் என்ற ஆத்திரத்தினுல்தான் புராதன தர்மம் துள்ளியெழுந்து சாக்ரடீஸை நாத்திகன் என்று குற்றம் சாட்டிப் பழி தீர்த்தது. அதைக் கண்டு ஆத்திரமுற்ற அவருடைய

மாணுக்கன் பிளேட்டோவோ, அந்தக் கொலை பாதகத்திற்கு இடங் கொடுத்த அரசியலமைப்பையே யொழித்துவிட்டு ஒரு புது அரசிய லுக்கு வழிகாண வேண்டுமென்று சிந்தித்தான்.

அரசியல் அமைப்பைப் பற்றிக் கிரேக்க நாட்டில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருந்தன. ஒரு சாரார் சமதர்மவாதிகள்; இன்னொரு சாரார் வகுப்புவாதிகள்.

"இயற்கை நல்லது; இயற்கையின் பிரகாரம் எல்லா மனிதர் களும் சமம்; வகுப்புவாத மதங்களால்தான் மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன; எளியவர்களையும் பலஹீன மானவர்களையும் பெருவாரியான மக்களையும் அடக்கியாள ஒரு சில வலியவர்கள் கண்டுபிடித்ததுதான், சட்டம், சம்பிரதாயம் என் பவைகளெல்லாம்" என்று நவீன காலத்து ரூஸோவைப்போல ஒரு சாரார் சமதர்மம் பேசினர்கள். இன்னொரு சாராரோ, 'இயற்கை என்பது நல்லதுக்கும் கெட்டதுக்கும் அப்பாற்பட்டது. அதீதமானது; இயற்கையின் படைப்பில் எல்லா மனிதர்களும் சமமானவர்களல்லர்; ஏற்றத் தாழ்வுகள் பிறவியின் அமைப்பு; வலியவர்களின் சக்தியைக் கட்டுப்படுத்தி ஒடுக்க, எளியவர்கள் கண்டுபிடித்ததுதான் நேர்மை, நீதி, மனித தர்மம் என்பதெல்லாம்; அசக்தியின் விளைவே சமதர்ம ஆசை; வலிமைதான் அதீததர்மம்; மனிதனின் இயற்கை லட்சியம்; எளியவர்களை வலியவர்கள் அடக்கியாள்வதே சரியான தர்மம்; பலஹீனமான பெருவாரி மக்களை ஒரு சில புத்திசாலிகள் அடக்கியாளுவதே பலவிதமான அரசியலமைப்புகளிலும் தலை சிறந்தது' என்று ஞானி நீட்ஷி யையும் சாணக்கியரையும் போல வாதித்தார்கள்.

நாட்டின் புராதன நம்பிக்கைகளும் மூட பயபக்தியும் நவீன விஞ்ஞானக் கருத்துகளால் நசித்துவிட்டன. நெடும் போர்களினல் நாட்டின் சக்தியும் ஜனங்களின் பண்பும் குன்றிவிட்டன. பழைய கடவுளர்கள் மீதும், தேவதைகள் மீதும், வாலிபர்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது. ஆத்மீகத் தத்துவங்களிலோ குழப்பம். பகுத்தறிவுவாதிகளோ, மூட நம்பிக்கைகளையும் மதச் சடங்குகளையும் அரசியலையும் நையாண்டி செய்யுமளவோடு நின்றுவிட்டார்கள். படிப்பற்ற பாமர ஜனங்களோ சிந்தனைத் தெளிவு இல்லாதவர்களாயிருந்தார்கள்; குடியாட்சி முறையோ அபத்தமாகவும் குழப்பமாகவும் அதிகார வெறி கொண்டதுமாக இருந்தது. ஜனக் கும்பலோ ஆட்டு மந்தைபோல் ஒருவன் கூவி யதும் சேர்ந்து கூச்சலிடும்; அவசரத்திலும் உணர்ச்சிவசத்திலும் எதையாவது செய்துவிட்டுப் பின்னர் வருந்தும். மனிதர்கள் தனியாக இருப்பதைவிடக் கும்பலில் சேரும்போது மிகவும் உணர்ச்சிகரமாகவும், மூர்க்கமாகவும், முட்டாள்தனமாகவும் மாறி ஆத்திரப்பட்டு அவசரத்தில் நிதானம் தவறி நடந்துகொள்வ தில்லையா? பிரசங்கிகளின் வாய்ஜாலங்களுக்குப் பாமரஜனங்கள்

எளிதில் இரையாகி விடுவதில்லையா? ஜனங்களுக்குப் பண்பாடும் சிந்தனைத் தெளிவும் ஏற்படும் வரை குடியாட்சியால் பயனில்லை. அரசியல் நிர்வாகம் என்பது விவேகிகளாலும் நிதான புத்தியுள்ளவர்களாலும் நடத்தப்பட வேண்டும். சிந்தனை இல்லாத இடத்தில் குழப்பந்தான் மிஞ்சும். ஆகவே, 'உன்னை அறி. சிந்தி! சிந்தி!' என்று ஞானி சாக்ரடீஸ் போதனை செய்தார். தனி மனிதனின் தீர்க்க சிந்தனையும் விவேகமும் பண்பாடும் வளர்ந்தால் சமுதாயத்தில் அமைதியும் ஒழுங்கும் ஒற்றுமையும் ஏற்படும் என அவர் கனவு கண்டார். ஆனால் புராதன தர்மமும் குடியாட்சியும் விவேகமற்ற ஜனக் கும்பலும் பதற்றத்தில் அவரது 'சிந்தனை உரிமையைப்' பறித்து அவரை நாஸ்திகன் எனக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றுவிட்டது.

ஒழுக்க வரம்பும் கட்டுப்பாடும் குறையவே ஒவ்வொரு மனிதனும் இஷ்டப்படியெல்லாம் அனுபவித்துத் திரிந்தாலென்னவென்று நினைத்தான். ஏதென்ஸ் நகரின் விசித்திரமான குடியாட்சி முறையானது மனிதனின் 'தனித்துவத்தைப்' பெருக்கி அகம்பாவத்தை உண்டாக்கியது. எளிதில் உணர்ச்சி வெறிக்கு ஆளாகும் குடிமக்களைக் கொண்ட குடியாட்சி அரசாங்கம்; சர்வ சக்தி படைத்த நீதிமன்றத்துக்குப் பாமர ஜனங்களிலிருந்து அங்கத்தினர்களை, பெயர்களின் முதல் எழுத்துக்களின் மூலம் பொறுக்கியெடுக்கும் விசித்திரமான தேர்தல் முறை, சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரசங்கக் கட்சிகள், இஷ்டப்படியெல்லாம் அதிகாரிகளையும் தளபதிகளையும் நியமித்தும் நீக்கியும் கொலைத் தண்டனை விதித்தும் வரும் அதிகாரப் போக்கு,—இவையெல்லாம் எவ்வளவு அபத்தமானவை? எவ்வளவு ஆபத்தானவை? இவற்றிலிருந்து தேசத்தை எவ்வாறு காப்பது? தனி மனிதனின் பண்பை வளர்ப்பது எப்படி? நல்ல அரசியல் எது? பண்பு என்றால் என்ன?......

இந்த விசித்திரமான நகரந்தான் பிளேட்டோ பிறந்த உலகம்! அதன் நாகரிகமே அஸ்திவாரத்தோடு கலகலத்து விட்ட பிறகு, அதைச் செப்பனிட்டு மறுபடி நிறுவுவதுதான் அவன் வேலை!

**பிறந்த குடும்பம்:** பரம்பரையாகச் செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தான் பிளேட்டோ பிறக்கும் போதே ஒரு பெரிய மனிதனாகப் பிறந்தான்! அதனால் செல்வத்தையும் செல்வாக்கையும் கண்டு பிரமிப்போ, பக்தி ஈடுபாடோ கொள்ளாமல் அவற்றை அலட்சியமாகவும் விளையாட்டாகவும் கருதும் மனப்பான்மை இயற்கையாகவே அவனுக்கு வாய்த்திருந்தது. அவன்தான் பெற்றோர்களுக்குக் கடைசிக் குமாரனாகையால், செல்லப்பிள்ளையாக வளர்ந்து சுயேச்சைப் போக்குள்ளவனுமிருந்தான். அவனைப் பெற்ற தந்தையின் பெயர் அரிஸ்டோன்; பெற்ற தாயின் பெயர் பெரிக்ட்டியோனி. பிளேட்டோவுக்கு முன்னால் உடன் பிறந்த சகோதரர்கள் இருவர்; சகோதரி

ஒருத்தி. கிளாக்கோன், அடீமாண்ட்டஸ் என்பவை சகோதரர் களின்பெயர்கள். தமக்கையின் பெயர் போட்டோனி. அவளுடைய மகனுன ஸப்பூசிப்பஸ் என்பவனே பிளேட்டோவுக்குப் பின் பிளேட்டோ நிறுவிய கலைக் கல்லூரிக்குத் தலைமை அதிகாரி யானவன். 'ஒரு சிலபணக்காரர்களின் ராஜீயப் புரட்சி' ஏற்பட்ட போது அதற்குத் தலைமை தாங்கிய கிரிட்டியாஸ் என்பவன் பிளேட்டோவுக்கு நெருங்கிய உறவினன். இவ்வாறு அரசியல் அந்தஸ்து வாய்ந்த குடும்பத்தில் பெரிய மனிதனுகப் பிறந்தது போலவே, கலைச் செழிப்புள்ள மாளிகையில் கலைஞனுகவும் வளர்ந்தான். 'பிளேட்டோ' எனும் புனை பெயரும் பெற்ருன்.

'பிளேட்டோ' என்ருல் கிரேக்க மொழியில் 'விசாலம்' என்று பொருள். அழகிகள் கண்டு மயங்கக்கூடிய அவனது 'விசால மான தோள்'களைக் கண்டோ, இன்றைய அறிவாளிகளும் மலைக்கக்கூடிய அவனது 'விசாலமான அறிவை' நினைத்தோ! அவனுக்குப் பிளேட்டோ என்ற புனைபெயர் ஏற்பட்டுவிட்டது, அவனது இயற்பெயர் அரிஸ்டோக்கிளீஸ். இளமையில் குஸ்திப் பயில்வானுக விளங்கியது போலவே, பெலொப்பொனெஸிய யுத்தத்தில் கலந்து தேசத்துக்காக ராணுவ சேவை செய்து வீர சன்மானம் பெற்றது போலவே, இருபது வயதாவதற்குள் ஏராள மான சோக நாடகங்களும் சாரல் கவிதைகளும் எழுதினுன். ஆனுல் சாக்ரடீஸின் சிந்தனைத் தொடர்பு ஏற்பட்டபிறகு அவற் றையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டான். வாலிபக் குருத்தின் ஆரம்ப தசையில், அரசியலில் ஈடுபட வேண்டுமென்பது அவனு டைய பேராவல். ஆனுல் முட்டாள் கூட்டம் அட்டகாசம்செய்யும் அரசியல் துறையில் சுயநலமிகளுக்குத்தான் இடமுண்டே தவிர, புத்தியுள்ள எவனுக்கும் இடமில்லை என்று அனுபவப்பட்டு அரசாங்கத்தை விட்டே ஒதுங்கி அரசியல் சிந்தனையாளனுக மாறி விட்டான்.

**அனுபவங்கள்:** ஏதென்ஸ் நகரிலுள்ள சில செல்வர்களும் சிறுபான்மையினரும், பெருமக்களின் குடியாட்சிக்கு எதிராகக் கிளம்பி, 'சிலர் ஆட்சிக் கட்சி' (Oligarchical Party) என்று தங்களை அழைத்துக்கொண்டு, 'குடியாட்சி நபுஞ்சகமானது; ஆளத் தகுதியும் திறமையுமற்றது;' என்று நிந்தித்தார்கள். உண்மை யாகப் பார்க்கப்போனுல் ஏதென்ஸ் ராஜ்யத்தில் இருந்தது பெய ரளவில்தான் குடியாட்சி. ஏனெனில் அங்குள்ள 400,000 ஜனங்க ளில்250,000 நபர்கள் அடிமைகள். எஞ்சியுள்ள 150,000 சுதந்திர நபர்களிலும், சர்வ வல்லமை படைத்த பூலி (Boule) என்னும் பொதுஜன ராஜாங்க மேல் சபையில் அங்கவ கிப்போர் சுமார் 500 அங்கத்தினர்கள்தாம். இந்த அங்கத்தினர்களைப் பொறுக்கி யெடுக்கும் முறையோ மிகவும் விசித்திரமானது. சுதந்திரப் பிரஜைகளின் பெயர்களுக்கு அகர வரிசையில் ஒரு பட்டியல் தயாரித்து ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு முதல் எழுத்துள்ள

பெயர்களை வரிசைக் கிரமமாகப் பொறுக்கி அவர்கள்தாம் அங்கத்தினர்கள் என்பார்கள்! வேறு, தேர்தல் முறையோ, எல்லோருக்கும் சம சந்தர்ப்பமோ கிடையாது! 'இதைவிட அபத்தமான, இதைவிட விசித்திரமான ஜனநாயகமுள்ள அரசியல் அமைப்பு வேறெதுவுமில்லை' யென்று 'சிலர் ஆட்சிக் கட்சியினர்' எதிர்த்தனர்.

ஸ்பார்ட்டா ராஜ்யத்து யுத்தத்தில் ஏதென்ஸின் கப்பற்படை முறியடிக்கப்பட்டபோது, நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததென 'சிலர் ஆட்சிக் கட்சியினர்' ஒன்று திரண்டு கிரிட்டியாஸ் என்பவன் தலைமையில் கிளம்பி, 'ஏதென்ஸின் குடியாட்சி போர்முனையில் மட்டுமல்ல, நிர்வாகத்திலும் மிக ஆண்மையற்றது, மிக அசமந்த மானது' என்று சுட்டிக்காட்டி ஸ்பார்ட்டா ராஜ்யத்தின் 'பிர புக்கள் ஆட்சியைப்' புகழ்ந்து, பேசினர். ஏதென்ஸ் ராஜ்யம் அடியோடு ஸ்பார்ட்டா ராஜ்யத்தின் முன் படுதோல்வி யடைந் ததும், 'சிலர் ஆட்சிக்கட்சியின்' தலைவனை கிரிட்டியாஸ் துள்ளி யெழுந்து ஏதென்ஸை ஆளும் குடியாட்சிக்கு எதிராக 'ஒரு சில பணக்காரர்களின்' புரட்சியை எழுப்பினான். பணக்காரர்களின் புரட்சிக் குறி தவறிப் படுதோல்வியடைந்தது; கிரிட்டியாஸ் போர்க்களத்திலே பிணமாக்கப்பட்டான்.

அந்தக் கிரிட்டியாஸ் என்ற 'சிலர் ஆட்சிக் கட்சி'த் தலைவன் ஞானி சாக்ரடீஸின் சிஷ்யர்களில் ஒருவன்; நம் பிளேட்டோவின் உறவினன்.

அரசியல் புருஷனைத் திகழவேண்டுமென்ற இளமைக் கனவுக்கு மாறாகப் பிளேட்டோ, அதிகாரப் பதவிகளை வெறுத்துத் தத்துவ ஞானியாக மாறியதற்கு மேற்கூறிய புரட்சி ஒரு முக்கிய காரணமாகும்.

மேற்கூறிய செல்வரில் 'சிலர் ஆட்சிக்கட்சி' யிலுள்ள முப்பது அங்கத்தினர்களில் பெரும்பாலானவர் நம் பிளேட்டோவின் உறவினர்களும் நண்பர்களும் ஆவார்கள். கட்சித்தலைவன் கிரிட்டியாஸோ நம் பிளேட்டோவுக்கு நெருங்கிய உறவினன். உணர்ச்சி களைத் தவிர அறிவு வலிவற்ற 'குடியாட்சிக் கட்சி' ராஜாங்கத் திற்கு எதிராக அந்த அறிவாளர்கள் புரட்சிசெய்தபோது, அந்தஸ் துள்ள அறிஞன் என்ற முறையில் பிளேட்டோவையும் அதில் கலந்துகொள்ளுமாறு அறைகூவி அழைத்தார்கள். நாட்டில் அராஜகமும் அநீதிகளும் மிகுந்திருந்த அந்தச் சமயத்தில் இந்தப் புரட்சியானது 'அநீதி ராஜ்யத்திற்குப் பதிலாக நீதி நெறி ராஜ் யத்தை' அமைக்கும் என்று பிளேட்டோ நினைத்தான். அவர்களும் புரட்சி வெற்றிபெற்றதும் 'ஒரு சிலர் ஆட்சியால்' பொன்யுகம் தோன்றிவிடும் என்றுதான் சொன்னார்கள். ஆனால் அவர்கள் 'குடியாட்சியைச் சீர்திருத்துவார்கள்' என்று பிளேட்டோ எதிர் பார்த்ததற்கு மாறாக, 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட' கதை

யாக முடிந்ததைக் கண்டான். அக்கட்சியின் சுயரூபத்தையும் சுயநலத்தையும் கண்டபோது பிளேட்டோ அரசியல் துறைமீதே அளவற்ற வெறுப்படைந்தான். அப்புரட்சி முறியடிக்கப்பட்டதும் மறுபடி நிலைத்த குடியாட்சி ராஜாங்கம் மிதமாகவே இருந்தது. ஆனால் செல்வாக்குள்ள சிலரால் சாக்ரடீஸ் புராதன மத நம்பிக்கையற்றவர் என்ற குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டதும், குடியாட்சியின் அடிப்படை அரசியல் அமைப்பின்மீதே பிளேட்டோ அளவற்ற வெறுப்படைந்தான். ஆட்சி பீடத்தில் வந்து உட்காரும் அதிகாரிகளை நினைக்கும்போது, 'நேர்மையான மனச்சாட்சியுள்ளவனுக்கு' அரசியல் துறை ஏற்றதல்லவென்று ஒதுங்கிவிட்டான். ஆனால் நல்லதொரு அரசியல் முறை எதுவென உள்ளூரச் சிந்திக்கத் தொடங்கினான். அரசியலுக்குள் இருந்துகொண்டே அரசியலைச் சீர்திருத்த முடியாது என்று நம்பினான். எத்தகைய அரசியல் திட்டத்தில் மனிதன் நிம்மதியான நல்ல வாழ்க்கை நடத்த முடியும் என்ற கொள்கைகளை அரசியலுக்கு வெளியே இருந்துதான் தன் வாழ்நாள் முழுதும் ஆற அமரச் சிந்திக்கவேண்டுமென முடிவு கட்டினான்.

சாக்ரடீஸ் கொலைத் தண்டனை பெற்றபோது பிளேட்டோவுக்கு இருபத்தெட்டு வயதுதான் ஆயிற்று. அமைதியாக வாழ்ந்த தியாக புருஷரின் கோரமான சோக முடிவு மாணாக்கனின் நெஞ்சிலுள்ள ஒவ்வொரு அணுவிலும் அழியாச் சின்னமாகப் பதிந்துவிட்டது; ஏதென்ஸ் நகரின் குடியாட்சித் தேர்தல் முறை மீதும், உணர்ச்சி வெறிபிடித்த ஜனக் கும்பல் மீதும் அருவருப்பை மூட்டியது. ஏதென்ஸ் நகரின் குடியாட்சி முறையைச் சீர்திருத்தம் செய்து, விவேகிகளையும் நிதான அறிவு படைத்தவர்களையும் கொண்ட ஒரு புது ஆட்சி முறையை உண்டாக்க வேண்டுமென பிளேட்டோ நினைத்தான். ஆனால் அந்த அரசியல் திட்டத்தை எவ்வாறு தயாரிப்பது? விவேகிகளையும் சிறந்தவர்களையும் எப்படிச் சிருஷ்டி செய்வது, என்பதே அவனது வாழ்வின் ஒரே பிரச்னையாகிவிட்டது.

இதற்கிடையில் சாக்ரடீஸைச் சிறைச்சாலையிலிருந்து பிளேட்டோ காப்பாற்ற முயன்றான் என்று அரசாங்கம் சந்தேகித்தது. ஏதென்ஸ் நகரைவிட்டுத் தலை மறைந்து ஓடிவிடும்படி பிளேட்டோவின் நண்பர்கள் வற்புறுத்தினார்கள். உலக யாத்திரை செய்யவும், பல நாடுகளின் அரசியல் முறைகளைச் சுற்றிப் பார்க்கவும் இதுதான் சந்தர்ப்பம் என்று பிளேட்டோவும் நினைத்தான். ஆகவே, அந்த ஆண்டு கி. மு. 399-ல் ஏதென்ஸ் நகரைவிட்டு வெளியேறிச் சென்றான். எங்கெங்கு சென்றான் என நிச்சயப்படுத்துவதற்கில்லை; ஏனெனில், அதுபற்றிச் சரித்திர ஆசிரியர்களிடையே இன்னும் ஆராய்ச்சி யுத்தங்கள் முடிந்தபாடில்லை! பிளேட்டோ முதன் முதலில் எகிப்து தேசத்துக்கு விஜயம் செய்தானெனத்

தெரிகிறது. அங்குள்ள படித்த குருமார் ஜாதி நம் பிளேட்டோவை நோக்கி, 'உன் ஏதென்ஸ் ராஜ்யம் எந்தத் தெளிவான கலாசாரத்தையும் சமுதாயக் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்தாமல் இன்னும் குழந்தை ராஜ்யமாகவே இருக்கிறது!' என்று பரிகாசம் செய்யவே பிளேட்டோ திகைப்புண்டான். அங்குள்ள சிறுபான்மையான ஞான பண்டித ஜாதி, ராஜ்யத்தின் பெரும்பான்மையான விவசாயக் குடிகள்மீது ஆட்சி செலுத்துவதை மனதில் பதித்துக் கொண்டான். பிறகு சிஸிலிக்கும் இத்தாலிக்கும் சென்றான். அங்கு ஞானி பித்தகோரஸால் நிறுவப்பட்ட பண்டிதர் குழாம் தனி இனமாகப் பொதுவுடைமைக் கொள்கையுடன் வாழ்வதைக் கண்டான். தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று, பிறகு ஜூடியா நகருக்கும் சென்று அங்குள்ள ஞான பண்டிதர்களின் சோஷலிஸத்தையும் கற்றான். பரத கண்டத்தின் கங்கைக் கரைவரை வந்து ஹிந்துக்களின் ஆத்ம தியானங்களையும் வருணாசிரம தர்மத்தையுங் கூட ஆராய்ந்தான் எனவும் சொல்வதுண்டு. இவ்வாறு பன்னிரண்டு வருஷங்கள் பல தேசங்களிலும் சுற்றியலைந்தான். ஒவ்வொரு மூலையிலிருந்தும் அறிவைத் தேடினான். ஒவ்வொரு கோயில் வாசலிலும் ராஜ சபை வாசலிலும் நின்றான். ஒவ்வொரு மதத்தையும் ஒவ்வொரு நாட்டின் சமுதாயப் பண்பாடுகளையும் ஆராய்ந்தான். இத்தகைய யாத்திரை அனுபவங்களினால், 'தனி மனிதனின் ஆத்மா பண்படவேண்டும்; பெருவாரியான மக்களைப் பற்றற்ற அறிவாளர்களும் அரசியல் அனுபவ அறிவும் வாய்ந்தவர்களே ஏதாவதொரு குடியரசு முறையில் அரசாளவேண்டும்' என்ற அவனது சித்தாந்தம் வலியூன்றியது.

---

மறுபடியும் பிளேட்டோ தன் தாய் நாடான ஏதென்ஸ் நகருக்கு கி. மு. 387-ல் திரும்பி வந்தபோது, அவனுக்கு வயது நாற்பது. இளமையின் உற்சாகம் சிறிது குறைந்திருந்தாலும், வயசின் வறட்டுவாதமும் பரம்பரைப் பித்தும் நிறைந்துவிடவில்லை. பரந்த உலக அனுபவங்களினால் அவன் அறிவு இன்னும் கூர்மையாகவே தீட்டப்பட்டிருந்தது. எதையும் தீர்க்கமாக ஊடுருவிப் பார்த்து, மனித மனங்களின் போக்குக்குக் குறிப்பிட்ட சிந்தனைகள் வருங்காலத்திலும் நிலைத்து நிற்குமா என்று எடைபோடும் பகுத்தறிவுச் சக்தியும் பெருகியிருந்தது.

அவனுடைய யாத்திரை அனுபவங்களினால், 'தனி மனிதனின் பண்பாடு வளரப் படிப்பும் தத்துவ சிந்தனையும் தேவை; பெருவாரியான பாமர மக்களை அரசாள அரசியல் படிப்புத் தேவை. அதுவே குடியரசு முறையில் கட்டி ஆளும் சரியான அரசியல் வழி.' என்ற அவனது சித்தாந்தம் வலுப்பெற்றது.

**கலைக்கழகம் :**

உண்மையான தத்துவ ஞானத்தின் மூலந்தான் தனி மனிதனுக்கும் ராஜ்யத்திற்கும் உண்மையான நல்வழியும் நீதியும் கிடைக்குமென பிளேட்டோ கருதினான். அவனே தன் வாயால் சொல்லுகிறான்: "மெய்யறிவாளர்கள் அரசியல் நிர்வாகத்தை

அடையவேண்டும். அல்லது அரசியல் வாதிகள் ஏதாவதொரு அற்புதத்தினுல் மெய்யறிவாளர்களாக மாறவேண்டும். அதுவரை மனித ஜாதியானது தீமைகளிலிருந்து விடுதலை காணுது!'' ஆனுல் ஏதென்ஸ் நகரின் குடியாட்சியிலோ புராதன தர்ம விஷமிகளும் அதிகார வெறியர்களும் அந்த 'அற்புதம்', நடக்க இடங்கொடுக்கக் கூடியவர்களாகத் தோன்றுததனுல், நம் பிளேட்டோ ஒதுங்கி நின்று தன் அரசியல் சமுதாய சிந்தனைகளை நூல்கள் வடிவாக்கி வருங்காலச் சமுதாயத்திற்காக வழங்கிவிட்டுப் போகவும் அதற் கேற்றபடி மாணவர்களைத் தயாரிக்கவும் முனைந்தான். அதற்காக ஏதென்ஸ் நகரில் ஒரு மாளிகையையும் பூந்தோட்டத்தையும் விலைக்கு வாங்கி, 'அகடெமி' என்னும் ஒரு வித்தியாபீடம் அமைத்து, அங்கு தன் சிந்தனைகளைப் போதிப்பதின் மூலம் தன் வாழ்நாளை யெல்லாம் கழித்தான். அந்த வித்தியாலயத்தை விஞ்ஞானக் கல்விக்கே பயன்படுத்த வேண்டுமெனவும் உயில் எழுதிவைத்தான். அதன்மூலம் அரசியலுக்கும் சமுதாயத்திற்கும் தேவையான மனிதர்களைப் பயிற்றுவிப்பதும் உற்பத்தி செய்து அனுப்புவதுந்தான் அக் கலைக் கழகத்தின் முக்கிய நோக்கம். அதுதான் உலகத்தின் முதல் சர்வகலாசாலையாகவும் வெகுகாலம் நீடித்து நின்ற கல்லூரியாகவும் விளங்குகிறது. கி. மு. 380-ல் ஸ்தாபிக்கப்பட்ட அக் கல்லூரிக்கு கி. பி. 529-ல் தான் சக்கிர வர்த்தி ஜெஸ்டினியனுல் மூடுவிழா செய்யப்பட்டது!

கி. மு. நான்காம் நூற்றுண்டில் கணித சாஸ்திரமும் வான சாஸ்திரமும் வளர்ந்தோங்கியதற்குக் காரணம் அக் கல்லூரி உறுப்பினர்களின் அரிய ஆராய்ச்சித் தொண்டே ஆகும். பின்னுல் அலெக்ஸாந்தருக்குப் பேராசிரியனுகவும் உலகம் வியக்கும் ஞானி யாகவும் விளங்கிய அரிஸ்டாடில் அக் கலைக் கல்லூரியில் பிளேட் டோவின் சிஷ்யனுகக் கல்வி பயின்றவனே!

கலைக் கல்லூரி நிறுவி இருபது வருஷங்கள் ஓடிவிட்டன. அந்தக் கல்லூரியிலே, இளைஞர்களின் மத்தியிலே வருங்காலச் சமுதாயச் சிற்பியாக விளங்கிய பிளேட்டோ அறுபது வயதுக் கிழவராகிவிட்டார். அறிஞர் பிளேட்டோவின் புகழ் கிரீஸுக்கு அப்பாலும் பல நாடுகளில் பரவியது. ஆனுலும் அவர் தம் எளிய தோற்றத்தைக் கைவிடவில்லை. அதற்கு உதாரணமாக ஒரு சம்பவமும் சொல்லப்படுகிறது. அவர் ஒரு நாள் ஒலிம்பியாவில் நடைபெறும் விளையாட்டுகளைக் காணச் சென்றிருந்தார். அப் போது அவர் சில அந்நியர்களுடன் ஒரே இடத்தில் ஒன்ருக இருந்து உண்டு மகிழ்ந்து பொழுதைக் கழிக்க வேண்டியிருந்தது. அவர் தாம் தான் புகழ்பெற்ற பிளேட்டோ என்று காட்டிக் கொள்ளாமலே சர்வ சாமானியரைப் போலப் பேசிப் பழகி எளிய நடையுடை பாவனைகளுடன் விளங்கினர். ஒலிம்பியாவில் விளையாட்டுகள் முடிந்து ஏதென்ஸுக்குத் திரும்பும்போது அவ் வந்நியர்களும் அவருடனேயே வந்து, "சாக்ரடீஸின் மாணுக்க ரான தத்துவ ஞானி பிளேட்டோவைப் பார்க்கத்தான் கலைக்

கழகத்திற்கு வந்தோம்! உடனே அழைத்துப் போய்க் காட்டுங்கள்! தூரத்திலிருந்து தரிசித்தாலும் போதும்! எங்களுக்கு அவரைப் பார்க்க ஆசை!" என்ருர்கள். பிளேட்டோ அவர்களைக் கலைக் கழகத்திற்குள் அழைத்துப்போய் ஒரு புன்முறுவலுடன், "நான்தான் பிளேட்டோ!" என்ருர். எளிய தோற்றத்தில் மறைந்துள்ள மேதையை முன்பே கண்டுகொள்ளாமல் போனேமே என்று அவர்கள் வியந்தார்கள்!

கல்லூரியிலே இளைஞர்களின் மத்தியிலே, புதிய அரசியலைக் களவு கண்டவராய் பிளேட்டோ அறுபத்தைந்து வயதுக் கிழவராகிவிட்டார். ஏழைகளைப் பணக்காரர்கள் சுரண்டாமல் எல்லோரும் இன்புற்றிருக்கக்கூடிய ஓர் அரசியலமைப்பைக் கனவு கண்டு, அந்த லட்சிய ராஜ்யத்தில் ஆளுவோர் அதிகாரங்களைச் சுயநலத்திற்கு உபயோகப் படுத்தாமல் பற்றற்றவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காக, ஆளுவோருடைய சொத்து சுகங்கள் மனைவி மக்களை யெல்லாம் பொதுவுடமைகளாக்கிவிட வேண்டு மென்று கடும் நிபந்தனையும் விதித்தார். அதுதான் குடியரசு நூல். அந்த 'இலட்சிய ராஜ்ய'க் கனவை இந்தப் பூலோகத்தில் ஒரு முறை பரீட்சித்துப் பார்த்துவிட பிளேட்டோவிற்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது! அவர் தாய் நாடான ஏதென்ஸ் நகரில் அல்ல! அந்நிய நாட்டைச் சேர்ந்த சிராக்கூஸ் நகர் மன்னனிடமிருந்து அறிஞர் பிளேட்டோவுக்கு அழைப்பு வந்தது. சிசிலி நாட்டின் தலைநகரரக விளங்கிய சிராக்கூஸ் பட்டினம் அந்தக் காலத்தில் வலிமை பொருந்திய ராஜ்யமாக விளங்கியது. அந் நகரத்து மன்னனை இளைய டையோனியஸ் என்பவன் வாலிபன்; ஸ்திரீ லோலன்; குடிகாரன்; கோழை; அதோடு முட்டாள்; வெகுளித்தனமான முட்டாளல்ல, விநயமான முட்டாள். அவனுடைய போக்கால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டது. அவனுடைய தாய் மாமனை டியோன் அரசியல் ஆலோசகராகப் பிளேட்டோவை வரவழைக்க விரும்பினன். ஏதென்ஸ் ராஜ்யத்துக்கும் சிராக்கூஸ் ராஜ்யத்துக்கும் நெடுநாள் பகையிருந்தாலும், 'ஏழைகளும் புரட்சி செய்யாமல் இன்புற்று வாழும்படியான ஒரு லட்சிய ராஜ்யத்துக்குப் பிளேட்டோ அருமையானதொரு அரசியல் திட்டம் கண்டுபிடித்திருக்கிருர்' என்பதைக் கேள்விப்பட்ட டையோனியஸ் மன்னன் உடனே பிளேட்டோவைப் புறப்பட்டு வந்து முதலில் 'தன் ராஜ்யத்தை இலட்சிய ராஜ்யமாக்கும்படி' கேட்டுக் கொண்டான்.

பிளேட்டோ முதலில் தயங்கினர்; ஆனல் நண்பர்கள் விடவில்லை; அரசனிடமிருந்து அழைப்புகளும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து கொண்டிருந்தன.

பெருவாரியான மனிதக் கும்பலுக்குத் தம் 'இலட்சிய ராஜ்யத்தை' உபதேசம் செய்வதைவிடத் தனியொரு மனிதனை ராஜாவுக்கு அதைக் கற்பிப்பது வெகு சுலபம் என்று நினைத்து

பிளேட்டோ ஆவலுடன் அப்பட்டினத்திற்குச் சென்றார். அவரைக் கண்ட மன்னர் பிரான் தன் ராஜ்யத்தை 'இலட்சிய ராஜ்யமாக்'கப் போகும் மாபெரும் ராஜதந்திரி வந்திருக்கிறார் எனப் பிளேட்டோவை ஆடம்பரமாக வரவேற்றுத் தன் அரண்மனையிலே யாருக்கும் கொடுக்காத அந்தஸ்தான அழகிய பூங்காவை அவருக்கு ஜாகையாகக் கொடுத்தான். ஆனால் அவரைக் கண்டு அரசனின் ராஜப் பிரமுகர்கள் முணு முணுத்தார்கள். 'சொந்தத் திறமையாலே படிப்படியாக முன்னேறி வந்தவர்களைத் தான் அதிகாரிகளாக்க வேண்டும்' என்று கூறும் பிளேட்டோவின் வருகையால், தங்கள் அந்தஸ்து படிப்படியாகக் குறைந்து விடுமோ என்று சூழ்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

பிளேட்டோ வந்ததும் வராததுமாகத் தம் 'இலட்சி'யத்தைத் திறந்து காட்டிவிடாமல் முதலில் அரசனின் மனதைச் செப்பனிட வேண்டுமென்று அறிவுரைகள் சொன்னார். அரசன் கொடுங்கோலன் என ஜனங்களால் வெறுக்கப்படாமல் தேசத்தின் தந்தையென விரும்பப்படவேண்டும்; அதில்தான் அரசனுக்கு உண்மையான ஆனந்தம் இருக்கிறது!' என்று பிளேட்டோ 'அந்தக் கொடுங்கோலனுக்குப் போதித்தார். அந்தப் போதனைகள் ஓரளவு பலனளிக்காமலும் போகவில்லை! பிளேட்டோ ராஜ வாத்தியாராக வந்து சேர்ந்த சில நாட்களுக்குள் ஒருநாள் அரண்மனையில் ஆண்டுவிழாக் கொண்டாடி அரசனை நீடூழி வாழ்த்தும் கட்டம் வந்தது. கட்டியக்காரனொருவன் புராதன வழக்கப்படி, "சர்வாதிகாரத்தைக் கடவுளர் ஆதரிக்க விரும்புவார்களாக; சர்வாதிகார மன்னரை நீடூழி வாழச் செய்வார்களாக!" என்று வாழ்த்தினான். அந்தச்சமயம் அதைத் தூரத்திலிருந்து காது கொடுத்துக்கேட்ட இளம் சர்வாதிகாரி அந்தக் கட்டியக்காரனை நோக்கி, உரத்த குரலில், "என்னைச் சபிப்பதை இன்னும் நிறுத்தமாட்டாயா?" என்று சிரித்துக்கொண்டே கத்தினான். பிளேட்டோ வாத்தியாராக வந்துசேர்ந்த சில நாட்களுக்குள் மன்னவரின் மனம் இப்படி மாறிப் போய்விட்டதே, இன்னும் சிலநாளானால் இன்னும் என்ன ஆகுமோ என்று அங்கிருந்த சுய நலமிகளான மதி மந்திரிகளெல்லாம் பொச்சரிப்புக் கொண்டார்கள். அதோடு, 'அரசாங்கத்திற்கு உண்மையான பாதுகாப்பு பிரஜைகளின் அன்பே தவிர, அரசனின் மெய்க் காவற் படையல்ல' என்று உபதேசித்து, அநாவசியச் சம்பளம் வாங்கிவந்த பெருந்தொகைக் காவற்படையினரைக் குறைத்தும் விட்டார். அதனால் அரண்மனையிலிருந்த மெய்க்காவற் படையினரெல்லாம் பிளேட்டோவை வீழ்த்த விரும்பினர்.

மதி மந்திரிகள் மதியற்ற மன்னனிடம் சென்று, "உன் தாய் மாமன் டியோன் உன் ராஜ்யத்தைக் கவர விரும்புகிறான். அதனால்தான் ஏதென்ஸ் நாட்டவரான பிளேட்டோவை இங்கு வரவழைத்திருக்கிறான். முதலில் உன் மெய்க் காவற் படையைக் குறைத்து உன்னை வலுவற்றவனாக்குவது முதல் தந்திரம்! நம் சிராக்கூஸ் நகரைப் பெரும் கப்பற் படையாலும் காலாட்

படையாலும் கைப்பற்ற முடியாத ஏதென்ஸ் ராஜ்யம் ஒரேயொரு தத்துவ ஞானியை அனுப்பிச் சீரழிக்க விரும்புகிறது' என்று சொல்லி மன்னனின் மூளையைக் குழப்பினார்கள்; மக்களின் மூளையையும் குழப்பினார்கள்.

மன்னன் தன் மாமன் டியோனை நாடு கடத்தினான். பிளேட்டோ அதைக் கண்டித்தார். ஆனால் மன்னன் செவி சாய்க்கவில்லை. மனசுக்குள் பகை முற்றி வந்தது.

ஒரு நாள் பிளேட்டோவின் நண்பர்களில் ஒருவனான ஹெலிக்கோன் என்பான் என்ன காரணத்தாலோ, இன்ன நாளில் இன்ன நேரத்தில் சூரிய கிரகணம்வரும் என்று சொன்னான். அது தற்செயலாக அதே நேரத்தில் நிறைவேறிவிடவே அவனைத் தெய்வீக புருஷர் என்று மன்னன் போற்றி வியந்து ஆயிரம் பொன் நாணயங்கள் பரிசளித்தான். அப்போது அங்கிருந்த அரிஸ்டிப்பஸ் என்பவன் விளையாட்டாக, "நண்பர்களாயிருக்கும் பிளேட்டோவும் மன்னனும் விரைவில் பகைவராவார்கள் என வருங்காலம் கூறுகின்றேன்!" என்றான். உடனே மன்னன் பழி தீர்த்துக் கொள்ள விரும்பினான். ஆனால் அதற்குள் பிளேட்டோவின் இலட்சிய ராஜ்யத் திட்டத்தை அறிந்து கொண்டுவிட வேண்டும் என்பது அவன் ஆவல்.

ஆனால் பிளேட்டோவின் அரசியல் உபதேசங்களைக் கேட்கக் கேட்க மன்னனுக்கு மாபெரும் எரிச்சல்தான் பொங்கியது.

பிளேட்டோவின் அரசியல் திட்டப்படி தன் சொந்த ராஜ்யத்தில் தான் தொடர்ந்து ராஜாவாக இருக்கவேண்டுமென்றால் ஒன்று தான் தத்துவ ஞானியாகித் தன் மனைவி மக்களை ஆளும் வகுப்பினருக்குப் பொதுவுடமைகளாக்கிவிட வேண்டும்; அல்லது தன் ராஜ பதவியை விட்டு விலகிச் சாமானியத் தொழிலாளியாகவேண்டும்! இதை மன்னனால் சகிக்கமுடியவில்லை; காது கொடுத்துக் கேட்டதிலே கடுஞ்சினம் உண்டாகிவிட்டது.

மறுகணமே பிளேட்டோவைப் பிடித்துத் தன் மெய்க்காவற் படையினரிடம் ஒப்படைத்து அடிமைச் சந்தையில் ஏலங்கூறி விற்று விட்டான்! அடிமைச் சந்தையில் ஏலப் பொருளாக்கப்பட்ட பிளேட்டோவை மீட்பதற்கு ஏதென்ஸ் நகரில் பணம் திரட்டும் முயற்சி நடைபெற்றது. ஆனால் எவரும் ஒரு காசும் தர முன் வரவில்லை. தத்துவ ஞானிக்கு உதவிசெய்ய வேறு எவனையாவது ஒரு முட்டாளைத் தேடும்படி ஏளனமும் செய்தார்கள். கடைசியில் பிளேட்டோவின் அருமைத்தோழனும் சிஷ்யனுமான அன்னெனசெரிஸ் என்பவன்தான் பிளேட்டோவை விடுதலை செய்ய முன் வந்து அடிமைச் சந்தையில் பிளேட்டோவை ஏலமெடுத்துத் தன் தாய் நாட்டிற்கு மீட்டுக்கொண்டுபோனான்!

**அந்திம காலம்:** பிளேட்டோவின் அந்திமகாலம் மிகவும் ஆனந்தமாயிருந்தது. அவருடைய ஒதுப்புறமான கலைக்கழகத்தில் பல மாணவர்கள் கல்வி பயின்றனர். பல மாணவர்கள் பிளேட்டோவின் சிந்தனைகளைப் பல நாடுகளுக்கும் எடுத்துச் சென்றனர். பல திசைகளிலும் சென்றனர். அவர்களுடைய வெற்றிகளும் கீர்த்தியும் தொலை தேசங்களிலெல்லாம் எங்கெங்கோ பிளேட்டோவின் புகழை நிலை நிறுத்தின. அப்போது பிளேட்டோவுக்கு எண்பது வயதாகிவிட்டது! படுகிழவராகி விட்டார்! ஆனால் எப்போதும் சுறு சுறுப்பாய்க் குழந்தைபோல் கல்லூரிக்குள் திரிந்துகொண்டிருப்பார். அங்கு பயிலும் மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் தம் இளமை எதிரொலிப்பதைக் கண்டு அக மகிழ்வார்.

கலைக் கழகத்தினுள் கோஷ்டி கோஷ்டியாக இருக்கும் மாணாக்கர்களிடம் தள்ளாடித் தள்ளாடி வந்து பலவிதப் பிரச்னைகளைக் கிளப்பி விடை சொல்லும்படி கேள்விகள் போட்டுவிட்டு இன்னொரு மாணவர் கோஷ்டியை நோக்கித் தள்ளாடித்தள்ளாடிச் செல்வார். மறுபடி சுற்றி வந்து தம் கேள்விகளுக்குரிய சரியான விடைகளை விளக்கிச் சொல்லுவார். இவ்வாறு அவருடைய நடையின் ஒவ்வொரு காலடியும், வாழ்வின் ஒவ்வொரு அணுவும், ஒவ்வொரு சிந்தனையும் ஒவ்வொரு ஆனந்தமும், அந்தக் கலைக் கழகத்திற்குள்ளே சுற்றிக் கொண்டிருந்தது. 'கற்றது கைம் மண் அளவு' என்பதுபோல் அந்தத் தள்ளாத வயதிலும் கற்றுக் கொண்டேயிருந்தார். உற்சாகமான இளைஞர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கவும், வழி காட்டவும் அவருக்குத் தள்ளாத வயதிலும் தனித்திறமை இருந்தது. மாணாக்கர்களின் அறிவுக் காதலை எண்ணி அவர்களிடம் உள்ளம் பறிகொடுத்தார். அவரைப் போலவே மாணாக்கர்களும் அவரை உயிருக்குயிராய் நேசித்தார்கள். அவர் மாணவர்களின் ஆருயிர்த் தோழராகவும், ஆசிரியராகவும், தத்துவ ஞானியாகவும், பகுத்தறிவாளராகவும், வழிகாட்டியாகவும் விளங்கினர். அந்தக் கலைக் கழகமே அவரின் வாழ்வுக் கூடமாகவும் அவரது ஒரே உலகமுமாகிவிட்டது. அந்தக் கலைக் கழகத்திற்குள்ளே எண்ணற்ற இளைஞர்களின் இதயங்களில் தம் இலட்சிய ராஜ்யம் உருவாகிறதென உள்ளம் பூரிப்பார். தம் அரசியல் கனவு என்றாவது ஒருநாள் நனவாகும் என்ற நம்பிக்கை அவருக்குப் பிறந்துவிட்டது!

அவருடைய வாழ்வுப் புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் கடைசிப் பக்கம்—

அன்று அவருடைய மாணாக்கர்களில் ஒருவனுக்குத்திருமணம். அவன் தன் திருமண விருந்திற்கு வாத்தியாரையும் வரும்படி ஆசையோடு கூப்பிட்டான். படுகிழவராகிவிட்ட பிளேட்டோ தம் எண்பது வயதின் அனுபவச் சுமைகளுடனும் ஆனந்த முகத்துடனும் மாணாக்கனின் திருமண விருந்துக்குச் சென்றார்.

திருமண உற்சாகத்தில் மூழ்கியிருக்கும் வாலிபத்தோழர்களோடு அவரும் ஒரு வாலிபனைப்போல் கலந்துகொண்டார். இரவும் வந்துவிட்டது. கலியாண வீட்டில் சிரிப்பு அடங்கவே இல்லை!

கிழவர் களைத்துப்போய் அந்த வீட்டின் ஒரு மூலையில் சென்று ஒரு குறிச்சியின்மீது கொஞ்சம் தூங்குவதற்காக அமர்ந்தார். கலியாண வீட்டின் உற்சாகம் தூக்கத்திலும் அவர் முகத்தில் பிரதி பலித்துக் கொண்டேயிருந்தது.

இரவு கழிந்து பொழுது விடிந்தது!

இரவுக் கேளிக்கைகள் முடிந்து மாணக்கர்கள் ஆவலுடன் தாங்கள் ஆசிரியரைத் தேடிக்கொண்டு வந்தார்கள். கலியாண வீட்டின் ஒரு மூலையில், நாற்காலியில் உட்கார்ந்தவாறு தூங்கும் வாத்தியாரைத் தட்டி யெழுப்ப முயன்றார்கள்! ஆனால்...

அவர் சிறு தூக்கத்திலிருந்து மீளா நித்திரையில் ஆழ்ந்து விட்டார் என்பதைக் கண்டார்கள்! இரவிலேயே, நாற்காலியில் உட்கார்ந்தபடியே, யாரிடமும் விடைபெற்றுக் கொள்ளாமலே, அவர் நிம்மதியாக இறந்துவிட்டார்!

மாணக்கரின் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருகியது ஈமச் சடங்கில் அவரது சடலத்தைப் பின்பற்றி ஏதென்ஸ் நகரம் முழுதும் புதைகுழிக்குச் சென்றது. அவரது சிந்தனைகளைப் பின்பற்றி எண்ணற்ற வாலிப உலகம் பூலோகம் முழுதும் சென்றது!

பிளேட்டோ இவ்வுலகை விட்டுப் பிரிந்து உயிர்நீத்த நாள் அவரது பிறந்த தினம்!

> "அவன் ஆனந்தமாகப் பிரிந்து போகானா? நிச்சயம் போவான் தோழா...அவன் ஓர் உண்மையான தத்துவ ஞானியாக இருந்தால்!"
>
> —பிளேட்டோ



## இரண்டாம் பகுதி

### சிந்தனைவிளக்கமும் நூற்சுருக்கங்களும்

# நூல்கள்

பிளேட்டோ எழுதியவைகளை ஐம்பத்து ஆறு நூல்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் யாருக்காக எப்படி எழுதினார்? நிறைய மூளை உள்ளவர்கள் தலைவலி தலைவலி என்று நினைத்துக்கொண்டே பொழுது போக்காகப் படிக்கும் தத்துவக் கிரந்தங்களைப் போலவா? அல்ல! ஓடிக்கொண்டு இருப்பவர்களும் சுவையாகப் படிக்கும்படி பெரிய பெரிய ஞானரச அரசியல் தத்துவங்களையெல்லாம் சுலபமாக மனதில் பதியும்படி எழுதினார். பாமர மக்களும் படித்துப் பயன் பெறத்தக்க வழியிலே. சம்பாஷணை முறையில் எழுதிக் தந்தார். கவி ஷெல்லியும் கண்டு மயங்கும்படி கவிதை நடையில் எழுதினார். அவருடைய பரந்த உலக அனுபவத்தினால் அவருக்கு விசாலமான அறிவு இருந்தது. அதோடு அவரது எழுதுகோலில் கலையும் இருந்தது. அவர் தத்துவ ஞானி. அதோடு கலைஞன். மூளையைக் குழப்பக்கூடிய மாபெரும் சிந்தனை நூல்களை எழுதும்போது அவரது ஆத்மாவில் தத்துவ ஞானியும், கலைஞனும் ஒருங்கே குடியேறிவிட்டார்கள். முப்பது வயதில் அவர் தம் முதல் நூலை ஆரம்பித்தது முதல் எண்பத்தோரு வயதில் தம் கடைசி நூலான 'கிரீட்டியாஸை' எழுதி முடிக்காமல் மரணமடைந்தவரை, அவரது எழுதுகோலின் முனையில் கலையும் நாடகத் திறமையும் நர்த்தன மாடின.

அவருடைய நூல்களெல்லாம் மொழி, கவிதை, தத்துவம், பகுத்தறிவு, கல்வித் திட்டம், ஆண்-பெண் உறவு முதலான பல வேறு விஷயங்களைப்பற்றி எழுதப் பெற்றவை. ஆனால் தனி மனிதனின் அற வழியையும் அரசியல் முறையையும் பற்றியே அவர் சிந்தனைகள் அதிகமாகக் கலந்திருக்கின்றன. 'வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற திருவள்ளுவரின் கருத்துத்தான் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பிளேட்டோ காட்டும் அறவழி. மனிதன் எப்படி வாழ்வது, மனித இயற்கை என்ன, எது அவனை ஆனந்தமடையச் செய்கிறது, இந்தப்பூமியிலும் அகிலாண்டத்திலும் உள்ள சம்பந்தம் எத்தகையது என்பனவற்றைப் பற்றி பிளேட்டோ சிந்தித்தார். ஆனால் நல்லதொரு அரசாங்க அமைப்பில்தான் எந்த மனிதனும் நல்லதோர் ஆனந்த வாழ்க்கை வாழமுடியும். ஆகையால் அவர் சிந்தனைகள் அரசியலையொட்டிக் குவிந்தன. பிளேட்டோவின் 'குடியரசு அல்லது இலட்சிய ராஜ்யம்' (Republic or ideal State) என்னும் நூல் இன்றளவும் உலகத்தின் பெரும் பொக்கிஷ

மாகக் கருதப்படுகிறது. அதில் அலசப்படும் ஒவ்வொரு பிரச்னை யும் இன்றையச் சமுதாயத்திற்கும் வருங்காலச் சமூக முன்னேற் றத்திற்கும் உரிய பிரச்னைகளாகும்.

நாடகப்பாணியில் சம்பாஷணை உத்தி முறையைக் கை யாண்டு பிளேட்டோ தம் சிந்தனை நூல்களையெல்லாம் எழுதி வைத்திருக்கிறார். அவருடைய 'முப்பது சம்பாஷணை' நூலில் சாக்ரடீஸை ஒரு கதாபாத்திரமாக்கித் தம் கருத்துகளை யெல்லாம் அவர் வாய் மூலம் பேச வைத்திருக்கிறார். கொள்கைக்காக உயிர் நீத்தவர் சாக்ரடீஸாகையால், ஜனங் களின் மனதை அவை கவரும் என்று கருதி அவ்வாறு சாக்ரடீஸைத் தம் நூல்களில் பேசவைத்தாரோ என்ன வோ!

குடியரசு (Republic), ஆத்மீகக் காதல் (Symposium), சட்டங்கள் (Laws) என்னும் பிரபல நூல்களைத் தவிர பிளேட்டோ இன்னும் பல நூல்கள் எழுதியுள்ளார்.

'Apology' ('வாக்குமூலம்') என்னும் நூலில். 'அறிவனைத் திலும் மனிதன் தன்னை உணர்வதுதான் பேரறிவு' என்பதையும், 'அறிவும் பண்பு மற்றவர்களுக்குத் தலை வணங்காமல் அறவாழ் வுக்காகவும் நீதிக்காகவும் போராடித் தன் உயிரையும் தியாகம் செய்யத் திட நெஞ்சுள்ளவனுயிருக்க வேண்டும்' என்பதையும் சாக்ரடீஸின் மூலம் வலியுறுத்துகிறார். 'Crito' என்னும் நூலில், 'தீமைக்குத் தீமை புரிவது நல்லறமல்ல', என்பதையும், அரசியலின் அநீதிகளுக்கு ஆளாகிச் சமுதாயத்தால் தவறிழைக்கப் பட்டு மனிதன் தன் உயிரைத் தியாகம் செய்ய நேர்ந்த போதிலும் சமுதாயத்தில் ஓர் உறுப்பினனுகவுள்ள தன் பொறுப்பை நிறை வேற்ற வேண்டும்' என்பதையும் வலியுறுத்துகிறார். உலக உற்பத்தி யைப் பற்றி 'Timaeus' என்னும் நூலிலும், ஏதென்ஸின் ஆதிச் சரித்திரத்தைப் பற்றி 'Critias' என்னும் நூலிலும், ஸோபிஸ்டு கள் (Sophists)எனும் பாஷாண்டிகளைப்பற்றியும், கவிஞரைப்பற்றி யும் வீரத்தைப் பற்றியும் காதலைப் பற்றியும், சான்றாண்மை தன்னடக்கம், நட்பு, பக்தி, தர்க்கம், அணியிலக்கணம் முதலான வற்றைப் பற்றியும் பல நூல்கள் எழுதியிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், அவர் மெய்யறிவு கண்டு எழுதாத எந்த விஷயமும் இல்லை! அவற்றுள் முக்கியமான நூல்கள் சிலவற்றைப் பற்றி அடுத்துவரும் நூற் பகுதியில் விரிவாக ஆராயலாம்.



நூல் ஒன்று

# குடியரசு

(Republic)

"சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"

—புறநானூறு (191)

அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்"

—திருக்குறள் (543)

[உரைப்பாயிரம்: பிளேட்டோவின் நூல்களனைத்திலும் தலை சிறந்ததாக விளங்கும் 'குடியரசு (Republic), என்னும் நூல் உலகச் சரித்திரத்திலேயே சாகாவரம் பெற்ற இலக்கியம் எனக் கருதப்படுகிறது. இந்நூல் ஒவ்வொரு தனி மனிதனையும் சமுதாயப் பிராணியாகவும் நித்தியத்துவத்தில் ஓர் அம்சமாகவும் ஆராய்கிறது. பிறப்பிற்கு முன் தொடங்கி இறப்பிற்குப் பின் வரை மனிதன் நிலையைத் துருவிக் கணிக்கிறது' இந்நூலில் பிளேட்டோ கற்பனை செய்யும் 'இலட்சிய ராஜ்யமா'னது. அரசியல் இலக்கியத்தின் சரித்திரத்திலேயே முதன் முதலாக எழுதப்பட்ட பொதுநல சமுதாயச் சிருஷ்டியாகும். பெரிய பெரிய அரசியல் சிந்தனையாளர்களும் சமுதாயச் சீர்திருத்த வாதிகளும் மெய்யறிவை நாடும் தத்துவ ஞானிகளுங் கூடப் பலமுறை படித்துப் பயன் பெறத் தக்க கருத்துகள் இந்நூலில் நிறைந்திருக்கின்றன. இத்தகையதொரு மாபெரும் நூலைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முயற்சிதான் இந்தப் பகுதி. இந்நூலில் நம் புறநானூற்றின்

முற்போக்குக் கருத்துகள் பல நிறைந்திருப்பதோடு, கருத்து மூலத்தில் நம் திருக்குறளை ஒத்திருப்பதால், அறத்துப்பால், பொருட்பால், காமத்துபால் என முப்பால்களாகப் பகுத்துக் கொண்டு ஆங்காங்கு குறளிலிருந்து மேற்கோள்களும் குறிப்புகளும் இணைத்திருக்கிறேன்.]

## 1 அறத்துப்பால்

## நீதி என்றால் என்ன?

"பசும் பொன்னைவிட உயர்ந்த பொருளை,
அஃதாவது நீதியைத்தேடிக் கண்டுபிடிக்க
நாம் புறப்பட்டிருக்கிறோம்"

—சாக்ரடீஸ் (குடியரசு)

" அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலினூங்கு இல்லை கேடு"

—திருவள்ளுவர் (அறன் வலியுறுத்தல்)

[ஔவையாரின் ஆத்திசூடியைப் போல பிளேட்டோவின் குடியரசும் **'அறஞ்செய விரும்பில்'** ஆரம்பமாகிறது]

[பணக்கார வியாபாரியான செபாலஸின் அழகிய சலவைக் கல் மாளிகையில் அறிஞர் சிலர் பொழுது போக்காகக் கூடினார்கள். 'நீதி என்றால் என்ன?' என்று அவர்களிடையே கார சாரமான தர்க்கவாதம் துவங்கியது. ரூபமற்ற ஒரு பொருளுக்குத் தெளிவான உருவம் கொடுத்து நிர்ணயம் செய்வது போல் புத்தி கூர்மைக்குக் கடினமான பரீட்சை வேறெதுவுமில்லை. பிளேட்டோ தம் ஒலிபெருக்கிக் கருவியான சாக்ரடீஸ் என்னும் நாடகப் பாத்திரத்தின் மூலம் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுப் பலவிதமான பதில்களை எழுப்புகிறார்.

'உரியவர்களுக்கு அவர்களின் உடைமையைப் பெறச் செய்வதுதான் நீதி நேர்மை' என்கிறான் பாலிமார்க்கஸ். 'பைத்திய வெறியுள்ளவன் கையில் அவனது உடைமையான கத்தியைத் திருப்பிக்கொடுக்கலாமா?' என மறுக்கிறார் சாக்ரடீஸ்.

'வலிமைதான் நீதி' என்கிறான் திராஸிமார்க்ஸ். 'வலியவர்களுக்கு எது அனுகூலமாயிருக்கிறதோ அதுதான் நீதி; வலிமை பொருந்திய அரசாங்கத்தினர் தங்கள் அனுகூலத்திற்காகச் சட்டங்களை உண்டாக்குகிறார்கள்; சட்டங்களை மீறுபவர்களை, அநீதி புரிந்தவர்களாகக் குற்றம் சாட்டித் தண்டிக்கிறார்கள். ஆகவே, பலவானுக்கு எது அனுகூலமாயிருக்கிறதோ, அதுவே

பலஹீனமானவர்களுக்கு நீதியாகிறது' என்று அவன் வாதிக்கிறன். 'பயில்வான் உடல் வலிமைக்காக மாட்டுக்கறி சாப்பிட்டால் பலஹீனமான நோயாளியும் சாப்பிடவேண்டும் என்பது நீதியாகுமா?' என்று சாக்ரடீஸ் அதற்கும் மறுப்பு விடுகிறுர்.

இங்கு 'நீதி' என்ற பிளேட்டோவின் பதப்பிரயோகம் 'நியாயம்' என்பதைமட்டும் குறிப்பதல்ல என்பதைக் கவனிக்கவும். "ஆத்திரமோ அச்சமோ, இன்பமோ துன்பமோ, ஆசைகளோ பொருமைகளோ என் ஆத்மாவைக் கொடூரமாக அடக்கியாண்டால் அதை அநீதி என்று அழைக்கிறேன்" எனப் பிளேட்டோ தம் 'சட்டங்கள் (Laws, 836)' என்னும் நூலில் குறிப்பிடுகிறுர். நீதி, நேர்மை, நியாயம், தருமம், ஒழுக்கம் தன்னடக்கம், பண்பு முதலான பலவற்றின் கூட்டுத் தொகை தான் பிளேட்டோவின் 'நீதி' என்னும் சொல். அந்தக் கிரேக்கச் சொல்லுக்கு இணையான பதம் ஆங்கிலமொழிபெயர்ப்பில் கிடைக்கவில்லை யென்ருலும், நம் தமிழ் மொழியிலுள்ள 'அறம்,' என்னும் சொல்லை ஓரளவு அதற்கு இணையாகச் சொல்லலாம்.

இனி, நீதியைப் பல கோணங்களிலிருந்து பிளேட்டோ ஆராய்வதைக் கவனிக்கலாம்:]

அறநூல் அல்லது நீதி சாஸ்திரம் என்கிறேமே, அதனுல் உண்டாகிற பண்பும் பயனும் என்ன?

நண்பர்களுக்கு நல்லது செய்வதும், பகைவர்களுக்குக் கெடுதல் செய்வதும் நீதியாகுமா?

நண்பர்களில் சிலர் கெட்டவர்களாய் இருப்பது போல், பகைவர்களில் சிலர் நல்லவர்களாயும் இருக்கிறுர்கள்.

நீதி என்பது மனிதப்பண்பு ஆகும்.

ஒருவனுக்கு நாம் தீமை செய்தால், அவன் இன்னும் அதிகமாக அக்கிரமச் செயல்களைச் செய்யத் துணிந்து விடுகிறுன்.

நண்பனுய் இருந்தாலும் பகைவனுய் இருந்தாலும் எவனுக்கும் தீமை செய்வது என்பதே அநீதியாகும்.

கூட்டு வியாபாரத்தில் நீதி நேர்மையுடன் நடந்துகொள்பவனுக்கு நஷ்டமும், அநீதியுடன் நடந்துகொள்பவனுக்கு லாபமும் உண்டாகியிருப்பதைக் காணலாம்.

ஒரே அளவான வருமானம் உள்ள இருவரில், நீதி நேர்மையுடையவன் அதிக வரி செலுத்துகிறுன்; அநீதிக்காரன் குறைவானவரி செலுத்துகிறுன்.

நீதி நேர்மையுள்ளவன் தன் உத்தியோகத்தைக் கெடுத்துக் கொள்வதோடு மட்டுமல்ல, பொதுமக்களிடமிருந்து பணம் திரட்டத் திராணியற்றவனு யுமிருக்கிருன்...சக உத்தியோகஸ்தர் களின் விரோதத்தையும் வெறுப்பையுங் கூடப் பெறுகிருன்.

ஓர் அநீதியான மனிதன் தன்னைப் போன்ற அநீதிக்காரனுக் கும் தீமை செய்வான். தனக்கு நேர்மாருன பண்புள்ள நீதிமானுக் கும் தீமை செய்வான்.

நீதியாய் உள்ளவன் அறிவாளியாகவும் நல்லவனுகவும் நமக் குத் தோற்ற மளிப்பதுபோல் அநீதியான மனிதன் அறிவிலியாக வும் கெட்டவனுகவும் நமக்குத் தோற்றமளிக்கிருன்.

அநீதியாய் நிறுவப்பட்ட ஒரு ராஜ்யம் மற்ற ராஜ்யங்களை நிர் மூலமாக்குவதிலும் அங்குள்ள மக்களை அடிமைப் படுத்துவதிலும் ஈடுபடுகின்றது.

மனிதர்களிடையே அநீதியானது சச்சரவுகளை விளைவிக் கிறது; நீதியோ தோழமையை வளர்க்கிறது.

அநீதி தனக்குத்தானே எதிரி ஆகுகிறது.

நீதியுள்ளவர்கள் கடவுளின் நண்பர்கள்: அநீதியுள்ளவர்கள் கடவுளின் பரம வைரிகள்.

வாழ்வை வழி நடத்திச் செல்வது ஆத்மாவின் தொழில்... அந்த ஆத்மா நீதி எனும் பண்பு பெற்றிராவிட்டால் அவன் வேலை ஒழுங்காக நடைபெருது.

ஆத்மாவின் நல்ல பண்பு நீதி; ஆத்மாவின் தீய பண்பு அநீதி.

நீதியாய் நடந்துகொள்ளும் மனிதர்கள் நிம்மதியுடனும் அநீதியாய் நடந்துகொள்பவர்கள் கவலையுடனும் வாழ்கிருர்கள்.

நீதியைவிட அநீதியினுல் எந்தவித லாபமும் இல்லை.

*[இவ்வாறு வாதப் போரினிடையே கருத்துகள் சிதறி விழுகின்றன. நீதி என்பது ஒழுக்கமுள்ளதா, அறிவுள்ளதா, லாபகரமானதா அல்லது இவையெல்லாம் இல்லாததா என்றெல் லாம் ஆராய்ந்த பிறகு, 'அறத்தால் வருவதே இன்பம், மற்ற எல்லாம் புறத்தவை, புகழும் இல்லாதவை' என்று 'அறன் வலி யுறுத்திக்' கூறும் நம் திருவள்ளுவரைப் போல, மனித தர்மமான நீதியைப் பிளேட்டோ வற்புறுத்திக் கூறுகிருர்.*

நல்லதெனச் சில பொருள்களை நாம் வைத்துக் கொண்டிருக் கிறோம்; சிலவற்றை, உபயோகத்திற்காக மட்டுமின்றி, அவற்றை வைத்துக் கொண்டிருப்பதினாலேயே ஒருவித ஆனந்தம் உண்டா கிறது என்பதற்காக வைத்துக் கொண்டிருக்கிறோம்; சிலவற்றை அவைகளின் உபயோகத்திற்காக மட்டும் வைத்துக்கொண்ருக் கிறோம். நீதி என்பதை முதலாவது ரகத்தைச் சேர்ந்ததாகப் பிளேட்டோ மதிப்பிடுகிறார்;]

"நீதிக்கு நான் மிக உன்னத ஸ்தானம் கொடுக்கிறேன். எதை எதற்காகவும் அதன் விளைவுகளுக்காகவும் நாம் விரும்புகிறோமோ அந்த மாதிரியான பொருளில் ஒன்றாக நீதியை மதிக்கிறேன்!"

[இதற்கு எதிர்வாதம் ஏற்பட்டபோது சிதறி விழுந்த கருத் துகள்:]

அநீதி செய்வதிலுள்ள நன்மையை விட, அநீதிக்கு ஆளாகி அவஸ்தைப் படுவதிலுள்ள தீமைதான் அதிகமாக இருக்கிறது.

நீதியை எல்லோரும் ஏன் கருணையோடு கவனிக்கிறார் களென்றால், அநீதி செய்யத் திராணியற்றவர்களாய் இருப்பதி னாலேயே தவிர, நீதி நல்ல தன்மை என்பதற்காக அல்ல. இதனால் தான் நீதி சிறப்பிக்கப்படுகின்றது.

அநீதிக்காரன் புத்தி கூர்மையுள்ள ஒரு தொழிலாளியைப் போலச் செயல் புரிகிறான்.

அநீதி எப்போது உச்சநிலை அடைகிறதென்றால் அது நீதி போல் வேஷம் போடும்போதுதான்!

உண்மையான நீதிமானே, சாகும்வரை நீதியுடனே, விடாப் பிடியாய் நடந்து செல்வான். வெளித் தோற்றத்திற்கு அநீதிக் காரனைப்போல நடந்து கொண்டாலும் கடைசிவரையில் அவன் நீதியைக் கடைப்பிடிப்பான்.

நீதிமான்கள் துன்பத்திற்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாவார்கள்; சிறையிடப் படுவார்கள்...கடைசியில் சகலவித வேதனைகளையும் அனுபவித்துச் சிலுவையில் அறையப்படும் போது, 'ஐயோ! நீதிமானைப்போல் வெளிவேஷம் போட்டு நடித்தி ருந்தால் கூடப் போதுமே! எதற்காக உண்மையான நீதிமானாக நடந்துகொண்டோம்?' என்ற புத்திமதியைப் புரிந்து கொள்வார் கள்.

நீதிமானைப்போல வேஷம் போடுகிற ஓர் அநீதிக்காரனுக்குத் தான் அதிகார ஆற்றல் சித்திக்கிறது.

மனிதர்கள் நீதிவழியைக் கடைப் பிடிக்கிருர்களென்ருல் அது கோழைத் தனத்திஞல்தான்; அநீதியால் விளையக்கூடிய தீமைகளுக்குப் பயந்துதான்.

[இவ்வாறு 'வலிமையே நீதி' என நிலைநாட்ட முயன்ற திராஸிமார்க்கஸ் 'அநீதியே மக்களுக்கு இயல்பான குணம் அதுவே ஆதாய முள்ளது. நீதி என்பது கையாலாகாதவர்களின் முணுமுணுப்பு. பலமுள்ளவர்கள் பெற்றவைகளை யெல்லாம் பெற வேண்டுமென்ற சுயநலத்தால்தான் பலஹீனமானவர் சம நீதியைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுகிருர்கள். பலமுள்ளவன் ஒருவன், தான் அநீதியால் திரட்டிய பணத்தில் ஒரு பங்கைச் செலவழித்துப் பூஜை செய்தும் யாகபலி கொடுத்தும் கடவுளின் தயவைக்கூட வெகு சுலபமாகப் பெறமுடிகிறது' என்றெல்லாம் குதர்க்க வாதம் செய்கிருன்.

'ஒரு பையளவு நீதியை விட ஒரு கையளவு வலிமை சிறந்தது' என்பது அவனது எண்ணப் போக்கு. இந்தத் 'திமிர்வாதத்திற்கு' அப்போது ஏதென்ஸ் ராஜ்யத்தின் வெளி நாட்டுக் கொள்கையிலிருந்த சாம்ராஜ்ய ஆக்ரமிப்பையும், அது தனக்குக்கீழான வலிவற்ற ராஜ்யங்களை அடிமையாய் அடக்கியாண்ட குரூரமுறையையும், ஏதென்ஸ் சுதந்திரப் புருஷர்களின் அளவுமீறிய 'தனித்துவப்' போதையையும் காரணங்களாகக் கூறலாம்.

தர்க்கத்தின் இறுதியில், 'நீதிதான் மனிதனின் நல்ல பண்பு' என்ருல் அதைத் தெளிவாக விளக்க வேண்டுமென எதிர்வாதக்காரர்கள் கேட்கிருர்கள். 'சமுதாய அமைப்பை ஒட்டிய ஓர் ஒழுங்குப் பண்புதான் நீதி' எனப் பிளேட்டோ குறிப்பிட்டு, 'சமுதாய அமைப்பிலுள்ள நல்ல அரசியல் நீதி எது வென ஆராய்ந்தால், தனி மனிதனின் நடத்தையிலுள்ள நீதி சுலபமாகப் புரியும்' என்கிருர். மங்கலான கண்பார்வையுள்ளவனுக்கு முதலில்பெரிய எழுத்துகளை வாசிக்கப் புரிந்துவிட்டால் அவற்ருேடு சிறு எழுத்துகளை ஒப்பிட்டு நோக்குவானல்லவா என்று ஓர் உவமையும் காட்டுகிருர். ஆனல் அவரது உள் நோக்கம் தனி மனிதனின் ஒழுக்கத்தை அலசி ஆராய்வது மட்டுமல்ல, சமுதாய அரசியல் ஒழுக்கங்களையும் ஆராய்ந்து சீர்திருத்த வேண்டும் என்பதுதான்.]

நீதி என்பதைத் தனி மனிதனின் பண்பு எனச் சொல்வது போல, ராஜ்யத்தின் பண்பாகவும் இருக்கிற தெனச் சொல்லலாம்.

தனி மனிதனைவிட ராஜ்யம் பெரிது.

நீதியைப் பெரிய அளவில் ஆராய்ந்து கண்டு பிடிப்பது சுலபம். எனவே ராஜ்யங்களில் பெரிய அளவில் தென்படும் நீதி

யையும் அநீதியையும் முதலில் ஆராய்ந்து, பிறகு அதைக் கொண்டு பெரிய அளவிலிருந்து சிறிய அளவிலுள்ள தனி மனிதனின் நீதியோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாக.

## II பொருட்பால்

## அரசியல்

---

" மருத்துவநூல் மருந்துகளின் நன்மைக்காக இல்லை ;
தேகத்தின் நன்மைக்காக இருக்கின்றது...... அதுபோல்
ஆட்சிபுரியும் கலை ஆள்பவர்களின் நன்மைக்காக இல்லை ;
ஆளப்படுபவர்களின் நன்மைக்காக இருக்கின்றது.

—சாக்ரடீஸ் (குடியரசு)

" நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் "

—திருவள்ளுவர் (மருந்து, 948)

---

[அரசியல், ராஜ்யம், சமுதாய அமைப்பு என்பன எவ்வாறு ஆதிநாகரிகத்தில் தோன்றின என்று பிளேட்டோ முதலில் கூறுகிறார். மனிதனின் முதல் தேவைகள் மூன்று: உணவு, உடை, உறைவிடம். இவற்றைத்தவிர உபரித் தேவைகளும் பல உண்டு. மனிதன் தனக்குத் தேவையான அனைத்தையும் தான் ஒருவனே சிருஷ்டித்துக் கொள்ள முடியாதாகையால், ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொழிலைச் செய்து பரஸ்பரம் தேவைகளைப் பரிமாறிக் கொண்டு, கூட்டுறவாகத் தொழில் புரியவும் தனிச் சமுதாயமாக இயங்கவும் தனி நாட்டினராக ஒன்றுபட்டு வாழவும் தொடங்கினர்கள். முதலில் உழவர்களும், நெசவாளிகளும், கட்டிடக் கொத்தர்களும் உண்டானார்கள். அவர்களுக்கு உதவியாகவும் உட்பிரிவினராகவும், தச்சர், கொல்லர், ஆடு மாடு மேய்ப்போர், தையற்காரர், சாயக்காரர் போன்ற தொழில் வகுப்பினர்கள் தோன்றினர்கள். சமுதாயம் அல்லது ராஜ்யம் வளர வளர புதுப் புதுத் தொழில்களின் உற்பத்தியும் மூலப்பொருள்களின் தேவையும் அதிகரித்தது. அதைபொட்டி வெளி நாடுகளுக்குச் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் அவசியம் ஏற்படவே, வணிகர் வகுப்பு உண்டாயிற்று. சரக்குகளை விற்கவும் வாங்கவும் பொதுச் சந்தைகள் ஏற்படவே, கடைக்காரர்கள் உற்பத்தியானர்கள். சரக்குகளின் பரிவர்த்தனைக்கு நாணய முறை ஏற்பட்டது. செல்வர்களை ஒட்டிக் கலைஞர்களும் நகை செய்வோரும் உண்டானார்கள். நாட்டில் ஜனப் பெருக்கமும் உணவு உடைப்பற்றாக் குறையும் அதிகரிக்கவே, மற்ற நாடுகளை ஆக்ரமிக்கும் யுத்தங்கள்

ஏற்பட்டன. அதையொட்டிப் போர்வீரர்கள் வகுப்பு உண்டா யிற்று. உள் நாட்டில் கொள்ளை, கொலை, திருட்டு முதலியவற்றி லிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு நகர் காவலர் வகுப்பும் சட்ட திட்டங்களும் ஏற்பட்டன. போர் வீரர்களைக் கட் டுப்படுத்தி நாட்டுமக்களை நிர்வகிக்க அரசாங்கமும் ஆளும் வகுப் பினரும் உண்டானார்கள்.

இவ்வாறு ராஜ்யத்தின் மக்களிடையே உழவு வகுப்பு, தொழில் வகுப்பு, வியாபாரி வகுப்பு எனும் மூன்று வகுப்பின ரைக்கொண்ட பொதுமக்கள் ஆளப்படும் பிரிவினராகவும், இரா ணுவ வகுப்பு, ஆட்சி வகுப்பு எனும் இரு வகுப்புகளைக் கொண்ட ஆட்சியாளர்கள் ஆளும் பிரிவினராகவும் ஆகிறார்கள்.

ஆளப்படுவோர், எண்ணிக்கையில் மிக அதிகம்; அவர் களுக்கு உரிமைகள் மிகக் குறைவு.

ஆளுவோர், எண்ணிக்கையில் மிகக்குறைவு; உரிமைகள் மிக வும் அதிகம்.

ஒவ்வொரு மனிதனும் எந்தத் தொழிலைச் செய்ய இயற்கை யான திறமை பெற்றிருக்கிறானோ அந்தத் தொழிலை மட்டும் ஒழுங் காகச் செய்து கொண்டு போவதுதான் சமுதாய நியதியில் அவ னுக்கு நீதியாகும்.

ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களும் தங் கள் கடமைகளையும் ஆற்றல்களையும் உணர்ந்து, அனுசரிப்புடன் எல்லா விவகாரங்களையும் ஒழுங்காக நடைபெறச் செய்து வந்தால் அதுதான் நீதியுள்ள ராஜ்யம்.

ஆள்பவர்களின் நன்மைக்காக இல்லாமல் ஆளப்படுபவர் களின் நன்மைக்காக ஆட்சிக் கலை அமைந்திருந்தால் அதுதான் அரசியல் நீதியாகும்.

ஆளும் வகுப்பினரோ, ஆட்சிக்கு உறுதுணையாக நிற்கும் இராணுவ வகுப்பினரோ தங்களால் ஆளப்படும் பொதுமக்களின் நன்மையைக் கவனியாமல் தங்கள் சுய நலங்களுக்காக அதிகாரங் களையும் செல்வாக்கையும் துஷ்பிரயோகம் செய்தால் அதுவே அரசியல் அநீதியாகும்.

நீதியின் தன்மையும் அதை நிலை நாட்டும் முறையும் அதன் அர சியல் அமைப்பையும் திட்டங்களையும் பொறுத்தவை ஆகும். ஆள் வோர் ஆளப்படுவோரின் பண்பையும் அதற்காக அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வித் திட்டத்தையும் கூடப் பொறுத்ததாக நீதி யின் போக்கு அமைவதுண்டு. பொதுவாக, பலவித ஆட்சி முறை களின் அரசியல் அமைப்புகளையும் பொறுத்து நீதியும் அநீதியும் உண்டாகின்றன.

## அரசியல் அமைப்புகள்

'உலகிலே தோன்றுகிற எந்தப் பொருளுக்கும் வளர்ச்சி உண்டு; அழிவும் உண்டு. ஒவ்வொன்றின் எல்லை அளவைப் பொறுத்து அதன் வாழ்வும் தேய்வும் அமைந்திருக்கிறது.'

—சாக்ரடீஸ் (குடியரசு)

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல ; கால வகையினனே "

—நன்னூல் சூத்திரம்

மனித சுபாவம் ஐந்து வகையாக அமைந்திருப்பதுபோல ஆட்சி முறையிலும் ஐந்து வகையான அரசியல் அமைப்புகள் உண்டு. அவையாவன :

(1) ஆற்றல் அறிவினலும் மேலான சுபாவத்தினலும் இயங்கும் மேன் மக்கள் ஆட்சி (Aristocracy), அல்லது தம்மாட்சி (Autocracy) (2) வீரப் புகழினலும் உணர்ச்சி சுபாவத்தினலும் இயங்கும் கிரீட்டிவுள்ள திறலாளர் அல்லது ராணுவ ஆட்சி (Military-State) (3) போட்டி சுபாவத்தினல் இயங்கும் ஒரு சிலர் ஆட்சி (Oligarchy) அல்லது செல்வராட்சி (Plutocracy) (4) சுகானுபவ சுபாவத்தினல் இயங்கும் பொதுக் குடியாட்சி (Democracy) (5) தன்னல சுபாவத்தினல் இயங்கும் யதேச்சாதிகாரமுடைய வில்லாட்சி (Despotism) அல்லது கொடுங்கோலாட்சி (Tyranny). குடியாட்சியோ (Democracy), மேன்மக்களாட்சியோ (Aristocracy), செல்வராட்சியோ (Plutocracy) எந்த அரசியல் நிர்வாகமாயிருந்தாலும் அதன் அடிப்படைக் கொள்கையில் அளவுமீறிப் போகும்போது அஃது அழிந்துபோகும்.

### (i) இராணுவ ஆட்சி (Military State)

" அமைந்து ஆங்கு ஒழுகான், அளவறியான், தன்னை
வியந்தான் விரைந்து கெடும் "

—திருவள்ளுவர் (வலியறிதல், 474)

அநாதி காலத்தில் ஸ்பார்டா அல்லது கிரீட் தேசமும் நவீன காலத்தில் புருஷ்யா (Prussia) தேசமும் மேற்கூறிய ஆட்சிகளுக்கு உதாரணங்களாகும்.

'மனிதனுக்கு எப்போதும் இன்னெருவனேடு சண்டையடித்துக்கொள்ளும் சுபாவமே பிறவிக் குணமாக அமைந்திருக்கிறது.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதிதன்று; இவ்வுலகத்து இயற்கை! ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் ஓயாமல் யுத்தம் ஏற்படுவதே இயற்கையாக உள்ளது.' இந்த அடிப்படையில் கிரீட் சட்ட சபையினர் இராணுவ ஆட்சியின் கீழ் தங்கள் தேசத்தின் சக்திகளையெல்லாம் போருக்குத் தயாரிப்பதிலேயே ஈடுபட்டார்கள். இத்தகைய ஆட்சியாளர்கள் அறிவை விட உணர்ச்சிகளுக்கும், கலைப்பயிற்சியைவிடத் தேகப் பயிற்சிக்கும் அதிகப் பிராதான்யம் கொடுக்கிறார்கள். இதனால் தேசத்தில் மனிதத் தன்மை மாறி, மிருகத் தன்மை அடைந்து, பண்பே சீர் குலைந்து கீழ்த்தரத்தை நோக்கிச் செல்லுகிறது. அத்தகைய இராணுவ ஆட்சி நெடுநாள் நிலைக்காது. கைப்பற்றிய போர் வீரர்கள் நிலப்பிரபுக்களாக மாறி, செல்வங்களைக் குவித்து. செல்வராட்சியையோ (Plutocracy), தம்மாட்சியையோ (Autocracy) உண்டாக்க முயலுவார்கள். இவ்வாறு இராணுவ ஆட்சி தன் அடிப்படையான இராணுவக் கொள்கைமீது எல்லைமீறிப் போகும்போது அழிந்து போகிறது!

## (ii) தம்மாட்சி (Autocracy)

"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய் அளவின்றிப் படும்"

—திருவள்ளுவர் (மருந்து, 947)

ஆட்டு மந்தைகளை ஆடுகளே மேய்ப்பதில்லை. அவற்றை மேய்ப்பதற்கு இடையர்களைக் கடவுள் படைத்திருக்கிறார். அதைப் போல ஆட்டு மந்தைகளான ஜனக்கும்பலை மேய்ப்பதற்குக் கடவுள் தங்களைப் படைத்திருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு சிலர் தம்மாட்சியை நிறுவுகிறார்கள். சர்வசக்தி பெறும் அவர்களிடம் அதிக விவேகமும் நிதானமும் நேர்மையும் இருக்குமானால் நல்ல சட்டங்களும் நல்ல அரசியல் நிர்வாகமும் ஏற்பட்டு ஜனங்களுக்கு நன்மை கிடைக்கலாம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அப்படி இருப்பதில்லை. தந்நலமும், பேராசையும், அதிகார வெறியும், இச்சைக் கிருத்தியங்களும், தமக்குப்பின் திறமையற்றவர்களாயிருந்தாலும் தங்கள் பரம்பரையே ஆளவேண்டுமென்ற சூழ்ச்சிப்போக்கும் அவர்களுக்கு உண்டாகி விடுகிறது. அரசியலில் அத்தகைய சர்வ சக்தியைக் கொடுப்பதால் அவர்கள் கொடுங்கோலர்களாக மாறி விடுவார்கள் என்று ஜனங்களும் முணுமுணுப்பார்கள். கடலில் அளவு மீறிய பாரங்கள் ஏற்றப்பட்ட கப்பல் மூழ்கி விடுவதுபோல அளவுமீறிய அதிகாரங்களைப் படைத்த அரசாங்கம் கவிழ்ந்துவிடும். ஒருவனுடைய உடலுக்கு அளவுமீறிய உணவும், மனதிற்கு அளவு மீறிய அதிகாரமும் ஏறிவிடுமானால் அவனுடைய உடலுக்கு வியாதியும் அவன் மனதுக்கு அநீதியான மமதையும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் வெறியும் ஏற்பட்டுவிடும். அவனுடைய நெருங்கிய நண்பர்களும் அவனை வெறுக்கத் தொடங்குவார்கள்.

இத்தகைய நிலை ஏற்படுமானல் 'தம்மாட்சி' அரசாங்கம் பலங் குன்றி அதன்சக்தி எல்லாம் மறைந்துவிடும். இவ்வாறு 'தம்மாட்சி' அதன் அடிப்படைக் கொள்கையில் எல்லை மீறிப் போவதனலேயே அழிந்து போகிறது.

## iii செல்வராட்சி (Plutocratic State)

அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

—திருவள்ளுவர் (கொடுங்கோன்மை 555)

செல்வத்தையும் சொத்துடைமையையும் அடிப்படையாகக் கொண்டது இந்த ஆட்சிமுறை. செல்வத்திற்கு மதிப்புக் கொடுத்தும் ஒருவன் இன்னெருவனைவிடப் பணக்காரனுகத் தன் சக்தியை எல்லாம் செலவழிப்பான். ராஜ்யத்தின் ஜனங்களெல்லாம் பணத்தின் காதலராகவும் அடிமைகளாகவும் மாறிவிடும் மனப்பான்மை ஏற்படும். செல்வம் குவியக் குவியப் பணத்தின் மோகம் அதிகரிக்கும். நல்ல தன்மையைப் பற்றிய எண்ணம் குறைந்துவிடும். ராஜ்யத்தில் பணக்காரர்களும், செல்வமும் கௌரவிக்கப்பட்டு நல்லவர்களும் நல்லதன்மையும் தாழ்த்தப்படும். ஒரு சில பணக்காரர்கள் ஆளுபவர்களாகவும் நல்லவர்களான ஏழைகள் அடிமைகளாகவும் ஆக்கப்படுவார்கள். குறித்த அளவு சொத்துடையவர்களே ஆட்சி நடத்தலாம் என்று நியதி செய்வார்கள். ஏழைகளுக்கு ஆட்சி நிர்வாகத்தில் பங்கு இராது. நிர்வாகம் எனும் கடலில் அரசாங்கக் கப்பலைச் செலுத்துவதற்கு மாலுமிகளை, அவர்களுடைய சொந்தத் தகுதியையும் திறமையையும் பாராமல், அவர்களுடைய சொத்தைக் கொண்டே தேர்ந்தெடுத்தால் கப்பலின் நிலை என்னவாகும்? ஓர் ஏழையானவன் பணக்காரனைவிட நல்ல மாலுமியாக இருந்தாலும் அவனுக்குக் கப்பலை ஓட்ட அனுமதி மறுக்கப்பட்டால் கப்பலின் நிலை என்னுகும்? கப்பல் கடலில் கவிழ வேண்டியதுதான்! செல்வராட்சியால் ஏற்படும் இன்னெரு தீங்கு என்னவென்ருல் ஒரே ராஜ்யமாயிராமல் ஏழைகள் பணக்காரர்கள் என்ற இரண்டு உலகங்களைச் சிருஷ்டித்து ஒன்றுக்கெதிராக ஒன்று சூழ்ச்சி செய்யும் மனப்பான்மையை வளர்த்துவிடும். உட்பகை உற்ற குடியால் வலிமை குறைந்து போகும். யுத்தகாலத்திலோ, ஒரு சில செல்வராட்சியினர் பெருவாரியான ஏழை மக்களைப் போர் வீரர்களாக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனல் அவர்கள் வெளிநாட்டு எதிரிகளைவிட உள்நாட்டு ஏழைகளைக் கண்டுதான் அதிகம் பயப்படுவார்கள். ஏழைகளை நம்பாமல் தாங்களே போருக்குச் செல்லலாமென்ருல் அவர்கள் வெகு சிலர்தாம். மேலும் பணத்தின்மீதுள்ள மோகத்தால் பணக்காரர்கள் உபரியான யுத்தவரிகளைச் செலுத்தவும் விரும்பமாட்டார்கள். பேராசையையும் லோபித்தனத்தையும் ஆட்சிபீடத்தில் ஏற்றினல் அதைவிடத் துர்ப்பாக்கியம் ராஜ்யத்திற்கு வேறெதுவுமில்லை. பணக்காரர்கள் ஆட்சிமுறையில் ஈடுபட்

டால் ராஜ்யத்தின் நல அபிவிருத்தியில் அக்கரை செலுத்துவதில்லை. உண்மையில் அவர்கள் சோம்பேறிகளான ஆண் தேனீக்களே!

இந்த ஆட்சியை ஒத்த மனிதன் லோபியாகவும் எதிலும் லாபம் காணவேண்டுமென்ற பேராசைக்காரனுகவும் நீதிமானைப் போல வெளிவேஷம் போடுபவனுகவும், போட்டி போராட்டங்களில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி வாழ்பவனுகவும் இருப்பான். எதிர்பாராத தாக்குதலின்போது திகைத்துக் குழம்பி விரைவில் கோழைத்தனமடைபவனுயுமிருக்கிறுன். இத்தகைய ஆட்சியில் மனிதனிடம் ஒன்று பிச்சைக்கார புத்தி வளர்கிறது; அல்லது திருட்டுப் புத்தி வளர்கிறது.

[பிளேட்டோ இவ்வாறு கருதியதோடு நிலப்பிரபுக்களின் ராஜ்யத்தை 'அந்தஸ்து ஆட்சி'யாகக் (Timocracy) கருதினுர். இத்தகைய ஆட்சியானது நாளடைவில் 'ஒரு சிலர் ஆட்சி'யாக (Oligarchy) மாறிக் கட்டுபாடற்ற முதலாளித்துவத்தை (Capitalism) வளர்த்து ஏழை பணக்காரன் போராட்டத்தை உண்டாக்கி விடும் என்றும் கருதினுர்.]

மேன்மக்கள் ஆட்சியானது (Aristocracy), ராஜ்யத்தின் அதிகாரங்களை ஒரு சிறு கைப்பிடிக்குள் வைத்துக்கொண்டு அதனுலேயே அழிந்து விடுவதுபோல், 'ஒருசிலர் ஆட்சியானது' பொருளாசை வேட்டையினுல் அஜாக்கிரதையாகி அழிந்து போய்விடும். இத்தகைய ஆட்சிகளின் கடைசி எல்லை பொதுமக்களின் புரட்சியாகத் தான் இருக்கும். நாட்டில் அதிருப்தி நிலவுவதால் அரசாங்கமும் பலஹீனமடைந்து விடுகிறது. ஆனுல் ஆளும் செல்வரோ அதைக் கவனிக்காமல் தங்கள் நலங்களிலே கவனம் செலுத்துவார்கள். உள்ளூர உள்ள வியாதிகளை அசட்டை செய்து வருவதால் உடம்பு பலங்குன்றி ஒரு சிறு குளிர்காற்றுப் பட்டாலும் மரணபத்தானது உண்டாகிவிடுவது போல் ராஜ்பத்தில் மாபெரும் புரட்சி உண்டாகிவிடும். அதன் விளைவாகப் பொதுக்குடியாட்சி தோன்றும். பணக்காரர்களை ஏழைகள் கொன்று குவித்துப் பழி தீர்த்துக் கொள்வார்கள். அதிகாரங்களையும் சுதந்திரத்தையும் சர்வ மக்களுக்கும் சமத்துவமாகப் பிரித்துக் கொடுப்பார்கள். இவ்வாறு செல்வராட்சி தன் அடிப்படைக் கொள்கையான செல்வத்தின்மீது அளவுமீறி நாட்டம் செலுத்துவதாலேயே அழிந்து போகிறது.

## (iv) பொதுக் குடியாட்சி (Democracy)

'நுட்பமாகவும் சிறப்பாகவும் ஆராயும் அறிவுத்திறமை இல்லாதவனின் எழுச்சிகரமான அழகு, களிமண்ணல் அழகுற ஆக்கப்பட்ட பொம்மை போன்றது."

—திருவள்ளுவர் (கல்லாமை 407)

ராஜ்யத்தில் எல்லோரும் எந்தப் பதவிகளையும் வகிக்கவும் ராஜ்யக் கொள்கைகளை நிர்ணயிக்கவும் சரிசமமான உரிமை

உண்டென்பது தான் பொதுக்குடியாட்சியின் அடிப்படைத் தத்துவம். இது வெளிப்பார்வைக்குப் பிரமாதமாகவும் பகட்டாகவும் தோன்றும். ஆனால் உள்ளூரச் சீர்கேட்டை வளர்க்கக்கூடியதாய் இருக்கும். ஏனெனில் படிப்பில்லாத பாமர ஜனங்களுக்குத் தங்களை ஆளத் திறமையானவர்களையும், நல்லவர்களையும் தேர்ந்தெடுக்கத் தெரியாது. இரண்டு முட்டாள்கள் தேர்தலில் நின்றால் அவர்களில் எவன் பொதுமேடைகளில் நின்று தன்சொற்பொழிவுத் திறனால் 'ஆ ஊ' என்று கத்தித் தேனொழுகப் பேசுகிறானோ அவனைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. இத்தகைய சுயேச்சை நாட்டில் பல திறப்பட்ட மனிதர்கள் இருப்பதுபோல பல திறப்பட்ட அரசியல் கொள்கைகளும் கட்சிகளும் உண்டாகும். கட்சி அரசியலில் ஆள்வோர் தங்கள் கட்சி பலத்தை நிலைநிறுத்த அதிகாரங்களை உபயோகிப்பார்களே தவிர, நாட்டின் பொது நலனை அபிவிருத்தி செய்வதில் அக்கரை கொள்ளமாட்டார்கள். ஆளும் கட்சிக்கு எதிரான கட்சிகள் ஒன்று மாற்றி ஒன்று மக்களிடையே ஆக்கம் பெற்றுக் கொண்டிருக்கும். தேசத்தை முன்னேக்கி நிற்கும் எந்த ஒரு புதுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமானாலும் பல கட்சிகளின் பலவிதமான விமரிசனங்களுக்கு நடுவே ஜனங்களின் 'கரகோஷங்களைப்' பெறவேண்டி இருக்கிறது. பாமர ஜனங்களின் குடியாட்சி என்பது கொந்தளிக்கும் கடலின் நடுவே நிர்வாகக் கப்பலைச் செலுத்துவதற்குச் சமமாகும். பொதுமேடைப் பிரசங்கத்தின் ஒவ்வொரு சூறைக்காற்றும் கப்பலைத் திசைக்குத் திசை மாறிப்போகச் செய்யும். அதனால் குறித்த இலட்சியத்தை அடைவதற்குக் காலதாமதமாகும். மேலும் ஏதென்ஸ் குடியாட்சிக்கோ சுதந்திரத்தைத் தவிர வேறொரு கொள்கையும் கிடையாது! அதன் கீழுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சுயேச்சை எண்ணத்தைத் தவிர வேறு கொள்கையோ கட்டுப்பாடோ இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் ருசி பார்த்துக்கொண்டேயிருப்பான். அரசாங்கத்திலோ பலவிதமான கட்சித் தலைவர்களையும் திருப்தி செய்வதற்காக ராஜ்யத்தில் பல அநாவசியமான உத்தியோகங்களையெல்லாம் பெருக்க நேரும். அதனால் அதிகாரிகளின் அதிகாரங்கள் குறைந்துவிடுகின்றன. நாளடைவில் அந்த அரசாங்க யந்திரம் ஆண்மையற்றதாகவோ, வலுவற்றதாகவோ, மந்தமாகவோ மாறிவிடுகிறது. தனி மனிதனிடமோ, எல்லை மீறிய சுயேச்சைத் தனமும், ஊதாரித்தனமும் தன்னடக்கமின்மையும், ஆரவார வாழ்க்கையும், 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' எனத் திரிவதும், நிலையற்ற கொள்கையும் நியதியற்ற வாழ்க்கை முறையும், எல்லையற்ற சுகானுபவ விருப்பமும் உண்டாகின்றது. நாடோ, பிரஜைகளைப்போல அடங்கி நடக்கிற அதிகாரிகளையும், அதிகாரிகளைப்போல ஆர்ப்பாட்டம் செய்கிற பிரஜைகளையும் பகிரங்கமாகப் பாராட்டுகிறது.

பல திறப்பட்ட மனிதர்களின் கட்டுப்பாடற்ற சுயேச்சையினால் பலவிதமான கொள்கைகளும் கட்சிகளும் தோன்றி

ஒன்டோன்று மோதும். யார் ராஜ்யத்தை ஆளுவது என்று போட்டியும் குழப்பமும் உண்டாகும். ராஜ்ய நிர்வாகமென்ற கப்பலில் ஏறியுள்ள அத்தனை பிரயாணிகளும் 'நான்தான் கப்பலை யோட்டும் மாலுமியாக இருப்பேன்!' என்று தங்களுக்குள் சண்டையடித்துக் கொள்வார்கள். ஆனால் ஒருவருக்கும் கப்பலை எப்படி ஓட்டுவது என்ற பழக்கமும் இராது; பயிற்சியும் இராது; இயற்கைத் திறமையும் இராது. குருட்டு மாலுமிகள் தாங்கள் தாம் கப்பல் தலைவர்கள் ஆவோம் என்று குழப்பம் விளைவிப்பார்கள். கப்பல் நகராது. நீண்ட பிரயாணத்திற்காக கப்பலிலுள்ள சேமிப்புகளை யெல்லாம் பிரயாணிகள் சமமாகப் பங்கிட்டுத் தின்று கொண்டிருப்பார்கள். எல்லாச் சேமிப்புகளும் தீர்ந்து போனதும் அலுத்துப்போய் எவனையாவது ஒருவனை ஆட்சிக் கப்பலைச் செலுத்தும்படி விட்டுவிடுவார்கள். ஜனங்களின் ரட்சகன் என்று இச்சகம் சொல்லிப் பொது ஜனங்களால் அவன் அதிகார பதவிக்கு வந்ததும், நாளடைவில் கொடுங்கோலனாக (Tyrant) மாறிவிடுகிருன். ஐந்தாவதான யதேச்சாதிகாரமுடைய வல்லாட்சி (Despotism) உண்டாகிறது.

[இங்கு திருக்குறளில் உள்ள மடி இன்மை, கல்லாமை, புல்லறிவாண்மை, தெரிந்து வினையாடல் முதலான அதிகாரங்களைக் கருத்தூன்றிப் படித்து ஒப்புநோக்குக.]

கொடுங்கோலன் முதலில் தன்னை எதிர்ப்பார் யாருமில்லாமல் சர்வ வல்லமை படைத்தவனாக விளங்குவதற்குரிய சூழ் நிலைகளை உண்டாக்கிக் கொள்வான். பொதுஜன பக்கபலம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டே, தன் எதிரிகளாகக் கூடிய திறமைசாலிகளை யெல்லாம் 'சமூகத் துரோகிகள்-துவேஷிகள்' என்று சித்தரித்துக் காட்டி மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் ஒழித்துக் கட்டுவான். ஜனங்களுக்குக் 'கடன் நிவாரணம்' அளிப்பதாகவும் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கப் போவதாகவும் பிரசங்கம் செய்து கொண்டே, பணக்காரர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டு, விரோதிகளிடமிருந்து தன்னையும் ராஜ்யத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லித் தன் மெய்க்காவற் படையையும் இராணுவத்தையும் பெருக்கிக் கொள்வான். மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் பலவிதமான வாக்குறுதிகள் கொடுத்தும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு பிரசங்கங்கள் செய்தும் தன்னை நிலை நிறுத்திக்கொள்வான்.

எதிரிகளையெல்லாம் நிர்மூலமாக்கி, எதிர்ப்பார் யாருமற்ற சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்ட அவன், தன் தலைமைப் பதவி நீடிப்பதின் அவசியத்தை உணர்த்துவதற்காகவும், நாட்டின் முன்னுள்ள பலவேறு பிரச்னைகளைத் தள்ளிப் போடுவதற்காகவும், நாட்டின் சீரழிவிற்குக் காரணம் சொல்வதற்காகவும், புதுப் புது வரிகள் போட்டுப் பொது ஜனங்களிடமிருந்து பணம் வசூலிப்

பதற்காகவும், வெளிநாட்டு யுத்தம், உள்நாட்டு குழப்பம் போன்ற நெருக்கடிகளைக் கிளப்பிவிட்டுக் கொண்டேயிருப்பான். ஜனங்கள் அவனைக் கண்டு முணு முணுக்கத் தொடங்கினால், முதலில் அவர்களை நிராயுதபாணிகளாக்கி விட்டுப் பின்னர் பலாத்காரத்தைப் பிரயோகித்து அடக்கிவிடுவான். இவ்வாறு மிதமிஞ்சிய சுயேச்சையானது மிதமிஞ்சிய அடிமைத் தனத்தில் கொண்டு போய் விடுகிறது. இது அரசாங்கத்திற்கும் தனி மனிதனுக்கும் பொருந்தும். இத்தகையதொரு குடியாட்சியானது தனது அசக்தியான குழப்ப நிலையில், யதேச்சாதிகாரத்தையும் சர்வாதிகாரிகளையும் உண்டாக்கும் எனக் கண்டோம். இதற்கு ரோம சரித்திரம் ஓர் உதாரணம். இவ்வாறு பொதுக் குடியாட்சியானது அதன் அடிப்படைக் கொள்கையான சுயேச்சைத் தன்மை எல்லை மீறிப் போகும்போது அழிந்து போகிறது.

['யதேச்சாதிகார அரசியல் அமைப்புதான் சகலவிதமான ஆட்சி முறைகளிலும் மிகத் தீமையானது; மிக அநீதியான அரசியல் அமைப்பு' என்று கருதிய பிளேட்டோ, 'அந்த யதேச்சாதிகாரக் கொடுங்கோலாட்சிக்குச் சுலபமாகக் குடியாட்சிதான் பாதை வகுக்கிறது' என்று கூறி எச்சரிக்கை செய்கிறார். 'அரசியல் பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை எளிதில் ஏமாறக்கூடிய பாமர ஜனங்களின் கையில் விடக்கூடாது' என்பதுதான் பிளேட்டோவின் எண்ணம். ஆனால் நியமன முறையில் சுயநலமிகளும் ஆட்சிக்கு வந்து தங்களவர்களுக்காகப் பொதுமக்களை வேட்டையாடுவதையும் பிளேட்டோ அங்கீகரிக்கவில்லை. பெருவாரியான ஓட்டுகள் பெறத் தெரிந்த எவனையும் உடனே ராஜ்யத்தை நிர்வகிக்கத் தெரிந்தவன் என்றும் விருப்பு வெறுப்பற்ற நல்ல மனிதன் என்றும் கற்பித்துக்கொள்ளுகிறார்கள். அது தவறான முறை என்பதுதான் பிளேட்டோவின் வாதம். நமக்கு ஒரு செருப்புத் தைக்கவேண்டுமென்றால் அதில் விசேஷப்பயிற்சி உள்ள செருப்புத் தொழிலாளியால் தான் முடியும். நமக்கு உடம்புக்குள் நோய் இருக்கிறதென்றால் அதைச் சிகிச்சை செய்வதில் கைதேர்ந்த ஒரு வைத்தியனைத்தான் நாடுகிறோமே தவிர அழகான வைத்தியனையோ, காதுக்கினிமையாகப் பேசக்கூடிய பிரசங்கியையோ நம்பி நம் உடம்பை விடுவதில்லை. அதைப்போலவே ராஜ்யம் முழுவதும் நோய் பிடித்திருக்கும் போது பாதுகாப்பிற்கும் நிர்வாகப் பொறுப்பிற்கும் திறமைசாலிகளையும் அனுபவஸ்தர்களையும் சிறந்தவர்களையும்நாடவேண்டாமா? ஆனால் அப்படித் திறமைசாலிகள் பொதுநலப் பிரியர்களாயும் இருக்கவேண்டாமா? அரசாங்க நிர்வாகத்தில் போக்கிரிகளும் வஞ்சகர்களும், சுயநலமிகளும், ஆண்மையற்றவர்களும் நுழையாமல் தடுக்கவும், பொது மக்களின் நன்மைக்காக ஆளக்கூடிய திறமைசாலிகளைத் தயாரிக்கவும் ஒரு திட்டம் கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் அரசியல் நீதித் தத்துவத்தின் முக்கியப் பிரச்னை; பிளேட்டோவின் 'லட்சிய ராஜ்யத்துக்கும்' அடிப்படை]

## இலட்சிய ராஜ்யத்தின் அடிப்படை

"மனிதனைப்போல் ராஜ்யம்"
—சாக்ரடீஸ் (குடியரசு)

'காடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், மேடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் எங்கு நல்ல ஆடவர் இருக்கிறார்களோ அங்குதான் நிலமே, நல்ல தன்மையுடன் விளங்குகிறாய்!'
—ஔவையார், புறநானூறு (187)

அரசியல் பிரச்னைகள் அனைத்துக்கும் மனித இயற்கைதான் அடிப்படையாக அமைந்துள்ளது. அரசியலைப் புரிந்துகொள்ள நாம் மனிதனின் மனோதத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

"மனிதர்களின் குணப்பண்புகள் மாறுவதுபோல் அரசாங்கங்களும் மாறும்" (குடியரசு 544). பிரஜைகளின் மனோ இயற்கைகள் மீதுதான் அரசியல்உற்பத்தி செய்யப்படுகின்றது. பிரஜைகள் எவ்வழியோ அவ்வழி அரசாங்கம். நல்ல பிரஜைகள் இருந்தால்தான் நல்ல அரசாங்கத்தை எதிர்பார்க்க முடியும். சட்டசபைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி விடுவதால் மட்டும் பலனில்லை. மனிதர்களின் மனோபாவனைகளையே மாற்றியமைத்தால் தான் பரிகாரம் காண முடியும்.

அரசியல் நீதிவேறு, தனிமனிதனின் நீதிவேறு என்பது சரியல்ல. இரண்டு நீதிகளும் அடிப்படையில் ஒன்றுதான். நாட்டில் ஆளுபவர்கள் ஆளப்படுபவர்கள் என இரண்டு பிரிவுகள் உண்டு. ஆளுபவர்கள் தொகை அளவில் சிறிதாயிருந்தாலும் ஆளப்படுபவர்களைவிட அறிவு ஆற்றல் மிகுந்திருந்தால்தான் நாடு நலம் பெறும். அப்போதுதான் அரசியல் நீதி பிறக்கிறது. அதற்கு மாறுபட்ட நிலைதான் அநீதியான அரசியல். அதுபோலத் தனி மனிதனின் உள்ளம் ஆளும் தன்மையதாகவும் உடல் ஆளப்படும் தன்மையதாகவும் அமைந்திருக்கிறது. உள்ளம் அளவில் சிறிதானாலும் அறிவாற்றல் மிகுந்திருந்து உடலை அடக்கியாண்டால் தான் மனிதன் நீதி நேர்மை உள்ளவனாகிறான்.

இனி அரசியல் தத்துவம் நுணுகி ஆராயவேண்டிய மனிதப் பண்புகள் யாவையெனக் கவனிப்போம்.

மனித நடத்தையானது முக்கியமாக மூன்றுவிதக் குணப் பிரிவுகளைக் கொண்டதெனப் பிளேட்டோ கருதுகிறார். மனிதனின் அடிப்படைக் குணங்களாவன:

1. இச்சை அல்லது காமம் (Desire)

2. ஆற்றல் உணர்ச்சி அல்லது உத்வேகம் (Spirited or Emotional)

3. பகுத்தறிவு அல்லது ஞானம் (Rational or knowledge)

இவற்றைச் சுருக்கமாக இச்சைப் பண்பு, ஆற்றல் பண்பு, அறிவுப் பண்பு என்று கூறலாம்.

1. ஐம்புலன் இச்சை; பசி; உணர்ச்சித் துடிப்பு; இயற்கையுணர்ச்சி இவற்றை நாயகமாகக் கொண்டது இச்சைக்குணம். 2. உணர்ச்சிக் கொந்தளிப்பு; இலட்சிய வேட்கை; துணிச்சல்; வீரம்; மரணத்திலும் குதித்து விளையாடும் போராண்மை, புகழ் வெறி, ஆற்றல் சக்தி இவற்றை நாயகமாகக் கொண்டது உணர்ச்சி உத்வேகக் குணம் அல்லது ஆற்றல் பண்பு. 3. சிந்தனை; பகுத்தறிவு; நல்லது கெட்டதை ஊடுருவிப்பார்க்கும் தீர்க்க ஆலோசனை; படிப்பறிவு; மெய்யறிவுப்பயிற்சி, நிதானப் புத்தி; இவற்றை நாயகமாகக் கொண்டது பகுத்தறிவுக் குணம். பிளேட்டோ கூறும் இந்த மூன்றுவிதக் குணங்களையும் முறையே பகவத்கீதை கூறும் தாமஸ குணம், ராக்ஷஸ குணம், ஸத்துவ குணம் என்ற முக்குணங்களுக்கும் ஓரளவு ஒப்பிடலாம். இவற்றின் வெளிப்படை முறையே (1) இச்சா சக்தி (2) கிரியா சக்தி (3) ஞானசக்தி என்றும் கூறலாம்.

இச்சைக் குணமானது, மனிதனின் உடம்பை இருப்பிடமாகக் கொண்டது; உடம்பைப்பற்றியது; அடிப்படையில் காமத்தன்மை வாய்ந்தது. ஆற்றல் பண்பான உணர்ச்சி உத்வேகக் குணமானது, மனிதனின் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டது; உடம்பைப் பொருட் படுத்தாதது; இரத்தத் துடிப்பிலும் இரத்தம் பீறிடுவதிலும் மலர்ச்சி பெறுவது; அடிப்படையில் வீர உணர்ச்சியைக் கொண்டது. பகுத்தறிவுக் குணமானது தலையின் மூளையை இருப்பிடமாகக் கொண்டது; உடம்பு உள்ளம் இரண்டையும் பொருட்படுத்தாதது. அஃது இச்சையின் கண்ணுக விளங்குவதால், ஆத்மக்கப்பலை நிர்வகிக்கும் மாலுமியாக விளங்கச் சக்தி பெற்றது.

இந்த மூன்றுவிதக் குணங்களும் சக்திகளும் எல்லா மனிதர்களிடமும் குடி கொண்டிருக்கின்றன; ஆனல் ஒரே அளவில் அல்ல. பெரும்பாலானவரிடம் இச்சைக் குணம் அதிகமாக இருக்கிறது. வேறு சிலரிடம் ஆற்றல் உணர்ச்சியின் உத்வேகக் குணம் அதிகமாக இருக்கிறது. மற்றும் வேறு சிலரிடம் பகுத்தறிவுக் குணம் அதிகமாகக் காணப்படுகிறது.

இச்சைக் குணத்தின் பேருருவாக இருப்பவர்கள்தாம் (தாமஸ குணத்தினர்தாம்) எண்ணிக்கையில் அதிகமானவர்கள். இவர்

கள் தங்கள் கவலைகளிலேயே மூழ்கிக் கிடப்பார்கள். பொருள் தேடுவதையும் உழைப்பதையுமே நாட்டமாகக் கொண்டிருப்பார்கள். ஆடம்பரத்தையும் எளிமையையும் புலன் இச்சைகளையும் அதிகமாக விரும்புவார்கள். குடும்பத்தைப்பெரிதாக மதிப்பார்கள். பேராசை, தந்நலம், சுயலாபம், போட்டி, பொறாமை, சச்சரவு, இவைகள் அபரிமிதமாக இவர்களிடம் தென்படும். இவர்கள் தாம் பலவிதமான தொழில்களையும் வியாபாரங்களையும் பெருக்குபவர்கள். இச்சைக் குணம் மிகுந்தவர்களைத் தொழிலாளிகள் அல்லது வியாபாரிகள் என்று சொல்லலாம். இவர்களின் ஆனந்த மெல்லாம் சந்தைக்கடை இரைச்சலிடையே சரக்குகள் மீது இருக்கும். ஆற்றல் உணர்ச்சியின் உத்வேகக் குணம் மிகுந்துள்ளவர்களோ, (ராக்ஷஸக் குணத்தினரோ) உணர்ச்சியின் கோபுரமாகவும் தைரியத்தின் வீரக்கல்லாகவும் இருப்பார்கள். எதற்காகச் சண்டை போடுகிறோம் என்று கவலைப்படாமல் வெற்றி ஒன்றையே பிரதானமாகக் கருதுவார்கள். அவர்களுக்கு வேண்டியது இலட்சியப் போராட்டமும் வீரப் புகழும் வெற்றியுமே தவிர, அவற்றின் பலா பலன்களல்ல. அவர்களின் ஆனந்த மெல்லாம் போர்க்களத்திலே இருக்குமே தவிர, சந்தைச் சரக்குகளிலல்ல. இத்தகைய குணமுள்ளவர்கள்தாம் உலகெங்கும் போர் வீரர்களாகவும் கப்பல் படைவீரர்களாகவும் விளங்குகிறார்கள்.

கடைசியாகச் சொன்ன ஞானத் தெளிவுள்ள பகுத்தறிவுக் குணம் மிகுந்துள்ளவர்களோ, (ஸத்துவக் குணத்தினரோ) எண்ணிக்கையில் மிகவும் குறைவாகத்தான் இருப்பார்கள். மெய்யறிவு, சிந்தனை, படிப்பு, ஆராய்ச்சி, இவற்றிலேயே ஆனந்தம் காண்பார்கள். இவர்களைத் தத்துவ ஞானிகள் அல்லது பகுத்தறிவாளர்களென்று சொல்லலாம். இவர்களுக்குச் சந்தைக்கடைச் சரக்குகள் மீதோ, போர்க்களத்துச் வெற்றிமீதோ விருப்பம் இராது. சந்தையையும் போர்க்களத்தையும் விட்டு ஒதுங்கி, ஆசிரமங்களிலோ எங்காவது ஒரு மூலையில் ஏகாங்கிகளாகவோ இருப்பார்கள். இவர்களின் போக்கு ஜன சமூகத்தில் கொந்தளிப்பை உண்டாக்கக்கூடிய தீ அல்ல; ஜன சமூகம் நன்றாக உண்டு வாழ வெளிச்சம் உதவும் அறிவு விளக்கு. இந்த விவேக விளக்குகளை அரசியல் இன்னும் உபயோகப்படுத்திக் கொள்ளாமலிருப்பது துரதிஷ்டமே!

அறிவுக் குணத்தின் இயல்பு ஒரு விஷயத்தைப் பகுத்தறிவது, திட்டம் தீட்டுவது, வழி காட்டுவது, கட்டுப்படுத்தி நிர்வகிப்பது. சுருக்கமாகச் சொன்னால் பரிபாலனம் செய்வது. ஆற்றல் உணர்ச்சியான உத்வேகக் குணத்தின் இயல்பு, அறிவுக்கு ஒத்துழைப்பது. இச்சைக் குணத்தின் இயல்போ அறிவுக்குக் கட்டுப்பட்டிருப்பது. இந்த நிலையில் இருந்தால் மனிதன் சீராக இருப்பான்.

இச்சைப் பண்பு ஆற்றல் பண்புக்கு அடங்கியும், ஆற்றல் பண்பு அறிவுப் பண்புக்கு ஒத்துழைத்தும் வந்தால்தான் மனிதன் நீதி நெறியில் நிலை நிற்க முடியும். ஜீவரதத்தில் இச்சா சக்தி, கிரியா சக்தி என்ற இரண்டு குதிரைகளைப் பூட்டி அவற்றை அடக்கி ஓட்டும் சாரதியாக ஞானசக்தி ஏறி அமர்ந்தால்தான், ஜீவரதம் நேரான நீதிப்பாதையில் செல்லும். இல்லையெனில் கவிழ்ந்து விடும்; அல்லது தவறான பாதையில் செல்லும்.

மேற்கூறிய மூன்றுவிதமான குண இயல்பினரைக்கொண்டு, மனித சமுதாயத்தை மூன்றுவித வகுப்பினராகப் பிரிக்கலாம். அவையாவன: 1. அறிவாளர்களான பரிபாலகர் வகுப்பு (Guardians). 2. உணர்ச்சி உத்வேகத்தினரான போர் வீரர்கள் அல்லது இராணுவ வகுப்பினர். 3. இச்சைக் குணத்தினரான சாமானிய மக்கள் (தொழிலாளர், வியாபாரிகள் வகுப்பு)—பரிபாலன வகுப்பு; போர் வீரர் வகுப்பு (நல்ல வேளை, பிளேட்டோவின் பிரிவினையில் நான்காவது வகுப்போ பஞ்சம ஜாதியோ கிடையாது!)

இச்சைக் குணத்தைக் கட்டுப்படுத்தி, ஆற்றல் உணர்ச்சியின் உத்வேகக் குணத்தை உபயோகப்படுத்தி, அறிவுக்குணம் பரிபாலனம் செய்தாலல்லவா மனிதன் செம்மையாக ஒழுங்குடன் நீண்ட காலம் வாழமுடியும்? 'மனிதனைப்போல ராஜ்யம்' என்ற பிளேட்டோவின் கருத்துக்கு இணங்க அவரது இலட்சிய ராஜ்யத்தில் அறிவாளிகளான பரிபாலக வகுப்பினர் ராஜ்யத்தை ஆளுவார்கள். இராணுவ வகுப்பினர் உணர்ச்சி உத்வேகத்துடனும் இராஜ விசுவாசத்துடனும் தேசியக் கடமையுடனும் அரசாங்கத்தைப் பாதுகாப்பார்கள். சாமானிய மக்களான தொழில் வகுப்பினர், பரிபாலகர்களின் தலைமைக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து, அரசியலில் குறுக்கிடாமல் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வார்கள். அஃதாவது, பிளேட்டோவின் 'இலட்சிய ராஜ்யத்தில்' தொழில் வகுப்பினர் ராஜ்யத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வார்கள்; ஆனால் ராஜ்யத்தை ஆளமாட்டார்கள்;—இராணுவ வகுப்பினர் ராஜ்யத்தைப் பாதுகாப்பார்கள்; ஆனால் அவர்களும் ராஜ்யத்தை ஆள மாட்டார்கள்;—ஆனால் உண்பிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் பகுத்தறிவாளர்களான ஞானிகளோ, அவ் விரண்டையும் (உற்பத்தியையும் பாதுகாப்பையும்) உபயோகப் படுத்திக்கொண்டு ராஜ்யத்தை ஆளுவார்கள்! அறிவின் பரிபாலனம் இல்லாவிடில் இச்சைகள் கட்டுப்பாடற்றுப் போய் பலஹீனமும் சீர்குலைவும் குழப்பமும் ஏற்படுவதுபோல் அறிவாளர்களின் தலைமை இல்லாவிடில் ஜனசமூகம் கட்டுப்பாடற்றுப் பலகுன்றிக் குழம்பிச் சீர்குலைந்து போகும். "செல்வத்தால் நெஞ்சு நிமிர்ந்த தொழில் பிரமுகன் அரசனானால் நாசம் வரும்" (434) என்று பிளேட்டோ கூறுகிறார். இராணுவத் தலைவன் ராஜ்யத்தில் இராணுவ ஆட்சியை ஸ்தாபிக்கத் தன் படைகளை உபயோகப் படுத்தினாலும் நாசம்

வரும். உற்பத்தியாளனுன தொழில் வகுப்பினன் பொருளாதாரச் சந்தையிலும், இராணுவ வகுப்பினன் போர்க்களத்திலுமே சிறந்து விளங்குவார்கள். அரசாட்சியில் நுழைந்தால் ராஜரீகமே (Statesmanship) கெட்டுப்போகும். ஏனெனில் ராஜரீகம் என்பது ஒரு தனி வித்தை; விஞ்ஞானத்தைப்போல ஒரு தனிக்கலை; பிற வித்திறமை! அதற்காகவே நீண்டகாலம் பயின்று அதற்காகவே வாழ்ந்தால்தான் ராஜரீகக் கலை சிறந்து விளங்கும்.

ஒவ்வொரு மனிதனிடமும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என மூன்று குணங்கள் இருப்பதாகச் சொன்னேம். ஜீவ ரதத்தில் இச்சா சக்தி, கிரியா சக்தி என்னும் இரண்டு குதிரைகளைப் பூட்டி அவற்றை அடக்கி யோட்டும் சாரதியாக ஞான சக்தி ஏறி அமர்ந்தால்தான் ரதம் நேரான நீதிப்பாதையில் செல்லும்; இல்லையெனில் இடைவழியில் கவிழ்ந்துவிடும். அல்லது தவருனபாதையில் செல்லும். அப்போது தனி மனிதனிடம் அநீதி பிறக்கிறது.

அதுபோல அரசியல் ரதமானது தொழில் வகுப்பினர், ராணுவ வகுப்பினர் என்னும் இரண்டு குதிரைகளால் பூட்டப்பெற்று அவற்றை அடக்கி யோட்டும் சாரதியாக மெய்யறிவாளர் ஏறி அமர்ந்தால்தான் நேரான நீதிப்பாதையில் செல்லும்; இல்லையெனில் அரசியல் ரதம் அநீதிப் பாதையில் சென்று இடை வழியில் கவிழ்ந்து விடும்.

சரியான பயிற்சியில் ஸத்துவகுணத்தின் ஞான சக்தியானது மெய் அறிவாகவும், ராக்ஷஸக் குணத்தின் கிரியா சக்தியானது வீரமாகவும், தாமஸகுணத்தின் இச்சா சக்தியானது தன்னடக்கமாகவும் பரிணமிக்கின்றன எனச் சொல்லுகிருர்கள். இவை மூன்றும் ஒன்றிற்கொன்று இயைந்து ஒழுங்காக இயங்கினல் அந்தக் குண நிறைவுதான் நீதி அல்லது அறம் அல்லது தருமம் என்று பிளேட்டோ வலியுறுத்துகிருர். 'இது தனிமனிதனின் நீதிக்கும் அரசியல் நீதிக்கும் பொருந்தும்' என்று கூறி, 'தனி மனிதனின் விரிவுதான் ராஜ்யம், ராஜ்யத்தின் ஒரு சிறு உறுப்புதான் மனிதன்' என்று உணர்த்துகிருர். பகுத்தறிவாளர்கள் அல்லது ஞானி ராஜாக்கள்தாம் நாட்டின் நலத்திற்கு வழிகாட்ட முடியும் என்பதும் அவரது ஆணித்தரமான அரசியல் சித்தாந்தம்.

மெய்யறிவாளர்கள் அரசர்களாய் இருந்தாலோ, அல்லது இவ்வுலகின் அரசர்களுக்கும் ஆளுபவர்களுக்கும் தத்துவக்கலையின் சக்தியும் உத்வேகமும் இருந்தாலோ—அரசியல் தலைமையும் மெய்யறிவும் ஒரே மனிதனிடம் அமைந்திருந்தாலேதான் மனித ஜாதி சகலவிதமான துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறும்!

இதுதான் பிளேட்டோவின் சிந்தனை அனைத்துக்கும் அஸ்திவாரம்!

3365

அரசியலுக்கு எது அஸ்திவாரம்? மெய்ஞ்ஞானிகள் ராஜ்யத்தை ஆள்வதா? இதென்ன விந்தை? மானிட ஜாதிக்கு உபயோகமற்ற சரக்குகள் என ஆசிரம மூலைகளிலே ஒதுக்கித் தள்ளப்பட்ட தத்துவ ஞானிகளா அரசாளத் தகுந்தவர்கள்? உலகம் மாயை என்று ஒளிந்துதிரியும் ஞானக் கிறுக்கர்களின் கையிலா அரசாட்சியை ஒப்படைப்பது? இதென்ன கேலிக்கூத்து?

'உழவனை அரசியலில் அமர வைத்தால்தான் விவசாய நாடு செழிப்புறும். இராணுவத்தான் அமைச்சனானால் அரசியல் ரணகளமாகும். வியாபாரியை அமர்த்தினால், குடிமக்களின் சுகம் வாடும். மறையோதுபவன் மதியமைச்சனானால் சமநீதி குடை சாயும்!' என்று நம் ஔவைப்பாட்டி சொல்லியிருக்கிறாளே! அதற்கு நேர்மாறாக அரசியல் நீதியை மெய்ஞ்ஞானிகள் கையில் ஒப்படைக்க வேண்டுமெனப் பிளேட்டோ முழக்கமிடுகிறாரே! பெரிய பெரிய தத்துவ கிரந்தங்களைப் படித்து, புராண இதிகாசங்கள் கூறி திருமறைபாடுபவர்களா அரசியல் நீதியைத் திருத்தமுறச் செய்பவர்கள்? கடவுளின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு மனித சமுதாயத்திலிருந்து ஒதுங்கியவர்களாய் நடந்துகொள்ளும் ஆஷாடபூதிகளுக்கா அரசியலை அர்ப்பணிக்கவேண்டும் என்கிறார் பிளேட்டோ? இல்லவே, இல்லை! அவர்கள் வெறும் புத்தகப் புழுக்கள்; அத்தகைய நிஜத்துறவிகளும் கூடப் பொய் வேடதாரிகளைப்போல் மனிதனுக்கோ கடவுளுக்கோ பிரயோஜனப்படாத போலிகள் என்று பிளேட்டோ கருதுகிறார். கடவுளை ஜாலவித்தைக்காரர் எனப் பொய் உருவம் கொடுத்து செப்படிவித்தை செய்துபிழைக்கும் சூனியக்காரர்கள் என்றும், கடவுளைப் பற்றிப் பொய்யான புராணங்கள் பாடுவதைத் தடைசெய்ய வேண்டுமென்றும், பிளேட்டோ கூறியவராயிற்றே? அவ்வாறானால் பிளேட்டோ குறிப்பிடும் உண்மையான மெய்ஞ்ஞானிகள் யார்? மெய்யறிவு என்றால் என்ன?

## மெய்யறிவாளர் யார்?

"உண்மையான ஞானியானவன் ஒவ்வொன்றிலும் மெய்ப்பொருள் எதுவோ அதையே நாடுவான்"

—சாக்ரடீஸ் (குடியரசு)

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு"

—திருவள்ளுவர் (மெய்யுணர்தல் 355)

உலகிலுள்ள எந்தப் பொருளிலும் பொய்யும் மெய்யும் கலந்திருக்கின்றன. அழகில் நிஜ அழகு பொய் அழகு, என இரண்டு கலந்திருக்கிறது. பொய்யில் கூட 'நிஜப் பொய்' 'பொய்ப் பொய்' என இரண்டு உண்டு. பொய்யை நீக்கி மெய்யைப் பகுத்துணர்

வதுதான் மெய்யறிவு; நிஜ அழகு நிஜ நல்லது முதலானவற்றை நம் அறிவினால் உணர்கிறோமே தவிரக் கண்ணால் பார்ப்பதில்லை.

கண்ணால் காணப்படும் உலகம் வேறு; அறிவால் ஆராயப் படும் உலகம் வேறு.

அறிவு என்றால் அபிப்பிராயம் அல்ல. அபிப்பிராய அறிவு சந்தர்ப்பத்தை யொட்டி மாறக்கூடியது. ஆனால் மெய்யறிவு என்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் மாறாதது. எதிலும் சந்தேக மற்ற நிச்சயமான அறிவுதான் மெய்யறிவு.

கட்டில்கள் பலவகை வடிவங்களில் பலவகைத் தோற்றங் களாகச் செய்யப்பட்டாலும் ஒரு மூலஅமைப்பின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகின்றன. அந்த வடிவங் களின் ஒரு மூலக்கருத்தைப் (Idea of Forms) பகுத்தறிவதுதான் மெய்யறிவாகும்.

மெய்யறிவாளர்கள் ஒவ்வொன்றின் தோற்றங்களைக் கண்டு மாறுபாடான அபிப்பிராயங்கள் கொள்ளாமல் அவற்றின் அடிப் படையான மூலக் கருத்தை ஆய்ந்து அறியக் கூடியவர்களாய் இருப்பார்கள். ஒவ்வொரு பொருளின் உண்மைத் தன்மையை யும் அறிய முயல்வார்கள். அதற்குத் தேவையான நுண்ணறிவும் அனுபவ அறிவும் வாய்ந்தவர்களாய் இருப்பார்கள்.

மெய்யறிவாளர்களான தத்துவஞானிகளுக்கு அமைந்திருக்க வேண்டிய தன்மைகளாவன:

1. உண்மையான அனைத்தைப் பற்றியும் அறியவேண்டு மென்கிற பேராவல் மிகுந்தவர்களாயிருப்பார்கள். 2. பொய்ப் பித்தலாட்டங்களை வெறுத்து, மெய்மை மெய்ப்பாடுகளிடம் ஈடு பாடுள்ளவர்களாய் இருப்பார்கள். 3. புலன் இச்சைகளுக்கும் கேளிக்கைகளுக்கும் பிரதான்யம் கொடுக்காமல் புலன் அடக்க முள்ளவர்களாய் இருப்பார்கள். 4. பணவிஷயங்களில் பேராசை இல்லாதவர்களாயும் அலட்சியமாயும் இருப்பார்கள். 5. பெருந்தன்மையும் தாராள சுபாவமும், உயர்ந்த மனோபாவனை களும் உள்ளவர்களாய் இருப்பார்கள். 6. நீதிநேர்மையும் கண்ணியமான தன்மையும் வாய்ந்தவர்களாக இருப்பார்கள். 7. எதையும் விரைவில் புரிந்து கொள்கிற கூர்மையான அறிவாற் றலும் சிறந்த ஞாபகசக்தியும் படைத்தவர்களாக இருப்பார்கள். 8. இசைலயமான ஒழுங்கான ஒன்றுக்கொன்று இயைந்த சுபா வப் போக்குகளின் குணநிறைவு உள்ளவர்களாய் இருப்பார்கள்.

இத்தகைய மெய்யறிவாளர்களே ஆளும் பரிபாலன வகுப் பினராக ஆகவேண்டும். வீரநெஞ்சும், பண்பட்ட மிருதுவான சுபாவமும் வாய்ந்த இலட்சிய வாலிபர்கள் இராணுவ வகுப்பின ராக வேண்டும். சாமானிய சுபாவங்கள் படைத்த பெருவாரி யான மக்கள், ஆளப்படும் தொழில் வகுப்பினராக வேண்டும்.

நல்லது; ஒப்புக் கொள்ளலாம்; ஆனல்.........

தனி மனிதனிடம் மூன்று குணங்களையும் மாபெரும் மனித சமுதாயத்தை மூன்று வகுப்பினராகவும் பிரித்துப் பார்ப்பது சுலபம். ஆனல் ஆளும் திறமையையும் வீரத்திறமையையும் தொழில் திறமையையும் எப்படிக் கண்டுபிடிப்பது? எவனெவனிடம் எந்தெந்தத் திறமை இயற்கையாக அமைந்திருக்கும் என்று அறிவது? நாட்டில் ஆளும் வகுப்பு, இராணுவ வகுப்பு, தொழில் வகுப்பு என்று எப்படி நிலைநிறுத்துவது? பிறப்பை ஒட்டியா? கூடவே கூடாது! எந்தக் குப்பையில் எந்த மாணிக்கம் இருக்கும், எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று சொல்ல முடியாது! செருப்புத் தைப்பவனின் குழந்தைக்கு ராஜ்யத்தை ஆளும் திறமை 'பிறவிமேதை'யாக இருக்கலாம். உழவன் மகனுக்கு மகாகாவியங்களும் தத்துவ கிரந்தங்களும் எழுதும் 'பிறவித் திறமை' இருக்கலாம். ராஜ்யத்தை ஆளுபவன் குழந்தைக்கு புதுப்புது வர்ணச் சாயங்களைக் கண்டு பிடிக்கும் திறமை இருக்கலாம். இராணுவத் தலைவனின் மகன் படுகோழையாக இருக்கலாம். ஞானபண்டிதரின் மகன் அடிமுட்டாளாயிருக்கலாம். பிறக்கும் குடும்பத்திற்கும் 'பிறவித் திறமை'க்கும் சம்பந்தமே இல்லை. தவிர, திறமையை ஒட்டி வகுப்புகளைப் பிரிக்காமல் பிறப்பை ஒட்டி ஜாதிகளைப் பிரிப்பதைப் போல ஒரு தேசத்துக்கு க்ஷீணத்தை உண்டாக்கக் கூடியது வேறெதுவுமில்லை. பிறவித் திறமை மழுங்கிவிடுமென்பதோடு ஜாதித் துவேஷங்கள் கிளம்பி தேசத்தின் சக்தியே நலிந்து போகும். எந்த விதத்திலும் ஜாதி உணர்ச்சியோ, அதன் காரணமாக ஜாதித்துவேஷமோ ஏற்பட வழி வகுக்கக்கூடாது.

[இங்கு நம் பிளேட்டோ, வர்ணசிரம தர்மத்தையோ பரம்பரைக் குணத்தையோ ஒப்புக் கொள்ளவில்லை யென்பதை ஊன்றிக் கவனிக்கவேண்டும். பிறப்பை ஒட்டி ஜாதிகளைப் பிரிக்கும் வருணசிரமதர்மத்தையும் ஜாதியாசாரங்களையும் இந்தியா போற்றி வளர்த்ததால் எவ்வளவு பிற்போக்காகவும் திறமையற்ற க்ஷீணதசை நாடாகவும் இருந்துவந்திருக்கிறது என்பது இந்துதேச சரித்திரத்தைப் படித்தால் தெரியவரும். மனிதனின் சௌகரியங்களுக்கு உபயோகப்படும் ரயில், பஸ், ரேடியோ, தந்தி முதலான சகல விஞ்ஞானக் கலைகளையும் மேல் நாட்டில் தான் கண்டுபிடித்திருக்கிறர்கள். இந்தியாவிலோ தெற்கத்தி இட்லியையும் வடக்கத்தி ஜிலேபியையும் தவிர வேறெதையும் பிரமாதமாகக் கண்டுபிடிக்கவில்லை! அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டுகளைக் கண்டுபிடித்து அவை தங்களிடம் இருப்பதாகப் பிரசாரம் செய்வதன் மூலம் உலக மகாயுத்தத்தையே தடுக்கு மளவுக்கு மேல் நாட்டில் விஞ்ஞானக் கலை வளர்ந்திருக்கிறது. விஞ்ஞானம் மட்டுமல்ல, இலக்கியம், மருத்துவம் ஆத்மதத்துவம் முதலான சகலவிதமான துறைகளிலும் மேல்நாட்டின் திறமையே மேலோங்கி நிற்கிறது. நம் பாரத புண்ய பூமியில் மட்டும் அந்தத்

திறமை பூஜ்யமாயிருப்பதற்குக் காரணமென்ன? 'சக்கிலியன் மகன் சக்கிலியத் தொழில்தான் செய்ய வேண்டுமென்பது' போல், வருணசிரம தர்மத்தையும் ஜாதிகளையும் நிலைநிறுத்த நம் முன்னோர்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாகத் தங்கள் அறிவைப் பிரயோகித்து வந்திருக்கிறார்களே தவிர, அதன் மூலம் தேசத்தின் 'பிறவித் திறமை'யையே அடியோடு மழுங்கடித்து விட்டார்கள். ஜாதிகளுக்குள் பொறாமையும் துவேஷமும் ஏற்படாமலிருப்பதற்காக, "கர்மவினை; பூஜாபலன்; போன ஜன்மப் பாப புண்ணியம்; நீ அந்த தாழ்ந்த ஜாதியில் பிறந்திருக்கிறாய்!" என்று என்னென்னவோ தத்துவ சமாதானங்களெல்லாம் கற்பித்து வந்தார்களே தவிர, கடவுள் கோயிலுக்குள் நுழையவே அருகதையற்றவன் எனத் தாழ்த்தப்பட்ட நந்தன் ஞானபண்டிதர்களைவிடக் கடவுள் தத்துவத்தில் கரைகண்டவனாய் விளங்கியதையும், ஜாதியே இன்னதென்று தெரியாமல் கைத்தறி நெசவுத் தொழில் செய்து கொண்டிருந்த திருவள்ளுவர் உலகத்திற்கே ஞான விளக்குத் தந்ததையும், சிந்தித்துப் பார்த்தால், 'பிறக்கும் குலத்துக்கும் பிறவித் திறமைக்கும் சம்பந்தமே இல்லை' என்ற பிளேட்டோவின் கருத்தை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். பிறப்பை ஒட்டி ஜாதித் தொழில்களை வகுக்கும் வருணசிரம தர்மத்தால் ஒரு தேசத்தின் பிறவித் திறமையும் சக்தியுமே க்ஷீணித்துவிடும் என்று 2300 ஆண்டுகளுக்கு முன்பே சிந்தித்த பிளேட்டோவை நாம் மிகவும் பாராட்ட வேண்டும்!]

சரி, பிறவித் திறமைகளைக் கண்டு பிடிப்பது எப்படி? திறமையை ஒட்டி மனித சமுதாயத்தை மூன்று சமூகங்களாகப் பிரிப்பது எப்படி? பச்சைக் குழந்தைகளிடம் எந்த எந்த வகைப் 'பிறவித்திறமை' உள்ளனவென எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

கல்வித் திட்டத்தின் மூலந்தான்!

பிறவித்திறமையை வளர்ப்பதற்காகவே கல்வித்திறமை பயன்படவேண்டுமென்பது பிளேட்டோவின் கருத்து. அவர் கனவு காணும் 'இலட்சிய ராஜ்யத்தின்' அரசியல் ஒழுங்கிற்குத் தேவையான மனித இனங்களைக் கல்வி யென்ற யந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்வதுதான் பிளேட்டோவின் கல்வித்திட்டம்!

## கல்வித் திட்டம்

> "சரியான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டவர்கள் பொதுவாக நல்ல மனிதர்கள் ஆகிறார்கள்"
>
> —பிளேட்டோ (Laws, 643)

> "கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
> நிற்க அதற்குத் தக"
>
> —திருவள்ளுவர் (கல்வி, 391)

**கல்வியின் தேவை :** அனைவருக்கும் கல்வி அத்தியாவசியம். ஏனெனில்,

"ஒருவன் கல்வியைப் புறக்கணிப்பானுகில் அவன் தன் வாழ்நாள் முழுதும் நொண்டியாகவே நடக்கிறுன்; பரிபூரண மற்றும் ஒன்றுக்கும் உதவாக்கரையாகவே கீழுலகிற்குச் செல்லு கிறுன்." (Tiemaous, 44)

['கல்லாதவர்கள் உயிரோடிருக்கிறுர்கள் என்று சொல்ல லாமே தவிர ஒன்றும் விளையாத களர் நிலத்துக்கு ஒப்பானவர் கள்' என்று கூறிய நம் திருவள்ளுவரின் கருத்தை இங்கு ஒப்பு நோக்குக.]

"பகுத்தறிவையும் உண்மையான நம்பிக்கைகளையும் (கல்வியின் மூலம்) அடைபவன், தன் கிழ வயதில் அடைந்தாலும், ஆனந்தமாயிருக்கிறுன்" (Laws 653.)

என்று பிளேட்டோ கூறுவதின்மூலம், 'என்னெருவன் சாகுந்துணையும் கல்லாதவாறு' என்று நம் திருவள்ளுவரைப் போலக் கேள்வி கேட்டு, நம் சென்னை அரசாங்கத்தின் முதியோர் கல்வித் திட்டத்தையும் ஆதரிக்கிறுர்!

**சர்வஜனக் கல்வித் திட்டம்:** ராஜ்யத்திலுள்ள அனைவருக்கும் கட்டாயக்கல்வி அளிப்பதின் அவசியத்தை உணர்ந்தவரும், அதைத் தம் அரசியல் தத்துவத்தின் இருதய ஸ்தானமாகக் கொண்டவரும் உலக சரித்திரத்திலே பிளேட்டோதாம் முதல் சிந்தனையாளர்!

"உலகத்திலேயே தலைசிறந்த கல்விப் பரிசீலனை" என பிளேட்டோவின் கல்வித் திட்டத்தை நவீன சிந்தனையாளரான ரூஸோவும் போற்றிப் புகழ்கிறுர்.

ராஜ்யத்திலுள்ள எல்லாக் குழந்தைகளும் கல்விபெறச் சரி சமமான சந்தர்ப்பமும் ஒரேமாதிரியான கல்விப் பயிற்சியும் அளிக்கவேண்டும். குழந்தை வயதிலேயே ஆரம்பக்கல்வி பயிற்று விக்கும் சர்வஜன கட்டாயக் கல்வித்திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். ஏனெனில் எந்தக் குழந்தையிடம் எந்தவிதத் திறமை யும் மேதையும் இருக்கிறதெனச் சொல்லமுடியாது. ஏற்றத்தாழ்வு பாராமல் எந்தத் தொழிலாளியின் குழந்தைக்கும் எந்த இனத்த வருக்கும் சரிசமமான கல்வியளிப்பது இலட்சிய ராஜ்யத்தின் கடமையாகும்.

பெற்றேர்களின் பழக்க வழக்கங்கள் குழந்தைகளுக்கு ஏற்படாவண்ணம் பிரித்துவிட வேண்டும். பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பெற்றேர்களிடமிருந்து பிரித்துவந்து அரசாங் கத்தின் பொறுப்பில் வைத்துக்கொண்டு கல்வி பயிற்றுவிக்க வேண்டும். குழந்தைகளுக்கும் பெற்றேர்களுக்கும் சம்பந்த மில்லாமல் செய்யப் பெற்றேர்களைக் கிராமாந்திரங்களுக்கு அனுப்பிவிட வேண்டும். தகப்பன் செய்யும் குலத்தொழிலைக் குழந்தையும் செய்ய எந்தவிதத்திலும் அனுமதிக்கக்கூடாது.

தங்களுடைய குடும்பத் தொழில் இன்னதுதான் என்று பச்சிளங் குழந்தைகளின் உள்ளங்களில் நிர்ணயமாகிவிட்டால் அவற்றின் இயற்கையான 'பிறவித்திறமை அல்லது மேதை' அடியோடு மழுங்கிப்போகும். பிறப்பை ஒட்டிய தொழில் ஜாதிகள் உண்டாகி நாடே பிற்காலத்தில் க்ஷீணித்துவிடும்.

**கல்வியின் நோக்கம்:** "குருடனின் விழிகளுக்குள் பார்வையைத் திணிப்பதுபோல் ஆத்மாவினுள் அறிவைத் திணித்துவிடலாமென" சில கல்விமான்கள் தவருகச் சொல்லுகிறார்கள். "கல்வி கற்பதற்குரிய இயல்பும் சக்தியும் எந்த ஆத்மாவினுள்ளும் ஏற்கனவே இருக்கிறது என்பதுதான் நம்முடைய வாதம்." (குடியரசு, 518) புத்திசாலியான போக்கிரியின் கூர்மையான கண்களில் ஓர் அறிவுத் தீக்ஷண்யம் மின்னிப் பாய்வதைக் கண்டதில்லையா? அவனுடைய அறிவின் தீக்ஷண்யமும் கூர்மையான பார்வையும் தீமையின் சேவைக்கே தவருன வழியில் திரும்பியிருக்கிறது. ஆகவே, கண் பார்வையில்லாதவனுக்குக் கண்பார்வை அளிப்பது போல் கல்விமுறையின் நோக்கம் இருக்கக்கூடாது. ஏற்கனவே யுள்ள கண் பார்வையை இருட்டிலிருந்து வெளிச்சத்தை நோக்கிச் சரியான பாதையில் திருப்பிவிடுவதுதான் அதன் நோக்கமாயிருக்கவேண்டும். (Republic, 518)

"கல்வி என்ருல் குழந்தையிடம் இயற்கையாக அமைந்துள்ள இயல்பின் முதல் உணர்வுக்கு ஏற்றவாறு பழக்கங்களைக் கொடுக்கும் பயிற்சிதான் என்று நான் கருதுகிறேன்" (Laws, 653)

['மணல் கேணியில் தோண்டிய அளவுக்கே நீர் ஊறும்; அதைப்போல, கற்ற கல்வியின் அளவிற்கே அறிவு ஊறும்' என்று நம் திருவள்ளுவர் கூறுவதையும் கூர்ந்து நோக்கவும்.]

**ஆரம்பக் கல்வி:** "சுகமும் துக்கமுந்தான் குழந்தைகளின் முதலாவது புலனறிவுகள்; அந்த மூலவடிவங்களின் வழியாகத்தான் நன்மையும் தீமையும் குழந்தைகளின் வாழ்வில் முதலாவதாகப் படிகின்றன." (Laws)

சரியான சுகதுக்கம் எது, சரியான நன்மை தீமை எது என்று குழந்தைகளின் ஆரம்ப வயதிலே பயிற்றுவிப்பதுதான் ஆரம்பக் கல்வியின் முதல் வேலை. வேறெந்த வயதையும் விடக் குழந்தைப் பருவத்தில்தான் குணப்பண்பானது பழக்க வழக்கங்களின் மூலம் விரைவில் வேரூன்றுகிறது. கல்வியானது குழந்தைப் பருவத்தின் ஆரம்ப வருஷங்களிலிருந்து தொடங்கி வாழ்வின் இறுதிவரை நடைபெற வேண்டும்.

குழந்தைகளின் ஆரம்பக் கல்வியானது கதைகள் சொல்லுவதன் மூலம் ஆரம்பமாகவேண்டும். கடவுள் மாயாஜாலக்காரரைப்போல விதவிதமான அவதாரங்கள் எடுத்து வருவார் என்ற புராணக் கதைகளேயோ, மனிதர் செய்யத்தகாத இழிசெயல்களையெல்லாம் கடவுளர் செய்ததாகவும், ஒரு கடவுள் இன்னெரு கடவுளோடு சண்டைபோட்டு வஞ்சிப்பதாகவும்—

இவ்வாறு பலவிதமாகக் கற்பனை செய்யும் இதிகாச புராண காவியங்களையோ, நம் குழந்தைகளுக்குக் கண்டிப்பாகச் சொல்லிக்கொடுக்கக் கூடாது. இத்தகைய புராணக் கதைகளினால் குழந்தைகளின் உள்ளங்களில் கடவுள் பக்திக்குப் பதில் மூட நம்பிக்கைகளும் தீய எண்ணங்களுமே வளரும். அதற்குப் பதில் நேர்மையாளரான பெரியோர்களின் வரலாறுகளைக் கதைகளாகச் சொல்லிக்கொடுக்க வேண்டும். உண்மைக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் கல்விப்பயிற்சி அமையவேண்டும்.

"குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியானது வேடிக்கை விளையாட்டாகவே கற்பிக்கப்பட வேண்டும். அறிவு நூல்களைக் கட்டாயப்படுத்திச் சொல்லிக்கொடுத்தால் அவை குழந்தைகளின் மனதில் பதிவதில்லை." (Republic 536.)

வாத்தியார்கள் அந்தந்தப் பள்ளிக்கூடங்களுக்குள்ளேயே தனி ஜாகைகளில் வசிப்பவர்களாயும் வெளி நாடுகளிலிருந்து சம்பளத்திற்குத் தருவிக்கப்பட்டவர்களாயும், நல்லவர்களாயும், திறமைசாலிகளாயும் இருக்கவேண்டும்.

நகரிலுள்ள பள்ளிக்கூடங்கள் அனைவருக்கும் திறந்துவிடப்படவேண்டும். பெற்றோர்கள் இஷ்டப்பட்டால் குழந்தைகளைப் படிக்கவைப்பது என்றிருக்கக் கூடாது. நாட்டிலுள்ள அனைவருக்கும் கட்டாயமாகக் கல்வி பயிற்றுவிப்பது அவசியம்.

"குழந்தைகளைப் பெற்றோர்களின் சொத்தாகப் பாவிப்பதைவிட அரசாங்கத்தின் பொதுச் சொத்தாகக் கருத வேண்டும்!" (Laws 804)

**கல்வி முறை :** பிளேட்டோ கூறும் கல்விமுறை இரண்டு கூறுகளை உடையது. அவையாவன :

**1. உடற்கல்வி ;** (தேகப்பயிற்சி) **2. மனக்கல்வி ;**



(இயலிசை முதலான கலைப்பயிற்சியும், மனிதப் பண்புகளை வளர்க்கும் அறிவியல் பயிற்சியும்.)

உடல் வளத்துக்குத் தேகப்பயிற்சியும், மன வளத்திற்குக் கலைப் பயிற்சியும் அளிப்பது தான் பிளேட்டோவின் 'இலட்சிய ராஜ்யக்' கல்வி முறை.

மாணவர்களுக்குப் பத்து வயதுவரைஉடற் கல்விதான் பிரதானம் வகிக்கவேண்டும். ஒவ்

வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு விளையாட்டு மைதானமும் தேகப்பயிற்சிச் சாதனங்களும் கருவிகளும் இருப்பது முக்கியம். விளையாட்டும் உடற்பயிற்சியும் தாம் குழந்தைகளுக்குப் பிரிய மானவை; தேக வளத்திற்கும் தேச சுகாதாரத்துக்கும் அத்யாவசியமானவை: இத்தகைய உடற் கல்வியினால் தைரிய மனோபாவனை வளரும்; நோய்கள் அணுகா; அநாவசியமாக நாட்டில் மருந்துகளும் டாக்டர்களும் பெருகவேண்டியிரா.

"நோய்களுக்குக் கல்வி அளிப்பதுதான் இப்போதைய நம் மருந்துத் திட்டம் என்று சொல்லலாம்," (Republic 405-6)

நோயாளர்களையும், ஆண்மையற்றவர்களையும் பலஹீன மானவர்களையும் கொண்ட தேசம் உருப்படாது. நல்ல அரசிய லானது தேசத்தின் பொதுச் சுகாதாரத்திலிருந்தே ஆரம்பமாக வேண்டும். இவ்வாறு பிளேட்டோவின் 'இலட்சிய' ராஜ்யம் மாண வனின் உடம்பிலிருந்து ஆரம்பமாகிறது.

ஆனால் தேச நலத்துக்குக் குஸ்தி பயில்வான்களும் திடமான உடல்களும் மட்டும் இருந்தால் போதாது! தைரிய புருஷர்கள் இருந்தால் மட்டும் போதாது! மிருதுவான சுபாவமும் பண்பட்ட உள்ளங்களும் வேண்டும்! "**பெரும் தைரியத்தை உடைய மிருது வான சுபாவத்தை நாம் எவ்வாறு காணலாம்? ஏனெனில் அவை யிரண்டும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனபோலத் தோன்றுகின்ற னவே?**" (Republic 365.)

ஒருவேளை மனக்கல்வி இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடும். மனக்கல்வியான இயலிசைக் கலைப் பயிற்சிகளும் பாடங்களும் ஒருவனுக்குப் பண்பட்ட உள்ளத்தையும் மிருதுவான சுபாவத்தை யும் அளிக்கிறது. சங்கீதம் ஆத்மாவைத் தொட்டு உள்ளத்தை உருக்கிச் சுபாவத்தை நளினமாக்குகிறது; தேகவளத்தையும் பிரகாசத்தையும், பண்பட்ட உள்ளத்தையும் ஒருங்கே தருகிறது. ஒவ்வொரு பொருளிலும் உள்ள உண்மையான அழகை விரை வில் இனம் கண்டு கொள்ளக்கூடிய திறமையை வளர்க்கிறது. கணிதம், விஞ்ஞானம் முதலான சகல பாடங்களையும் கவிதை களாக்கி இனிமையான சங்கீதத்தின் மூலம் புகட்டினால் மாணவர் கள் மிக விரைவில் உற்சாகமாய்க் கற்றுக்கொள்ளுவார்களோ வென்றுகூட நினைக்கத் தோன்றுகிறது!

[தேவாரப் பதிகங்கள் பாடியவர்கள் கடவுளை இசைவடிவா கவும் இசைப் பயனாகவும் கருதியதையும், இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட தமிழ்ச்சங்க இலக்கிய காலத்தில் எல்லாவித அறிவுகளையும் இசை வடிவங்களில் செய்யுள்களாக ஆக்கியிருப் பதையும் இங்கு ஒப்பு நோக்குக.]

இயல் இசைப் பயிற்சிக்கு அடுத்தபடியாக மனக் கல்வியில் முக்கியத்துவம் பெறுவது கணிதம் முதலான அறிவு நூல் பயிற்சி ஆகும்.

**கணித பாடம்:** கணித பாடத்தினல் வாழ்க்கையில் எந்தவித நேரடியான பிரயோஜனமு மில்லாவிட்டாலும், அது நம் மூளை யைக் கூர்மையாகத் தீட்டிவைக்கச் சாணைக்கல்லாக உபயோகப் படுகிறது! அசமந்தமான சுபாவங்களைத் தட்டி யெழுப்பி எதையும் விரைவில் கிரகித்து மனதில் பதியவைக்கும் புத்திக் கூர்மையை அளிக்கிறது. அறிவுப் பண்பை வளர்க்கும் அறிவு நூல்களில் முதன்மையானது-ஒன்று, இரண்டு, மூன்று என எண் ணிக்கை போடுகிறேமே அந்த **எண் கணக்கியலே** (Arithmetic) ஆகும். அது துருப்புகளை அணிவகுத்துச் செல்லும் போர் வீரனுக்கு அத்தியாவசியமாயிருப்பது போலவே, மெய்யறிவை நாடிச் செல்லும் மெய்ஞ்ஞானிகளுக்கும் அத்தியாவசியமாயிருக்கிறது. இந்த எண் கணக்கியலில் வல்லவர்கள் மற்ற அறிவியல் நூல்களை வெகு விரைவில் கற்றுணரக் கூடியவர்களாயிருப்பதும் கண்கூடு.

['எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு' என்று நம் திருவள்ளுவர் 'எண்' இயலுக்கு முதலிடம் கொடுத்திருப்பதையும், 'அரிச்சுவடியில் ஆரம்பமாகும் நம் பழைய தமிழ்க் கல்வித்திட்டத்தில் பெருக்கல் வாய்ப்பாடு கீழ்வாயிலக்கணம், முந்திரி இலக்கணம் என்பனபோல் கணக்கிய லுக்கு பிரதானம் கொடுத்திருப்பது நம்மை வியாபாரிகளாக்கு வதற்காக அல்ல; நம்முடைய அறிவைக் கூர்மையாக்குவதற் காகவே' என்பதையும் சிந்தித்துப் பார்க்க.]

இதற்கு அடுத்தபடியாக 'ஜியாமெட்ரி' என்று கூறப்படும் **க்ஷேத்திர கணிதம்** (Geometry) முக்கியமாகும். க்ஷேத்திர கணித பாடமானது யுத்த வீரர்களின் க்ஷேத்திராடனத்திற்கு உபயோகப் படுவது போலவே, மெய்யறிவைத் தேடிச்செல்லும் மெய்ஞ்ஞானி களின் க்ஷேத்திராடனத்திற்கும் அத்தியாவசியமானது. அதைத் தொடர்ந்து கனபரிமாண உருக் கணக்கியல் (Mensuration) முக்கிய மாகும். நம் நவீன காலத்திய அறிஞரான பெட்ரண்டு ரஸ்ஸலை (Bertrand Russell,) ஐப் போல முற்காலத்திய அறிஞரான பிளேட் டோவுக்கும் கணிதபாடமானது மெய்ஞ்ஞானத்தின் திறவுகோ லாகப் படுகிறது! அவர் ஸ்தாபித்த கலைக்கழகத்தின் முகப்பு வாசலில், 'க்ஷேத்திர கணித அறிவில்லாத எவனும் இங்கே நுழைய வேண்டாம்' என்ற பொன்மொழியைப் பொறித்திருந்தாராம்!

கணித பாடங்களுக்கு அடுத்தபடியாக பௌதிக நூலான இயக்கவியல் (Physics) பாடமும், வான சாஸ்திர (Astronomy) பாடமும், கடைசியாக அறிவு நூல்களின் ஆய்வியலான தர்க்க சாஸ்திரமும் (Dialectic), போதனுமுறையில் இடம்பெறவேண்டும் என்று கருதுகிறர் பிளேட்டோ.

"**தர்க்க சாஸ்திரத்தைவிட மேலான அறிவுநூல் வேறெதுவும் இல்லை. அஃது அறிவின் மெய்யான எல்லையைக் கண்டு விடுகிறது**" என்று சிறப்பித்துக் கூறுகிறர்.

ஆனால் வெறும் அறிவியல் கலைப் பயிற்சியான மனக்கல்வியானது வெறும் உடற்கல்வியைப் போலவே விபரீதத்தை விளைவிக்கக் கூடியது. வெறும் உடற்கல்வி மட்டும் பெறுபவன் உடல் திமிரேறி இதயப் பண்பில்லாதவனாய் மூர்க்க மிருகம் போலவே இருப்பான். இத்தகைய மிருகங்களால் ஜன சமூதாயத்தில் அமைதியோ பண்பாடோ இராது. அதற்கு மாறாக வெறும் மனக்கல்வி மட்டும் பெறுபவன் உடற் பலஹீனமுள்ளவனாய் உற்சாகம் குன்றியவனாய் மிகவும் மிருதுவாக்கப்பட்ட கோழைபோல் இருப்பான். விரைவில் எரிச்சல் ஏற்படும் சுபாவம்தான் அவனிடம் மிகுந்திருக்கும். ஆகவே உடற்கல்வியின் தைரியப்பண்பு, மனக்கல்வியின் மென்மைப்பண்பு இரண்டும் சரிசமமான அளவில் கலந்திருக்கும்படி மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் கற்றுக் கொடுக்கவேண்டும்.

ஆனால் உடல் வளம் மனவளம் இரண்டு மட்டும் போதாது. சமூதாய ஒழுக்கமும் ஒற்றுமையும் ஒருவர் மீது ஒருவர் துவேஷம் கொள்ளாமல் தன்னடக்கத்துடனும் திருப்தியுடனும் வாழவும் நேர்மை உணர்ச்சியைப் போதிக்கவேண்டும். அதற்குக் கடவுள் நம்பிக்கை (மதச்சடங்கல்ல) தேவை என்று பிளேட்டோ கருதுகிறார். 'இந்த உயிர் இந்த உடலோடு முடிந்துவிடவில்லை; ஆத்மா அழிவற்றது' என்னும் எண்ணத்தை வளர்த்துச் சாவையும் மனத் துயரங்களையும் சகித்துக்கொள்ளக் கடவுள் நம்பிக்கை உதவும் என்பது பிளேட்டோவின் எண்ணம்.

இவ்வாறு ராஜ்யத்திலுள்ள சகலரும் ஒரே தினுசான கல்வி பெற்று இருபது வயதடைந்ததும் அவர்கள் திறமையின் பேரில் எந்தரக வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், அஃதாவது அவர்களில் எவர் ஆளும் வகுப்பைச் சேர்ந்தவர், எவர் இராணுவ வகுப்பைச் சேர்ந்தவர், எவர் சாமானியமான பொதுஜன தொழில் வகுப்பைச் சேர்ந்தவர் என ஒவ்வொருவரின் தலைவிதியை நிர்ணயிக்கவும் ஒரு மாபெரும் பரீட்சை நடக்கும். பரீட்சை என்றால் வெறும் மேஜையின் முன் அமர்ந்து கேள்வித் தாள்களுக்கு விடை எழுதுவது மட்டும் அல்ல. செயல் வடிவான பரீட்சைகளும் நடக்கும். ஒவ்வொருவரிடமுள்ள ஒவ்வொருவித மான திறமையையும் வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளிக்கப் படும். இந்தப் பரீட்சையில் தோல்வியுறுவோர், (அஃதாவது ஆட்சிக்கலைக்குரிய விசேஷ அறிவுத் திறமையோ, போர்க்கலைக் குரிய வீரலட்சிய சுபாவமோ இல்லாத சாமானிய சுபாவம் படைத்தவர்கள்) நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் தொழில் வகுப்பில் தள்ளப்படுவார்கள். அவர்கள் வியாபாரிகளாகவோ, குமாஸ்தாக்களாகவோ உழவர்களாகவோ யந்திரத் தொழிலாளராகவோ மாறுவார்கள். இவ்வாறு அவர்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தப் பரீட்சையானது தனிப்பட்டவர் எவர் கையிலும் இராது. மிகவும் பாரபட்சமற்ற முறையிலும் பிறப்பைக் கருதாமல் உண்மையான தகுதியையும்

திறமையையும் கருதிப் பரிசீலனை செய்யும் ஒரு கல்வி மந்திரியின் கையில் இருக்கும். அவரைப் பொதுஜனங்களே தேர்ந்தெடுப்பார்கள். பட்சபாத உள்ளம் அற்றவர்களையும், உண்மையான தகுதியும் திறமையும் அனுபவ அறிவும் உள்ளவர்களே இத் தேர்தல் போட்டிக்கு நிற்கமுடியும். எவர் ஜனங்களிடமிருந்து அதிகமான வோட்டுகள் பெறுகிறரோ அவரே மனித சமுதாயத்தை மூன்று கூறுகப் பிரிக்கும் கல்வி இலாகாவின் தலைவராக ஐந்தாண்டுகள் வரை உத்தியோகம் வகிப்பார். ஆருவது வருஷம் இன்னெரு கல்வி மந்திரியை ஜனங்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். பிளேட்டோ விவரிக்கும் குடியரசில் இஃது ஒன்றுதான் தேர்தல் முறை! இஃது ஒன்றுதான் உண்மையான தேர்தல் முறை, உண்மையான குடியரசுத் தத்துவம் எனப் பிளேட்டோ கருதுகிறர். ஜனங்களால் ஏற்படும் கல்விமந்திரியானவர் ஐம்பது வயது ஆனவராயும் ஆண் பெண் இருரகக் குழந்தை பெற்றவராயும் இருக்கவேண்டும். தேர்ந்தெடுப்போரும் தேர்ந்தெடுக்கப்படுவோரும் இந்தக் கல்வி இலாகாவைத்தான் ராஜ்யத்திலுள்ள சகல இலாகாவையும் விட உன்னதமானது, தலைமையானது என்பதை உணரவேண்டும். "ஆகவே சட்டசபையினர் குழந்தைகளின் கல்வியை சாதாரண விஷயமாகவோ இரண்டாந்தரமாகவோ ஆக்கிவிட அனுமதிக்கக் கூடாது"—(Laws, 765 F.)

முன் சொன்ன இருபதாவது வயதில் முதல் பரீட்சை நடந்து தொழில் வகுப்பினர் பிரித்து அனுப்பப்பட்டதும் எஞ்சியவர்கள் மேலும் பத்து வருஷம் வரை தொடர்ந்து உயர்தரக் கல்வி பயில வேண்டும். பிறகு இரண்டாவது பரீட்சை நடக்கும். இது முன்னதைவிட மிகவும் கடினமானதாக இருக்கும். இந்தப் பரீட்சையில் தோல்வியுறுவோர் (அஃதாவது தாங்கள் பெற்ற உயர்தரக் கல்வி அறிவை ராஜரீகக் கலைக்கு உபயோகப்படுத்தும் சுபாவம் இல்லாமல் யுத்தக்கலைக்கு உபயோகப்படுத்தும் சுபாவமுள்ள வீரநெஞ்சு படைத்த மாணவர்கள்) இராணுவ வகுப்பினராக ஆக்கப்படுவார்கள். அவர்கள் ராஜாங்கத்தின் இராணுவத் தலைவர்களாகவும், போர் வீரர்களாகவும் ராஜாங்கத்தின் உதவியாளர்களாகவும் ஆவார்கள். ஆனல் இவ்வாறு இரண்டு பரீட்சைகளிலும் தோல்வியுற்றோர் தங்கள் தலைவிதியைப் பொறுமையுடனும் அமைதியுடனும் ஏற்கச் செய்யவேண்டும். முதல் பரீட்சையில் தோல்வியுற்று தொழில் வகுப்பாக ஆக்கப்பட்ட பெருபான்மையான ஜனங்களும், இரண்டாவது பரீட்சையில் தோல்வியுற்று இராணுவ வகுப்பாக ஆக்கப்பட்ட ஒரு சில முரடர்களும் அதிருப்தியுற்று, ஆளும் அறிவாளி வகுப்பைச் சூறையாடாமல் இருக்கவேண்டும்! அதைத் தடுக்க வழி என்ன? அப்போது கீழ்க்கண்டவாறு சொல்ல வேண்டும்:

"பிரஜைகளே! நீங்களெல்லாம் சோதரர்கள். ஆனல் கடவுள் உங்களை மூன்று விதமாகப் படைத்திருக்கிறர். உங்களில் சிலருக்கு ராஜ்யத்தை ஆளும் சக்தி இருக்கிறது. அவர்களைக் கடவுள் தங்கத்

தால் படைத்திருக்கிறார். ஆகையால் அவர்கள் பெரும் மதிப்பு உள்ளவர்கள். மற்றோர்களோ, வெள்ளியினால் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் ராஜ்யத்தின் உதவியாளர்கள், வீரர்கள். எஞ்சியவர்களோ பித்தளையாலும் இரும்பாலும் ஆக்கப்பட்டவர்கள். அவர்கள் பண்ணைக்காரர்களாகவும் தொழிலாளர்களாகவும் விளங்குவார்கள். ஆனால்......இந்தப் பிரிவினை பிறப்பையொட்டியதல்ல, உண்மையான தகுதியையும் திறமையையும் பரிசோதித்துப் பார்த்த பிறகு ஏற்பட்டதே. தங்கக்கட்டிப் பெற்றோர்களுக்கு சிலசமயங்களில் வெள்ளிக்கட்டி மகன் இருக்கலாம். வெள்ளிக்கட்டியின் மகன் தங்கக்கட்டியாகலாம்...தங்கக் கட்டியின் மகனோ அல்லது வெள்ளிக்கட்டியின் மகனோ இரும்புக்கட்டியாக இருந்தால், அஃதாவது ஆளும் வகுப்பினர் மகனோ, இராணுவ வகுப்பினர் மகனோ தொழில் திறமையுள்ளவனாயிருந்தால் அவன் தொழிலாளர் வகுப்புக்கு இறங்கிவிடவேண்டியது தான். தங்கள் குழந்தை தொழிலாளி ஆகிவிட்டானே என்று மேல் வகுப்பினர் கலங்கக் கூடாது. அதேபோலத் தொழிலாளி வகுப்பில் பிறக்கும் ஒருவனுக்கு உண்மையான பிறவித் திறமையிருந்து பரீட்சையில் அது வெளிப்பட்டால் ராஜ்யத்தை ஆளும் அறிவாளி வகுப்பிற்கு ஏறிவிடுவான்."

இவ்வாறு சொன்னால் பிரிக்கப்பட்ட மனித வகுப்புக்கள் திருப்தியடைந்து புரட்சி செய்யாமல் இருக்குமென பிளேட்டோ கூறினார்.

நல்லது; இரண்டு பரீட்சைகளிலும் மாணாக்கர்கள் இரண்டு மனித வகுப்புக்களாகப் பிரித்து அனுப்பப்பட்ட பிறகு எஞ்சியுள்ள அதிஷ்டக்கார மாணவர்களின் நிலை என்ன? அறிவாளிகளான அவர்கள் அனைவருமே ராஜ்யத்தை ஆளுவார்களா? இல்லை! அவர்கள் தொடர்ந்து மேலும் ஐந்து வருஷங்கள் படிக்க வேண்டும். முப்பது வயதைத் தாண்டிய அவர்களுக்கு இப்போது தர்க்க தத்துவ ஞானப் பயிற்சி அதிகம் அளிக்கப்படும். தர்க்க தத்துவக் கல்வியை மிகவும் இளம் வயசில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கக் கூடாதென்பது பிளேட்டோவின் கருத்து. ஏனெனில் விளையாட்டுப் புத்தியுள்ள வயதில் தாங்கள் கற்ற தத்துவ நுணுக்கங்களைப்பற்றி வேடிக்கைக்காகத் தர்க்கம் செய்வார்கள்! அதனால் மெய்யறிவில் அவர்களுக்குப் பிடிப்பில்லாமல் போய்விடும்! பிளேட்டோ கூறும் தத்துவஞானக் கல்வியானது வெறும் மதச் சடங்குகளைப்பற்றிய ஆராய்ச்சி அல்ல; தெளிவான சிந்தனை சக்தி வருவதற்காக மனப் பயிற்சியும், ஆத்ம விசாரணையும் புத்திசாலித் தனமாக அரசாளுவதற்காக அரசியல் கல்வியுமே ஆகும். இவ்வாறு முப்பத்தைந்து வயதுவரை மேற்படிப்பு பயின்ற அறிவு மாணாக்கர்களுக்கு, அவர்களுக்கு அரசாளத் தகுதி இருக்கிறதா என்று தேர்ந்தெடுக்க இன்னொரு பரீட்சை நடக்கும். அவர்கள் தங்கள் அறிவுலகத்தை விட்டு நடைமுறை உலகில் இறங்கி வியாபாரிகளோடும் விதவிதமான மனிதர்க

ளோடும் தொழிலாளர்களோடும் சூழ்ச்சிக் காரர்களோடும் போட்டியிடுவார்கள். தங்கள் உணவைத் தாங்களே தேடிக்கொள்ள நெற்றி வியர்வை பெருக அவர்கள் பாடுபடவேண்டும். போர்ச் செயல்களில் ஈடுபடச் செய்யவேண்டும். இவ்வாறு மனித சமுதாயத்தோடு போராடி அவர்கள் அநுபவக் கல்வியைப் பெற வேண்டும். உண்மையான தேசப்பற்று இருக்கிறதா, செல்வத்தைக்கண்டு மயங்காமலிருக்கிறார்களா, நிதானம், நேர்மை நிலைமைகளைச் சமாளிக்கும் திறமை, சுயநலமின்மை. பற்றற்ற பெருந்தன்மை, திடசித்தம் முதலான நற்குணங்களெல்லாம் வாழ்க்கை அனுபவத்தில் நிலைத்திருக்கின்றனவா என்று பரிசோதித்துக்கொண்டே வரவேண்டும். பதினைந்து வருஷங்களுக்கு இந்த அனுபவக்கல்விப் பரீட்சை நடக்கும். அதற்குள் பலர் ஒழிந்து விடுவார்கள்! எஞ்சியுள்ள வெகு சிலர் இதற்குள் ஐம்பது வயதுக் கிழவர்களாகித் தன்னடக்கமும், சகிப்புத் தன்மையும் எந்தப் போராட்டத்திலும் வெற்றி பெறக்கூடிய கூர்மையான அறிவும் பெற்றுப் புடம்போட்டு வெளிவந்த பத்தரை மாற்றுப் பசுந் தங்கங்களாகவும் அனுபவ ஞானத்தில் முதிர்ந்தவர்களாயும் விளங்குவார்கள். அந்தத் தத்துவ ஞானிகளான பகுத்தறிவாளர்களே ராஜ்யத்தை சர்வ வல்லமையுடன் ஆளுவார்கள்!

## ஆள்வோர் தேர்தல்

எந்த நிலையிலும் எவ்விதக் குறையுமின்றி பரிசோதனைகளில் தேறி வருபவனையே நாம் ஆட்சியாளனாகவும் பாதுகாவலனாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

—சாக்ரடீஸ் (குடியரசு)

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

—திருவள்ளுவர் (தெரிந்து வினையாடல், 517)

ராஜ்யத்தை ஆளுபவர்கள், பிளேட்டோவின் இலட்சியக் குடியரசில் 'ஓட்டுப்' போடும் தேர்தல் முறையினால் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்கள். குடியாட்சி என்பது சகல துறைகளிலும் சரிசமமான பங்குபெறச் சம சந்தர்ப்பமும் முக்கியமாகக் கல்வித் துறையில் சரிசமமான வசதியும் அளிப்பதுதானே தவிர, அரசியல் பதவிகளுக்குப் போட்டியிடும் இரண்டு முட்டாள்களில் எந்த முட்டாளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்ற வாக்குரிமையல்ல என்று பிளேட்டோ கருதினார். கல்வித் துறையில் தேர்தல் முறையைப் பிளேட்டோ அமைத்திருப்பதானது சிரமமான ராஜ்ய நிர்வாகத்திற்குத் தன்னை தகுதியாக்கிக் கொள்ள எந்தத் தனியொரு மனிதனுக்கும் சரிசமமான சந்தர்ப்பத்தை அளிக்கிறது. பள்ளிக்கூடத்தின் மூன்று பரீட்சைகளிலும் தன் திறமையை நிலைநாட்டி வென்றவன் எவனும் ராஜ்யத்தை

ஆளும் உரிமையும் தகுதியும் பெறுகிறன். அரசாங்கத்தின் உத்தியோகங்களும் ஆட்சிப் பதவிகளும் போலியான ஓட்டு முறைகளால் நிரப்பப்படாமல் சொந்தத் திறமைமீது முன்னேறி வந்தவர்களால் நிரப்பப்பெறும். 'விசேஷப் பயிற்சி இல்லாத எவனும், கீழ் உத்தியோகங்களில் இருந்து பணியாற்றிப் பழக்கப்படாத எவனும் மேல் உத்தியோகங்களுக்கு வரவே முடியாது. ஆளுவது எப்படி என்று தெரியாத அசடுகளை ஜனங்களால் தேர்ந்தெடுக்கச் செய்து ஒப்புக்காக அவர்களை அரசியல் தலைமைப் பதவிகளில் உட்கார வைத்துவிட்டு, உண்மையில் ஆட்சி நடத்தும் நிர்வாக அதிகாரிகளை இஷ்டம்போல் இனவாரியாகவும் உறவுவாரியாகவும் நியமனம் செய்துகொண்டு போகும் முறையைச் சரியான குடியரசு எனப் பிளேட்டோ ஒப்புக்கொள்ளவில்லை! பிளேட்டோவின் இலட்சியக் குடியரசில் திறமைகளில் தேறிவந்த ஒரு சில அறிவாளிகள் ராஜ்யத்தை சர்வ அதிகாரங்களுடன் ஆள்வார்கள். இதைக் குடியரசு என்று பிளேட்டோ கூறுகிறரே, இது ஒரு சிலரின் அதிகார ஆட்சி ராஜ்ய மல்லவா? (Authoritive State or Aristocracy) என்று வாதிக்கலாம். 'மேன்மக்களின் ஆட்சி (Aristocracy) என்பது வெறும் வார்த்தை அளவில்தானே தவிர, பிளேட்டோ சொல்லும் இந்த ஆட்சி முறையில் பரம்பரை உரிமை கிடையாது; ஜாதி கிடையாது; பதவிகளையோ அரசியல் சலுகைகளையோ தங்கள் இனத்தவருக்கோ உறவினருக்கோ வாரிசாக வைத்துவிட்டுப் போகும் அயோக்கியத்தனம் கிடையாது; தாழ்ந்த குலத்தில் பிறந்த எவனுடைய திறமையும் வளரவிடாமல் தடுக்கும் வகுப்பு வெறிக்கும் இடம் கிடையாது, ஆளுபவன் மகனுக்கும் பூட்ஸ் துடைப்பவன் மகனுக்கும் ஒரே மாதிரியான கல்வியும் தங்கள் திறமைகளை நிலைநாட்ட ஒரே மாதிரியான சந்தர்ப்பமும் உண்டு. ஆளுபவன் மகன் தேர்தல் பரீட்சைகளில் தோற்றால் தொழில் வகுப்பில் தள்ளப்படுவான். பூட்ஸ் துடைப்பவனின் மகனுக்குத் திறமை இருந்தால் ராஜ்யத்தை ஆளத் தலைவாசல் திறந்திருக்கும். எந்தக் குலத்தில் பிறந்தாலும் திறமைக்கு முதலிடம் அளிப்பது தான் பிளேட்டோவின் அரசியல். அரசியல் பதவிகளுக்குத் தேர்தல் பெட்டிகளை வைப்பதைவிடப் பள்ளிக்கூடங்களில் தேர்தல் முறைகளை வகுப்பதுதான் உண்மையான, போலித் தனமற்ற குடியரசு என்கிறர் பிளேட்டோ.

பிளேட்டோவின் இலட்சியக் குடியரசில் தத்துவ ஞானிகள் தாம் ராஜாக்களாய் விளங்குவார்கள் என்று சொன்னேம். அங்கே நீதி நிர்வாகப் பிரிவினை கிடையாது. நீதியும் நிர்வாகமும் சட்ட சபையும் ஒரே இடத்தில் ஒரு சிலரின் கையில்தான் இருக்கும். அவர்கள் சர்வ அதிகாரங்களும் படைத்தவர்களாய் சமயத்திற்கேற்றபடி வளைந்துகொடுக்கும் அறிவுள்ளவர்களாய் ராஜ்யத்தை ஆளுவார்கள்.

ஆனல் ஐம்பது வயதானவர்களுக்கு வளைவுத் தன்மை எப்படி இருக்கும்? அவர்கள் பிடிவாதக்காரர்களாகவோ, பழமை

விரும்பிகளாகவோ இருப்பார்களே! நாட்டின் முற்போக்கில் எவ்வாறு நாட்டம் கொள்வார்கள்? என்று கேட்கலாம். 'தத்துவ ஞானிகள் என்போர் சுத்த அசடுகளாகவோ சுய நலமிகளாகவோ அல்லது இரண்டுமாகவோ இருப்பார்கள். அவர்கள் போக்கிரிகள்; உதவாக்கரைகள்' என்று பிளேட்டோவின் நண்பர்கள் சிலர் வாதித்தார்கள். ஆனால் அதற்குப் பிளேட்டோ பதில்மொழி கூறும்போது, 'தத்துவ ஞானிகளுக்கு வெறும் தத்துவப் பயிற்சி மட்டுமல்ல, வாழ்க்கைப் பயிற்சியும் தரப்படுகிறது; அவர்கள் சிந்தனைச் சிற்பிகளாக மட்டுமல்ல, செயல் புரியும் கர்ம வீரர்களாயு மிருப்பார்கள்; பள்ளிக்கூடத்தில் பெற்ற நீண்டகால அனுபவக்கல்வி மூலமும், வாழ்க்கையில் பெற்ற நீண்டகால சோதனைகளின் மூலமும் அவர்கள் உன்னத நோக்கம் உள்ளவர்களாய் இருப்பார்கள்' எனக் குறிப்பிட்டார். தத்துவம் என்பது பிளேட்டோவின் கண்களில் கர்மகாண்டமே தவிர உலகை நிந்திக்கும் வெறும் ஞான மார்க்கமோ யோகமார்க்கமோ அல்ல!

## ஆளும் வகுப்பினருக்குப் பொதுவுடமை

---

''எனது' 'உனது' என்ற எண்ணம் மறைந்து எங்கு பொதுவுடமை நிலவுகிறதோ அங்கு சம திருப்தி நிலவும்.'

— சாக்ரடீஸ் (குடியரசு)

'யாதும் ஊரே: யாவரும் சொந்தக்காரர்கள்.'

— கணியன் பூங்குன்றனர் (புறநானூறு—192)

'யான் எனத என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்.'

— திருவள்ளுவர் (துறவு 346)

---

ஒரு சில திறமைசாலிகளான ஆளும் வகுப்பினருக்குச் சர்வ அதிகாரங்கள் கொடுப்பதினால் அவர்கள், தங்கள் சுயநலத்திற்காகவும், சொந்த ஆசைகளைத் திருப்திசெய்து கொள்ளவும், சொத்து சுகங்களைச் சுவீகரித்துக் கொள்ளவும், தங்கள் சந்ததிகளையும் இனத்தவரையும் நிலை நிறுத்தவும், தங்கள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்களா, அந்த ஒரு சிலருக்குள்ளேயே போட்டி பொறாமை ஏற்பட்டுப் பொதுநலம் மறந்து தந்நலத்தில் ஈடுபட மாட்டார்களா என்று கேட்கலாம். இதற்குப் பிளேட்டோ கூறும் வழி அந்த ஆளும் வர்க்கத்தினருக்குப் பற்றற்ற தன்மையை வளர்க்கும் பயிற்சியளிப்பது மட்டுமல்ல, அவர்களின்மீது மட்டும் 'பொதுவுடமையை'த் திணிக்கவேண்டும் என்பதுதான். அந்த தத்துவஞானிகளை ஆளும் வகுப்பினராக

ஒரே இடத்தில் வசிக்கச்செய்து அவர்களுக்கு அபேதவாதக் கொள்கையை ஊட்டிவிட வேண்டும். அந்த வகுப்பினருக்குள் சொத்து, சுகம், உறங்கும் இடம், உண்ணும் இடம், மனைவி, மக்கள், சந்ததி விருத்தி, எல்லாவற்றையுமே எல்லோருக்கும் பொதுவான பொதுவுடமைகளாக்கி விடவேண்டும்; சுருக்கமாகச் சொன்னால் ஆளுவோரை அசல் பொதுவுடமை வாதிகளாக்கிவிட வேண்டும். ஆட்சியுடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, துணிவுடைமை, கல்வியுடைமை, கருணையுடைமை, முதலான பல உடைமைகளையுடைய அந்த மெய்யறிவாளர்களைப் பொதுவுடைமை வாதிகளாக்கி விடவேண்டும்!

அந்த ஆளும் வகுப்பினரில் எவரும் தனிப்பட எந்தவிதமான சொத்தும் வைத்துக்கொள்ளக் கூடாது. சொந்த வீடு இருக்கக் கூடாது. இராணுவ வீரர்கள் கூடாரமடித்து ஒன்றாக இருப்பது போல எல்லோரும் ஒன்றாக வசித்து ஒரே மாதிரி உணவையே ஒன்றாக உண்டு, ஒன்றாகவே ஒரேயிடத்தில் உறங்கவேண்டும். அவர்களது எந்த ஊதாரிச் செலவிற்கும் பணம் தரப்படமாட்டாது. பொதுமக்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட கூலியே தரப்படும். அவர்கள் சுயநலத்திற்காகச் செய்யும் சுற்றுப் பிரயாணங்களுக்கோ க்ஷேத்திராடனங்களுக்கோ ஒரு சல்லிக் காசுகூட அரசாங்கத்திலிருந்து செலவழிக்கப்பட மாட்டாது. அவர்கள் பொன்னையும் பொருளையும் கையாலும் தொடக்கூடாது. அவர்களோ, அவர்களுடைய ஸ்திரீகளோ, எந்த விதமான நகைகளும் அணியக்கூடாது. அவர்களுக்கு ஆண் பெண் உறவுகள் இருக்கலாமே தவிர, தனிப்பட மனைவிகளோ மக்களோ இருக்கக்கூடாது. மற்ற சரக்குகளைப் போல மனைவிகளும் பொதுவுடமைப் பொருள்களாகி விடுவார்கள். பொதுநலச் சமுதாயத்தின் மீது பாசம் வைப்பதற்காகக் குறிப்பிட்ட ஒரு பெண்ணின் மீதோ, குழந்தையின் மீதோ பாசம் வைப்பதை அழித்துவிட வேண்டும். இன்ப துன்பங்களைச் சொந்த ஹோதாவில் ஒவ்வொருவரும் தனித்தனியாக அனுபவிப்பதினால் அந்த அனுபவங்களே அவரவர்களைத் தனித்தனியாகப் பிரித்துவிடுகிறது. ஒன்றுபட்ட முயற்சியும் நோக்கங்களும் அழிந்துவிடுகின்றன. ஆளும் வகுப்பினரான அந்தத் தத்துவ ஞானிகள் 'நான்' என்ற உணர்ச்சியிலிருந்து மட்டுமல்ல, 'என் மனைவி, என் குடும்பம்' என்ற பாசத் தளைகளிலிருந்தும் விடுதலை பெறவேண்டும். ஆத்ம விசாரணையில் மட்டுமல்ல. மனைவி மக்கள் விஷயத்திலும் 'அபேதவாதக்' கொள்கையைக் கடைப்பிடித்தாக வேண்டும். 'பொதுவுடைமை நிலவுகிற இடத்தில் எல்லோரும் சம அந்தஸ்துடனும் சம திருப்தியுடனும் இருப்பார்கள். அங்கே சச்சரவுகளுக்கும் பிணக்குகளுக்கும் இடமில்லை.' அவர்களுக்குக் குழந்தை பிறந்தவுடனேயே எடுத்துக்கொண்டு போகப்பட்டுப் பொதுக் குழந்தைபோல வேறோர் இடத்தில் இன்னார் குழந்தையெனத் தெரியாதபடி வளர்க்கப்படும். ஆளும் வகுப்பினரை மணந்த தாய்மார்களெல்லாம் அவ்வகுப்பினர்

எல்லோருக்கும் மனைவிகளாகி எல்லோர் குழந்தைகளையும் வளர்க்கவேண்டும். அந்த வகுப்பினருக்குள் ஒவ்வொரு பையனும் சகோதரன்; ஒவ்வொரு சிறுமியும் சகோதரி; ஒவ்வொருவனும் தந்தை; ஒவ்வொருத்தியும் தாய்; எல்லாம் பொது. இவ்வாறு பொதுவுடைமையை நிர்த்தாட்சண்யமாக ஆளும் வகுப்பினர் மீது சுமத்திவிடவேண்டும். ஆனல் இந்தக் 'கம்யூனிஸம்' ஆளும் வகுப்பினருக்கு மட்டுந்தான். தொழில் வகுப்பினருக்கு அல்ல. ஆளும் வகுப்பினரில் எவனுவது சொந்த வீடுகளோ, சொந்த நிலங்களோ, சொந்தப் பணமோ, சொந்தத்திற்கு மனைவியோ, குழந்தைகளோ வைத்துக்கொள்ள விரும்பினல், மறுகணமே அவன் ஆளும் வகுப்பை விட்டு ஆளப்படும் தொழில் வகுப்புக்குச் சென்று சாதாரணப் பிரஜையாகிவிட வேண்டியதுதான்!

ஆளும் வகுப்பினருக்கு மனைவிகள் பொதுவுடைமை என்றால் நினைத்த நேரத்தில் எல்லாம் ஜனன உற்பத்தி செய்துவிட முடியாது. சகலவிதமான ஜனன உற்பத்திகளும் அனுமதி பெற்ற சுகாதார இலாகாவின் மேற்பார்வையின் கீழ்தான் நடைபெற வேண்டும். குழந்தைகள் ஆரோக்கியத்தோடு பிறக்கவேண்டுமாகையால் எந்த ஆணும் பெண்ணும் பரிபூர்ண உடலாரோக்கியம் இருந்தாலொழிய, குழந்தைகளை உற்பத்தி செய்யக்கூடாது 'ஐம்பத்தைந்து வயது வரைதான் குழந்தை உற்பத்தி செய்யலாம்' என்று சட்டமிருப்பதால் ஆளும் பதவிக்கு வரும் ஐம்பது வயதுக் கிழவர்கள் ஐந்து வருஷகால இடைவேளைக்குள் அதிகமாகக் குழந்தைகள் உற்பத்தி செய்துவிடவும் முடியாது!

இவ்வாறு ஒரு சில அறிவாளிகளான ஆளும் வகுப்பினருக்கு மிகக் கடுமையான பொதுவுடைமைகளை வற்புறுத்தும் பிளேட்டோ மூன்றாவது வகுப்பான தொழில் வகுப்பினருக்கு மட்டும் சொந்தச் சொத்தும், சொந்த மனைவிகளும், சொந்தக் குடும்பமும் வைத்துக்கொள்ள அனுமதிக்கிறார். ஆனல் தனி ஒருவரிடம் அதிகமான செல்வமும் பெரும்பான்மையோரிடம் வறுமையும் ஏற்படாமல் தடுக்கத் தொழிலும் வியாபாரமும் ஆளும் வர்க்கத்தினரின் மேற்பார்வையிலேயே இருக்கும். நாட்டிலுள்ள சராசரிப் பிரஜையின் சொத்தைப்போல நான்கு மடங்குக்குமேல் அதிகமுள்ள சொத்தையெல்லாம் ஒருவனிடமிருந்து ராஜ்யம் பறிமுதல் செய்துகொள்ளும். வட்டி வாங்குதல் சட்டபூர்வமாக தடுக்கப்பட்டு லாபங்கள் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படும். நாட்டின் ஜனத்தொகை பெருகிவிடாமல் கட்டுப்படுத்த 'விவாக அங்கீகார உத்திரவு மனுக்களும்' ஆள்வோர் கையிலேயே இருக்கும்!

ஒருசில ஆளும் வகுப்பினருக்கு நிர்த்தாட்சண்யமாகப் பொதுவுடைமையை வற்புறுத்தும் பிளேட்டோ பெருவாரியான தொழில் வகுப்பினரின் மீது மட்டும் ஏன் பொதுவுடைமையைப் புகுத்தவில்லையென்றால், பெருவாரியானவர்களின் இயற்கைச் சுபாவத்

திற்கு அஃது ஒத்துவராது. ஒருசிலரால்தான் சொந்த மனைவி மக்கள் மீது பந்தபாசப் பற்றற்று கடமைகளைச் செய்துகொண்டு போக முடியுமென்று அவர் கருதுகிறார்.

எதேச்சாதிகாரியான ஒரு சில ஆளும் வகுப்பினருக்குச் சொத்தில்லை, சொந்த மனைவியில்லை, மக்களில்லை, ஆடம்பரச் செலவுகளுக்கு வழிகளில்லை, உறவினர்களுமில்லை; நன்றாக ஆளு கிறோம் என்ற பெருமையையும் அந்தஸ்தையும் தவிர அவர் களுக்கு வேறெந்தத் தனித்துவமும் இல்லை. ஆகவே அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சர்வாதிகாரங்களின் மூலம் பொதுநலத்தை உத்தேசித்து நன்றாக ஆளுவதைத் தவிர வேறு வழியில்லை! நாடு சுபிட்சமடையும்! இவ்வாறு தனியுடைமை சுகங் களுக்குத் தடைவிதித்து மெய்யறிவாளர்களை அரசியலுக்குப் பலியிடுவது நியாயமா என்றால் "நாம் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்து வதின் நோக்கம் ஒரு சிலரின் சுகத்திற்காக அல்ல, பொதுநலத்திற் காக" என்று பிளேட்டோ சமாதானம் கூறுகிறார்.

ஆளும் வகுப்பினர், இராணுவ வகுப்பினர், தொழில் வகுப் பினர் ஆகிய மூன்று பிரிவினரும் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனித்துக்கொண்டு இன்னொருவர் எல்லைக்குள் இன்னொருவர் புகாமல் பணியாற்றி பிளேட்டோவின் இலட்சிய ராஜ்யமான குடியரசை உன்னத ராஜ்யமாக்குவார்கள்.

ஆனால் சர்வாதிகாரம் படைத்த ஆளும் வகுப்பினரான தத்துவ ஞானிகள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடும் விதிகளி லிருந்து விலகித் தங்கள் பரம்பரையையும் ஜாதியையும் தந்திரமாக நிலைநாட்ட முயலுவார்களேயானால் நாடு க்ஷீணமடைவதோடு என்றாவது ஒரு நாள் புரட்சி ஏற்பட்டு இலட்சிய ராஜ்யம் நீர்க் குமிழியாய்ச் சிதைந்துவிடும் என்றும் பிளேட்டோ எச்சரிக்கிறார்!

## III. இன்பத்துப் பால்

---

"உயிர்களிடத்தில் அறத்துக்கு
மாறுபாடில்லாத காதல் நான்"

—பகவத் கீதை (7—11)

மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப் படுவார்.

— திருக்குறள் (புணர்ச்சி விதும்பல் 1289)

---

மனிதன் இந்த உலகில், அதர்மம், புற அழகு, பொய்மை என் னும் மூன்றைக் கண்டுதான் அதிகம் மயங்கி மோகிக்கிறான் என்றா லும் அவனது ஆத்மாவானது, அறம், அழகு, மெய்மை என்னும்

மூன்றைத்தான் உள்ளூர விரும்பிக் காமுறுகிறது. களவியல் வழியாகக் கற்பியல் பெற்றுக் கடவுளின் காதலில் ஒன்றறக் கலப்பது தான் மனித ஆத்மாவின் காமத்துப் பாலாகும். அதற்கு அரசியல் வழியாகப் பாதை வகுப்பதே பிளேட்டோவின் அறவழி.

இந்த உலகில் சிறந்தவையும் மூன்றுதான்: 1. அறம்; 2. அழகு 3. மெய்மை. இவற்றை முறையே நீதி, சௌந்தர்யம், சத்தியம் (Justice, Beauty, Truth) என்றும் கூறலாம். ஆனால் அவை என்னவென்று இன்னும் யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. அதற்குக் காரணம், நிஜ நீதி, நிஜ அழகு, நிஜ மெய்மை என்ற மூன்றையும் நம் கண்ணால் பார்க்க முடிவதில்லை; அறிவால்தான் உணர்கிறோம். கண்ணால் காண்பவை பொய்வடிவங்கள்; ஆனால் பிரதியொருவனின் ஆத்மாவும் உண்மையான அழகையும் உண்மையான நீதியையும் உண்மையான சத்தியத்தையுமே நாடுகிறது; காமுறுகிறது. ஆத்மா என்பது கண்ணைப் போல. எந்தப் பொருளின் மீது நிஜ அழகும் நீதியும் சத்தியத்தன்மையும் ஒளிர்கிறதோ, அந்தப் பொருளை ஆத்மாவானது தன் அறிவினால் பற்றிக் கொள்கிறது. நிஜ நீதி, நிஜ அழகு, நிஜ சத்தியம், என்னும் மூன்றும் ஒன்றே என்று உணர நமக்கு அறிவு தேவை. இதுதான் பிளேட்டோவின் கருத்துப் போக்கு.

'நீதி என்றால் என்ன?' என்பது பற்றிப் பலர் பலவாறாக நிர்ணயிக்கிறார்கள்.

பிளேட்டோவோ, "நீதி என்பது ஒருவனுக்கு உரியதைப் பெறுவதும் செய்வதும்தான்!" (433, Republic) என்கிறார். அஃதாவது சமுதாய ஒழுங்கிற்கு ஒருவன் தனக்குத் தகுதியானதைச் செய்வதும் பெறுவதுந்தான் நீதி என்கிறார். வானத்திலுள்ள நட்சத்திரங்களும் சந்திர சூரியர்களும் ஒரு நியதிக்குள் கட்டுப்பட்டுச் செயல் புரிவது போல், ஒவ்வொரு மனிதனும் ஒரு நியதிக்குள் கட்டுப்பட்டுச் செயல் புரிந்தால்தான் சமூக நீதியும் சௌந்தரியமும் சத்தியமும் நிலை பெறும் என்பது அவர் எண்ணம்.

ஒவ்வொரு மனிதனிடமும் இச்சைகளும் உணர்ச்சி உத்வேகங்களும் பகுத்தறிவுகளும் குழம்பிக்கிடக்கின்றன; அவை ஒரு நியதிக்குட்பட்டுச் செயல் புரிந்தால், மனிதனுக்கு ஆனந்தமும் ஒழுக்கமும் ஏற்படும். அதுபோலவே இச்சையின் அடிப்படையிலுள்ள தொழில் வகுப்பினரும், உணர்ச்சி உத்வேக அடிப்படையிலுள்ள இராணுவ வகுப்பினரும், பகுத்தறிவின் அடிப்படையிலுள்ள ஆளும் வகுப்பினரும் ஒரு நியதிக்குட்பட்டு தங்கள் தங்களுக்கு உரிய பணிகளைச் செய்து வந்தால்தான் சமுதாய ஒழுங்கு நிலைக்குமென்கிறார். தனி மனிதனின் நீதியையும் ஒழுக்கத்தையும் விடச் சமுதாயத்தின் ஒழுக்கத்தையே பிளேட்டோ பெரிதாக மதிக்கிறார். 'ராஜ்யத்தின் நீதியும் தனி மனிதனின் நீதியும் வேறல்ல' என்று கூறியதோடு, 'ராஜ்யத்தில் தனி மனிதனின் அம்சத்தைப் பொருத்திப் பார்த்த

முதல் சிந்தனையாளர்தாம் பிளேட்டோ என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

'பலஹீனமானவர்களிடம் அன்பு காட்டுவதுதான் அறம்' என்றார் ஏசுநாதர். 'பல முள்ளவர்களின் வலிமைதான் அறம்' என்றார் ஞானி நீட்ஸி. ஆனால் பிளேட்டோவோ, "சமுதாயம் முழுமையின் ஒற்றுமையான ஒழுக்கந்தான் அறம்" என்கிறார். ஆண் பெண் உறவு, குழந்தை உற்பத்தி முதல், கடவுள் தத்துவம் வரை, சகல விஷயங்களையும் இந்தச் சமுதாய ஒழுங்கிற்கும் தம் 'இலட்சிய ராஜ்யத்திற்கும்' இணைத்துப் பார்க்கிறார்.

'கடவுள் அறமே வடிவானவர்' என்றும், 'மனிதனுக்கு அற வாழ்க்கையில் வருவதே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம்' என்றும், மனிதன் இந்த உலகில் பெற்று வளர்த்து, தன் ஆத்மாவோடு இந்த உலகத்தை விட்டுக் கொண்டு போகும் ஒரே சொத்து அறமார்ந்த அறிவு ஒன்றுதான் என்றும் அதைப் பொறுத்தே அடுத்த பிறவி அமையும் என்றும் வலியுறுத்துகிறார். 'வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற திருவள்ளுவரைப்போல் பிளேட்டோ வற்புறுத்துகிறார். இதுதான் தனி மனிதனுக்கும் அரசியலுக்கும் பிளேட்டோ காட்டும் அற வழி! மனித ஆத்மாவுக்குக் காட்டும் காமத்துப்பால்!

## குடியரசு விமர்சனம்

"விமர்சனம் செய்யப்படாத வாழ்க்கை வாழத் தகுதியுடையதல்ல"

—சாக்ரடீஸ் (Apology, 38)

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்"

திருவள்ளுவர் (தெரிந்து தெளிதல், 504)

பிளேட்டோ தம் 'இலட்சிய ராஜ்யக்' கனவை ஒரு பூலோக சுவர்க்கமென வர்ணிக்கிறார். ஆனால் அந்தச் சுவர்க்கம் நம் பூகோள தேசப்படத்தில் ஒரு மூலையிலாவது ஏன் இறங்கி வரவில்லை?

அதற்கு மனித சுபாவத்தின் பேராசையையும் ஊதாரித்தனத்தையுமே காரணம் காட்டுகிறார். மனிதர்கள் தங்கள் எளிய வாழ்க்கையில் திருப்தி யடைவதில்லை. அவர்கள் பேராசையும் சுயநலமும் போட்டியும் பொறாமையும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒன்றையடையப் பாடுபடுகிறார்கள். அதை அடைந்ததும் சலித்துப் போய் இன்னொருவன் கையிலுள்ள பொருள்களுக்கு ஆசைப்படுகிறார்கள். பிறர் பொருளையும் உரிமையையும் கவரவே ஆவலிருந்தவர்களா யிருக்கிறார்கள். அதனால் இரண்டு ஜன சமூகங்கள் ஒன்றின் பிரதேசத்தை இன்னொன்று ஆக்கரமிக்கத் துடிக்கின்றன. அதன் விளைவாக யுத்தம் ஏற்படுகிறது; தொழிலும் பொரு

ளாதாரமும் பெருகுகிறது; புதுப்புது வகுப்புப் பிரிவினைகள் ஏற்படுத் தொலைக்கின்றன: 'எந்தச் சாதாரண நகரமும் பணக்காரர் உலகம் ஏழைகள் உலகம் என்று இரண்டு நகரங்களை உடையதாக இருக்கும்; ஒன்றோடொன்று போரிடும்; அவ்விரு பிரிவுகளுக்குள்ளும் இன்னும் சிறு சிறு உட்பிரிவுகள் உண்டு" (423) ஆக யுத்தத்தின் முடிவிலும் இடையிலும் வர்த்தக வியாபாரிகளின் சங்கமும் ஒன்று கிளம்பும். அதன் உறுப்பினர்கள் தாங்கள் தேடிய புதுச் செல்வத்தின் மூலம் சமூகத்தில் அந்தஸ்து கேட்பார்கள். இந்தப் பொருளாதார மாறுதல்களினால் அரசியல் மாறுதல்களும் உற்பத்தியாகும். வியாபாரிகளின் செல்வம் நிலச்சுவான்தார்களைவிடப் பெருகிச் செல்வதால் 'பிரபுக்கள் ஆட்சி' (Aristocracy-மேன்மக்களாட்சி) மாறி அதற்குப் பதில் 'சிலசெல்வராட்சி' (Plutocratic oligarchy) 'உண்டாகும். அஃதாவது உயர் குடிமக்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் பதில் பணக்கார வியாபாரிகளும் முதலாளிகளும் ராஜ்யத்தை நேர் முகமாகவோ மறைமுகமாகவோ ஆளுவார்கள். அதனால் சமுதாய வளர்ச்சியையும் கொள்கை நிறைவேற்றத்தையும் கண்காணித்து வரும் அரசியல் நிர்வாகமானது திடுமென ஸ்தம்பித்துப் போய்க் கட்சிச் சூதாட்டத்திற்கும் லஞ்ச ஊழல்களுக்கும் இலக்கான போலி அரசியலாக மாறிவிடும். இதுதான் அவருடைய இலட்சிய ராஜ்யம் நிலை பெறுமைக்கு அவர் கருதும் காரணம்.

"ஆளும் வகுப்பினருக்குப் பிளேட்டோ பொதுவுடைமையை வற்புறுத்துகிறார். அது ஆளும் வர்க்கத்தினருக்குப் பொறுப்பின்மையை வளர்த்துவிடும். எல்லாம் எல்லோருக்கும் சொந்தமென்றால் எவனும் எதைப்பற்றியும் அக்கறையெடுத்துக்கொள்ள மாட்டான்" என்று சில மிதவாதிகள் தர்க்கிக்கிறார்கள். அவர்கள் அறிவில் முதிர்ந்த கிழவர்களான படியால் சுய லாபத்தைவிட சுயமதிப்பில் மனம் பதிந்து பொறுப்புடன் ஆளுவார்கள் என்பது பிளேட்டோவின் பதில்.

"மனைவிகளும் பிறக்கும் குழந்தைகளும் பொதுவுடமை எனக் கற்பனை செய்வது சுலபம். ஆனால் மனிதனுக்கு, மனைவி மக்கள் மீதுள்ள பூர்ண பாத்தியதையின் பாசத்தையும், தாய்மையின் உணர்ச்சியையும் பிளேட்டோ மறந்து விட்டார். குடும்பந்தான் மனிதனின் ஜீவாதாரம். குடும்ப விருக்ஷத்தை வெட்டிவிட்டால் மனிதன் ஒரு யந்திரந்தான்; வாழ்க்கை ஒரு மிருகதசைதான்!" என்று சிலர் குறை கூறுகிறார்கள். ஆனால் ஆளும் வகுப்பினரான ஒரு சில அறிவாளிகளுக்குத்தான் இந்தத் தடைகளைப் பிளேட்டோ விதித்திருக்கிறார். பெருவாரி மக்களான தொழில் வகுப்பினருக்குக் குடும்ப விருக்ஷத்தை மட்டுமல்ல, பொருளாதாரத்தையே அவர்களின் கையில் ஒப்படைத்திருக்கிறார்!

"ராஜ்யத்தில் ஏழைகளின் உலகம், பணக்காரர்களின் உலகம் என்று முன்பிருந்த இரண்டு உலகங்களை ஒழிப்பதாகப் பிளேட்டோ சொல்லிக்கொண்டு தம் குடியரசில் 'ஆளும் வகுப்பினர்', இராணுவ வகுப்பினர்', 'தொழில் வகுப்பினர்' என்று மூன்று


உலகங்களை உண்டாக்குகிறுரே'' என்று சிலர் குறை கூறலாம். ஆனால் அதிகாரத்திலுள்ள ஆளும் வகுப்பினரும் இராணுவ வகுப்பினரும் பொருளாதாரத்தில் ஈடுபடாமல் தடுக்கப் பட்டிருக்கிறுர்கள். பொருளாதாரம், சாமானியப் பொதுமக்களின் கையிலிருப்பதால் மேலிருவகுப்புகளும் தங்கள் அதிகாரங்களையும் பலத்தையும் துஷ்பிரயோகம் செய்யஇயலாது. சாமானியத்தொழில் வகுப்பின் கையில் உணவும் உற்பத்தியும் பொருளாதாரமும் இருப்பதால் அவர்களுக்கு அதிருப்தி ஏற்படும் போது எந்தக் கணத்திலும் ஆட்சிமுறையைக் கவிழ்த்துவிடமுடியும். இங்குதான் குடியரசின் சக்தியைப் பிளேட்டோ குடிகொள்ள வைத்திருக்கிறுர்!

''பிராணிநூல் சாஸ்திரி ரகவாரியாகப் பூச்சிகளைப் பிரித்து வைப்பதுபோல் பிளேட்டோ மனித சமுதாயத்தை மூன்று இனங்களாகப் பிரித்துப்பார்க்க முயல்கிறுர்; மனிதர்கள் உலோகப் பொருள்களல்ல; நம் இஷ்டப்படி யந்திரத்தில் கொடுத்து உருவாக்க முடியாது.'' என்று பிளேட்டோவின் அரசியல் திட்டத்தைச் சிலர் ஏளனம் செய்கிறுர்கள். பிளேட்டோ இலட்சிய ராஜ்யமெனப் பெருமைப்படக் கூறும் குடியரசு என்பது உண்மையில் குடியாட்சியும் ஒரு சில மேன்மக்களாட்சியும் கலந்த ஒரு கதம்பந்தான் (A mixture of Democracy and Aristocracy) என்றும் சிலர் கருதுகிறுர்கள்.

நாம் பிளேட்டோவின் கருத்துக்களில் 'பலவற்றையோ சில வற்றையோ ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம். ஆனால் 'எந்த மனிதனும் நல்லதொரு அரசியலில் இன்புற்று வாழ' இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பே அரசியல் திட்டம் தீட்ட முயன்ற ஒரு மேதைதான் பிளேட்டோ என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

"அரசியல் பதவிக்குத் தேர்தல் போட்டியில் நிற்கும் இருவரில் ஒருவனைத் தேர்ந்தெடுக்க மக்களுக்குள்ள உரிமைதான் குடியாட்சி என்பதைவிட, நாட்டிலுள்ள எவனும் அரசாளும் கல்வி பயில சம சந்தர்ப்பமும் வசதியும் பெறும் உரிமைதான் உண்மையான குடியாட்சி!'' என்ற பிளேட்டோவின் சிந்தனையையும் நாம் நன்ருகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

பிளேட்டோ 'இலட்சிய ராஜ்யக்' கனவு கண்டு 'குடியரசு' எனும் நூல் தீட்டிவிட்டார். ஆனால் அது நடைமுறையில் வரக் கூடியதா? இந்த இரண்டாயிரம் வருஷங்களாகப் பிளேட்டோவின் இலட்சிய ராஜ்யம் எப்போதாவது பூகோளப் படத்தின் எந்த ஒரு மூலையிலாவது இறங்கியதுண்டா என்று சிலர் சந்தேகிக்கிறுர்கள். அந்தச் சந்தேகம் பிளேட்டோவிற்கே இருந்தது. கனவை ஒரு பெரிய ஓவியமாகத் தீட்டிவைப்போம். அதை இலட்சியப் பொருளாகக் கொண்டு மனித சமுதாயம் என்ருவது ஒருநாள் ஓர் அற்பப் பகுதியையாவது நனவாக்காதா என்று பிளேட்டோ நினைத்தார். அதுதான் அந்தத் தத்துவஞானிக்கு ஆத்மசாந்தி!



நூல் : இரண்டு

# ஆத்மீகக் காதல்

கூடிக்களித்தல் (SYMPOSIUM)

"தாமரைக் கண்ணனுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் தூங்கும் துயில் போல் இனிமை யானதா?"

—திருக்குறள் (புணர்ச்சி மகிழ்தல்)

[பிளேட்டோ எழுதிய ஆத்மீகக் காதல் அல்லது கூடிக் களித்தல் (Symposium) என்னும் நூல், உள்ள நூல் ஆராய்ச்சி யாளர்களுக்கும் ஆத்ம தத்துவ விசாரகர்களுக்கும், இன்பத்தை விரும்பும் காதலர்களுக்கும் மெய்ப்பொருளை நாடும் துறவி களுக்கும் ஒருங்கே சிந்தனை விருந்தாக அமைகிறது. இந்நூலில் ஆண் பெண் காதல் வழியாக ஆத்ம விசாரணை நடைபெறுகிறது. குடியரசு நூலில் தனிமனிதனின் நீதியையும் அரசியலின் நீதி யையும் ஒன்றுபடுத்திப் பார்ப்பதுபோலவே இந்த ஆத்மீக நூலில், ஆண் பெண் ஒருவரை யொருவர் காதலித்து ஆத்ம லயிப்புக் கொள்ளும் காமத்தையும், மெய்ப்பொருளோடு லயிக்கக் காமுறும் மெய்யறிவின் ஆத்ம ஞானத்தையும் ஒன்றுபடுத்திப் பார்க்கிறார் பிளேட்டோ. அநாதிகாலம் தொட்டு மனித இயற்கையில் எங்க

னும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆண் பெண் காதலின் மூல தத்துவத்தைப் புறக்கணித்து விடாமல் சரியான வழியில், தெய்வீகத்தையும் மானுஷ்யத்தையும் இணைத்துப் பார்க்கும் முறையில் ஆத்ம விசாரணை செய்கிறார். இது மற்ற ஆத்ம ஞானிகளுக்கு ஒரு வழிகாட்டிபோல் அமைகிறது. 'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்; கடவுள் நிலை அவளாலே எய்தல்வேண்டும்' என்றும் 'போக நிலை உணராதவர்கள் பேசும் அத்துவைதம் பொய்;' என்றும் பாரதியார் கூறியதையும், பக்தி நூல்களில் சிறந்தனவாக விளங்கும் ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவையும் நாயகி நாயக பாவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், சிவ சக்தி தத்துவத்தையும், அர்த்த நாரீஸ்வர உருவ அமைப்பையும் கூர்ந்து நோக்கினால் இந்த 'ஆத்மீகக் காதலின்' சிறப்பு தெரியவரும்.

இந்நூலை 'ஆத்மாவின் காமத்துப்பால்' என்றே கூறிவிடத் தோன்றும்

இவ்வளவு சிறப்புவாய்ந்த மாபெரும் நூலின் சுருக்கந்தான் கீழே தரப்படுகிறது.]

[நூல், ஒரு கவிஞன் மாளிகையில் நண்பர்களின் களி விருந்தில் ஆரம்பமாகிறது. ஒரு சோக நாடகக் கவிஞன், ஒரு விகடகவி, ஒரு மருத்துவன், ஓர் அரசியல் தலைவன், ஓர் இலக்கிய மேதை, மற்றுமிருவர் கூடியிருந்து காதல் தெய்வத்தைப் போற்றத் துவங்கி, 'காதல் என்றால் என்ன ?'' என்று தர்க்கிக்கிறார்கள். பிரளயத்திற்குப் பிறகு முதன் முதலில் பூமியும் காதலுந்தான் தோன்றின; கடவுளரின் வரிசையில் காதல் தெய்வந்தான் முழுமுதலானவன்; காதலன்தான் அதிகமாகத் தெய்வீகத் தன்மை வாய்ந்தவன்; ஏனெனில் கடவுளால்தான் அத்தகைய உணர்ச்சி பெறுகிறான்; காதல்தான் இந்த உலகில் மனித வாழ்வுக்குப் பண்பையும் சாவுக்குப் பிறகு ஆனந்தத்தையும் தருகிறது என்கிறான் ஒருவன். உடலைக் காதலிப்பது, உள்ளத்தைக் காதலிப்பது—என்று காதல் இரண்டுவிதமானது; ஆத்மாவைக் காதலிக்காமல் காதலியின் வெளிஅழகைக் காதலிக்கும் கீழ்த்தரமான காதலன், அழகும் இளமையும் வற்றியதும் தன் வாக்குறுதிகளையெல்லாம் மறந்து பறந்தோடி விடுகிறான்; அழகில் குறைந்திருந்தாலும் வாழ்க்கை முழுதும் நீடித்துக் காதலிப்பதுதான் உன்னதமான காதல்; அத்தகைய இளமையின் காதலும் தத்துவப் பயிற்சியும் ஒரே இடத்தில் சந்திக்கவேண்டும்' என்கிறான் இன்னொருவன். மருத்துவரோ வியாதி ஆரோக்கியங்களைப் பற்றிய தம் வைத்திய அறிவைக் கொண்டு காதலை மருத்துவ முறையில்

ஆராய்கிருர். இவ்வாறு பலரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லி முடித்த பிறகு சாக்ரடீஸ் என்ற கதாபாத்திரத்தின் மூலம் பிளேட்டோ தம் ஆத்ம விசாரணைகளை வெளியிடுகிருர் :]

[அழகும், அது எழுப்பும் காதலும் மெய்மைக்குரிய ஒரு பாதையென பிளேட்டோ கருதி, 'மனிதனுக்கும் தெய்வத்திற்கும் நடுவேயிருந்து பிணைக்கும் துபாஷிதான் காதல்' என்கிருர். மனித உற்சாகத்தின் செயல் நோக்கமாக விளங்கும் காதல் 'பாதி தெய்வீகமும் பாதி புழுதியும் கலந்ததொரு கலவை' என்பது அவர் எண்ணம். மனிதன் மானுஷ்ய அழகின்மீது காதல் கொள்கிருன். அதிலிருந்து இன்னுமிரு காதல்கள் எழும்புகின்றன—குணம், செயல், நியதி, பெரும் இலட்சியங்கள், இவற்றின் அழகு மீது காதல் கொள்வது, இறுதியில் அழகின்மீதே காதல் கொள்வது; இந்த ஆசையோடு ஒரு சிருஷ்டி உணர்ச்சியும் கூடவே இணைந்திருக்கும்; அழகின் ஈடுபாட்டிஞல் சிருஷ்டி உணர்ச்சி தூண்டப்பட்டு, பலவிதமான சிருஷ்டிகளாக வெளிப்படுகிறது.— இரண்டு விதக் காதல்களுக்கும் சிருஷ்டியுணர்ச்சி உண்டு. சரீர அளவில் ஏற்படும் காதல், உடம்பின் குழந்தைகளை உற்பத்தி செய்கிறது; உன்னதமான இலட்சிய வேட்கைகளில் ஏற்படும் காதல், ஆத்மாவின் குழந்தைகளை உற்பத்தி செய்கிறது (கலைகள் முதலியன)]

**காதல் என்ருல் என்ன?** அஃது அழியக்கூடியதுமல்ல; அழிவற்றதுமல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட ஏதோவொன்று. அது மாபெரும் உயிர்ப்பாகும். தெய்வீகத்திற்கும் மானுஷ்யத்திற்கும் இடையிலிருந்து பிணைக்கும் ஒரு மாபெரும் உயிர்ப்புதான் காதல்.

அது, மானுஷ்ய மூலங்களை ஏழ்மையெனும் தாயிடமிருந்து பெறுகிறது; முயற்சி யெனும் தந்தையிடமிருந்து (ஞானத்தின் புத்திரரிடமிருந்து) ஓர் உன்னத சுபாவத்தைப் பெறுகிறது; நன்மையான ஒன்றை நிரந்தரமாகக் கைக்கொள்ள விரும்புவது தான் அந்த உன்னத சுபாவம்.

ஞானம் என்பது அதி அழகானதொரு பொருள்; காதல், அழகின் வெளிப்பாடு; ஆகவே காதலும் ஓர் ஆத்ம விசாரகன் தான்; ஞானத்தின் நேசன்தான்; ஞானத்தை அவன் காதலிப்பதால், அஞ்ஞானத்திற்கும் ஞானத்திற்குமிடையே இருக்கிருன். அவன் மூர்க்கன்; ஊதாரி; தெருத் தெருவாய் அலைவான்; உபாதையுறுவான்; நுண்ணிய அறிவைப் பிரயோகிப்பான்; மயக்குவான்; வளப்பமானவனுய்த் திரிவான்—இதுதான் காதலின் சுபாவம்.

அழகானவொன்றை மனிதன் காதலிக்கும்போது என்ன விரும்புகிருன்? அதை அடையவே விரும்புகிருன்! அதுபோலவே,

நன்மையை நிரந்தரமாகச் சுவீகரித்துக்கொள்ளும் ஒரு வேட்கை தான் காதல். உடம்பாலோ, ஆத்மாவாலோ, அழகில் ஜனனத்தைக் காண்பதுதான் அதன் நோக்கம். இயன்றவரை என்றென்றும் அழியாமல் நீடித்திருக்க முயல்வதுதான் மனித இயற்கை. தாங்கள் இறந்தபிறகும் தங்கள் பெயரையும் சந்ததியையும் புகழையும் நிலை நிறுத்தி என்றென்றும் அழியாதவாறு அமரத்வமடையும் விருப்பந்தான் மனித சுபாவம். அதற்காக மானிடர் அனைவரும் தங்கள் உடம்புகளிலும் தங்கள் ஆத்மாக்களிலும் கருவுற்றிருக்கிறார்கள். மனித சுபாவமானது ஜனனவிருத்தி செய்ய விரும்பும் ஒரு வயதும் பருவமும் உண்டு. அந்த வயது வந்ததும் ஜனன விருத்தி செய்யும். இந்த சிருஷ்டி விருத்திதான் ஆண் பெண் சங்கமம். அஃது ஒரு தெய்வீகமாகும். ஏனெனில் கருப்பமுறுவதும் ஜனன விருத்தி செய்வதும் அநித்தியமான ஜீவப்பிராணிகளின் ஒரு நித்தியத்துவ நோக்கமாகும். குறிப்பிட்ட பக்குவ வயது வந்ததும் மனித சுபாவமானது, சிருஷ்டி செய்ய விரும்பும்போது அழகில் தான் ஜனன விருத்தி செய்யும், குரூபத்தில் அல்ல. ஏனெனில், ஒன்றுபட்ட தன்மையில்தான் சிருஷ்டி நடைபெறும். குரூபமோ தெய்வீகத்துக்கு மாறுபட்ட தன்மையானது. அழகில் தான் சீரான தன்மை இருக்கிறது. பிறப்பிற்குத் தலைமைதாங்கும் விதித்தேவதையாக அழகு அமைந்திருப்பதால், அழகை நெருங்கும்போதுதான் சிருஷ்டி வேட்கை அதிகமாகவும் சீராகவும் இருக்கும்.

**ஆனால் காதல் என்பது அழகைமட்டும் காதலிப்பதல்ல. அழகில் சிருஷ்டியையும் ஜனன விருத்தியையும். காமுறுவதுதான் காதலாகும்.** ஏனெனில் அழிந்துபோகும் ஜீவப்பிராணிகளுக்கு ஜனன விருத்தி யென்பது ஒருவகையில் என்றென்றும் அழியாததொரு நிரந்தரத்வமாகும். ஆகவே, நிரந்தரத்தைக் காதலிப்பதுதான் காதல். எல்லா மானிடரும், தங்கள் குழந்தைகள் மீது காதல் கொள்வதைக் கண்டு வியப்புறவேண்டாம். அழியாத தன்மை பெறவே, அவ்வாறு அகிலம் முழுதும் மனித சுபாவம் காதல் கொள்கிறது.

தங்களுக்குப் பின்னால் தங்கள் அம்சத்தையோ, புகழையோ நிலைநிறுத்திச் செல்ல விரும்புகிறார்கள்; அதற்காகப் பெரும் இலட்சியங்களில் ஈடுபடுகிறார்கள். ஏனெனில் அழிவற்ற நிரந்தரத்தின் மீது அவர்களுக்கு விருப்பம்! உடம்பும் ஆத்மாவும் கருப்பமுறுவதாகச் சொன்னோம். அவையிரண்டும் இரண்டு ரகக் காதல்களாகும். உடம்பில் மட்டும் கருக்கொள்வோர் பெண்களை விரும்பிப் பிள்ளைகளைப் பெறுகிறார்கள்—இதுதான் அவர்கள்

காதலிக்கும் ரகம். அவர்களின் குழந்தைகள் அவர்களுக்குப் பின்னால் அவர்களின் நினைவை நிலைநிறுத்தி அவர்கள் எதிர் பார்க்கும் அழிவற்ற தன்மையை அளிப்பார்கள் என்பது பெற்றோர்களின் நம்பிக்கை. இன்னொரு சாரார், ஆத்மாவில் மட்டும் கருக்கொள்வோர். சில மனிதர்களின் ஆத்மாவிற்கு அவர்களின் உடம்பைவிடச் சிருஷ்டி சக்தி அதிகம் இருப்பதுண்டு. அத்தகைய சிருஷ்டியாளர் கலைஞர் ஆவார்கள். பிறவி மேதைகள், கவிஞர்கள் ஓவியர்கள் அனைவரும் தங்கள் ஆத்மாவில் கருப்பமுறும் சிருஷ்டி யாளர்களாவார்கள். சாமானிய ஜனங்கள் தங்கள் உடம்பால் குழந்தைகளைப் படைத்துச் சந்ததி விருத்தி செய்து தங்கள் பெயரை நிலைநிறுத்திச் செல்வதுபோல் இவர்கள் தங்கள் ஆத்மா வினால் கலைச் செல்வங்களையும் மெய்யறிவுகளையும் படைத்துத் தங்கள் புகழை நிலைநிறுத்திச் செல்லுகிறார்கள். ஆத்மாவில் இத்த கைய வித்துகளை உடைய இளைஞன், புத்துணர்ச்சி பெற்றுப் பக்குவமடைந்ததும், சிருஷ்டி செய்ய அழகைத் தேடியலைகிறான். அவன் சரியான முறையில் அழகை நெருங்க விரும்பினால், இளமையில் அழகிய உருவங்களை நேசிக்கவேண்டும். முதலில் ஒரே ஓர் அழகிய உருவத்தைத்தான் காதலிக்க வேண்டும். அதிலி ருந்து அழகிய சிந்தனைகள் பிறக்கும். விரைவில் எல்லா உருவங் களிலும் உள்ள அழகு ஒன்றுதான் என்று காண்பான். பிறகு உருவங்களைப் பொருட்படுத்தாமல் அழகையே அழகுக்காகக் காதலிக்கத் தொடங்குவான். காதலின் மர்மத்தை அடையப் புவனத்தின் அழகுகளிலிருந்து துவங்கி நிரந்தர அழகைப் பெறல் வேண்டும். ஓர் உருவத்தின் அழகிலிருந்து பல உருவங்களின் அழகிற்கும், அதிலிருந்து நடத்தையின் அழகிற்கும், அதிலிருந்து மெய்ஞ்ஞானத்தின் அழகிற்கும், படிப்படியாகச் சென்று இறுதியில் நித்திய அழகை எட்டவேண்டும். இந்தச் சித்திபெற்ற மனித சுபாவமானது காதலைத் தவிர வேறு துணைவனைச் சுலப மாகக் காண முடியாது !

**[கீழே காண்பது கிரேக்க நாட்டின் மாபெரும் விகட கவியான அரிஸ்டோபனஸ் கூறிய கருத்துக்களாகும் :]**

ஆண் பெண் என இப்போது இருப்பதுபோல் பால் வேற்றுமை ஆதியில் இரண்டாக இருந்ததில்லை. ஆதிமூலத்தில் அவை எண்ணிக்கையில் மூன்றாக இருந்தன. அப்போது ஆண்பால் இருந்தது; பெண்பால் இருந்தது. இவ்விரண்டின் கூட்டுக் கலப் பாக மூன்றாவதொரு பாலும் இருந்தது.

அநாதிகாலத்து மனிதன் உருண்டையாக, முதுகுப்புறமும் பக்கங்களும் வட்டவடிவமாக அமையுமாறு, இருந்தான். அவ னுக்கு நான்கு கரங்கள், நான்கு பாதங்கள் இருந்தன. மூன்னும்

பின்னும் எதிர்த் திசைகளில் பார்க்குமாறு, ஒரே மாதிரியான இரண்டு முகங்களுடைய ஒரு தலையும் இருந்தது. நான்கு காதுகளும், இரண்டு அந்தரங்க அவயவங்களும் இருந்தன. கரணப் புருக்கள் தங்கள் பாதங்களை ஆகாயத்தில் தூக்கிக்கொண்டு மேலே மேலே பறந்து போவதுபோல், அவன் தன் நான்கு கால்கள், நான்கு கைகளினால் மேலே மேலே வேகமாக உருண்டு போக முடியும்.

அப்போது ஆண்பால், பெண்பால், ஆண் பெண் கலப்பான மூன்றாவது பால்* ஆக மூன்று பால்கள் இருந்தன என்று சொன்னோம்.

ஏனெனில் சூரியன், சந்திரன், பூமி என மூன்றாக உள்ளன. மூலத்தில் ஆணானவன் சூரியனின் குழந்தையாக இருந்தான்; பெண்ணானவள் பூமியின் குழந்தையாக இருந்தாள். ஆண் பெண் கலப்பினரோ (அலியோ) சந்திரனின் குழந்தையாக இருந்தது. ஏனெனில் பூமி சூரியன் கலப்பிலிருந்து சந்திரகோளம் உண்டாயிற்று.

அம் மூன்று பாலரும் தங்கள் பெற்றோரைப்போல் உருண்டு உருண்டு நகர்ந்தார்கள். அவர்களின் சக்தியும் பலமும் அதிபயங்கரமாயிருந்தது. அவர்கள் மமதை யெண்ணங்கள் அடைந்தார்கள். கடவுளர்களை எதிர்த்தார்கள்; வானுலகின் மீதேறிக் கடவுளர் மீதே கை வைக்கத் துணிந்தார்கள். சுவர்க்கத்தில் மந்திராலோசனை நடந்தது. அம் மூன்று பாலரையும் கொன்று, இடிகளினால் அந்த வர்க்கத்தையே அழித்துவிடலாமா என்று கடவுளர் நினைத்தனர்.

அவ்வாறு செய்தால், மனிதர் அளிக்கும் பக்திக்கும் தியாக காணிக்கைகளுக்கும் முடிவேற்பட்டுவிடுமே! ஆனால், இன்னொரு புறமும் அவர்களின் கர்வம் அடக்குவாரின்றி அத்துமீறிப் போவதையும் கடவுளால் சகிக்க முடியவில்லை! கடவுள் ஜீயஸ் (Zeus) அதற்கு வழி கண்டுபிடித்தார்.

"அவர்களின் மமதையையும் நடத்தைகளையும் அடக்க என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது! மனிதர் இனம் தொடர்ந்து இருக்க வேண்டியதுதான். ஆனால் அவர்களை இரண்டு இரண்டாக வெட்டி வைப்பேன். அதனால் அவர்களின் பலம் குறைந்துவிடும்; எண்ணிக்கை பெருகிவிடும். அவர்களை நமக்கு அதிபிரயோஜனமாக்கிக் கொள்ளவும் இது சௌகரியமாயிருக்கும். இனிமேல் அவர்கள் இரண்டு கால்களாலேதான் நேராக நடக்க வேண்டும். அதற்குப் பிறகும் தொடர்ந்து அவர்கள் மமதையுடனிருந்தாலோ, அமைதியாக இராவிட்டாலோ, அவர்களை மேலும் மேலும் கூறு கூறாக்கி வைப்பேன். அவர்கள் ஒரே காலுடனே தத்தித் திரிய நேரிடும்!" இவ்வாறு அக் கடவுள் சொல்லி முட்

---

* அர்த்தநாரீஸ்வரம், அல்லது அலிப்பால்.

டையை ஒரு மயிரிழையால் இரண்டாக வெட்டுவதுபோல், மனிதரை இரண்டு இரண்டாக வெட்டி விட்டார். (மனிதனுக்கு இரண்டு முகங்களுக்குப் பதில் ஒரே முகம் உண்டாயிற்று.) அந்த ஒரு முகத்தையும் கழுத்தின் ஒரு பாதியையும் தன்னை நோக்கியே பார்க்கும்படி ஒரு புறமாகத் திருப்பி வைக்குமாறு அப்போலோக் கடவுளிடம் சொன்னார். மனிதன் தன்னின் ஒரு பகுதியை மட்டும் சிந்திக்கட்டும். அதனால் அவன் பணிவைப்பற்றிப் பாடம் கற்றுக்கொள்வான்!


இவ்வாறு இரண்டு இரண்டாகக் கூறாக நாம் பிரிக்கப்பட்ட போது, ஒவ்வொருவருக்கும் ஒரு பாதியே இருக்கிறது. ஆகவே, மனிதன் எப்போதும் தான் முழுமை பெறத் தன்னுடைய இன்னொரு பாதியைத் தேடிக்கொண்டிருக்கிறான். ஒருவன் தன்னுடைய இன்னொரு பாதியைச் சந்திக்கும்போது, தன்னின் நிஜமான பாதியைச் சந்திக்கும்போது, அந்த ஜோடிகள், காதல் நட்பு, அந்தரங்க ஈடுபாடு முதலான வியப்புகளில் மூழ்கிவிடுகின்றன. காதலர் இருவரும் ஒருவர் பார்வையிலிருந்து ஒருவர் ஒரு கணப்பொழுதேனும் பிரிந்திருக்க மாட்டார்கள். இத்தகைய காதல்கொண்ட இருவர் தங்கள் வாழ்க்கை முழுவதையும் ஒன்றாகவே கழிப்பார்கள். ஆனாலும் ஒருவரிடமிருந்து ஒருவர் எதை எதிர்பார்க்கிறார்களென்று அவர்களால் விளக்கிச்சொல்ல முடியாது. ஒருவர் மீது ஒருவருக்கு உள்ளூர இருக்கும் இந்தத் தீவிர ஆசையானது வெறும் சரீர இச்சையை அடிப்படையாகக் கொண்ட காமமாகவும் தோன்றவில்லை. ஆனால் இருவரது ஆத்மாவும் வேறு எதையோ ஒன்றை நிதர்சனமாக இச்சித்து வேட்கை கொள்கிறது. அது எதுவென்று வாய்விட்டுச் சொல்ல முடிவதில்லை; காதலியால் சந்தேகமற அனுமானிக்கவும் முடிவதில்லை.

பக்கத்தில் பக்கத்தில் படுத்திருக்கும் அந்தக் காதல் ஜோடிகள் முன் (Hephaestus) கடவுள் தம் கைக் கருவிகளுடன் தோன்றி, "காதலர்களே, நீங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் எதை விரும்புகிறீர்கள்?" என்று கேட்டால் அவர்களுக்கு அதை விளக்கிச் சொல்லுவது அசாத்தியமாயிருக்கும்; குழம்புவார்கள்.

அவர்களின் குழப்பத்தைக் கண்டு கடவுளானவர், 'காதலர்களே! நீங்களிருவரும் அப்படியே உருகி ஒன்றாகி விட ஆசைகொள்கிறீர்களா? இரவு பகல் எந்த நேரமும் ஒருவர் சகவாசத்திலே ஒருவர் ஒரு மயிரிழை கூடப் பிரியாமல் ஒன்றுபட்டிருக்க விரும்புகிறீர்களா? அதுதான் உங்கள் ஆசையென்றால் உங்கள் இருவரையும் உருக்கி ஒரே நபராக்கிவிடத் தயாராயிருக்கிறேன்! நீங்கள் இருவர், என்பதற்குப் பதில் 'ஒருவர்' ஆகி விடுவீர்கள். நீங்கள் இங்கே உயிர்வாழும் போது ஒரே ஜீவனாகவே ஒரே உருவத்தில் ஒன்றாக வாழுங்கள். இந்தப் பூலோகத்தில் நீங்கள் செத்த பிறகும் இரண்டு ஆத்மாக்களுக்குப் பதில் ஒரே ஆத்மாவாகவே

விண்ணுலகிற்கு விடுபட்டு செல்லுங்கள்—இதுதான் நீங்களிருவம் ஆசை வெறியுடன் இச்சிக்கும் கோரிக்கையா? இந்தக் கோரிக்கை கை கூடிஞல் நீங்கள் திருப்தியடைவீர்களா?'' என்று கேட்டால் அதற்கு ஆனந்தத்துடன் இணங்காத எந்த மனிதனும் இரான். காதலர் ஒருவரை யொருவர் சந்தித்து, ஒருவருள் ஒருவர் ஒன்ருக உருகிக் கலந்துவிட வேண்டும் மென்ற இச்சை வெறி—இருவரும் ஒருயிராகி விட வேண்டுமென்ற ஆசைத் துடிப்பு—அதுதான் மனிதனிடம் அநாதி காலந் தொட்டு இருந்துவரும் ஆதித் தேவையின் உணர்ச்சி வெளிப்பாடாகும். அதற்குக் காரணம் மனித சுபாவமானது ஆதி மூலத்தில் ஒன்ருக இருந்தது. நாமெல்லாம் ஒரே முழுமையாக இருந்தோம். முழுமையின் இச்சைக்கும் இந்த உலகில் தேடியலேயும் வேட்கைக்குந்தான் காதல் என்று பெயர்

நாமெல்லாம் ஒரே ஆத்மாவாக இருந்த காலம் ஒன்றுண்டு. ஆனல் இப்போதோ, மனித ஜாதியின் அக்கிரமத்தால் கடவுள் நம்மைப் பலப்பல கூறுகளாகப் பிரித்திருக்கிருர், பெரிய நாடு சிறு சிறு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்டது போல்! நாம் கடவுள் ஒழுங்கிற்கு அடங்கி நடக்காவிடில், நாம் மேலும் மேலும் பிளவுண்டு பல பல புள்ளிகளாகச் சிதறிப் போகும் ஆபத்து நேரிடும். அரை மூக்குடனும் பாதிப் பக்க உருவுடனும் கூடிய சித்திரப் பதுமைகளாகவோ, பல பல எண் குறிப்பு புள்ளிகளாகவோ ஆகிவிடுவோம். ஆகவே நாம் தீமை தவிர்ந்து நன்மை பெறக் கடவுளிடம் மதிப்புச் செலுத்துமாறு மனிதர்களைத் தூண்டுவோமாக! காதல்தான் நம் தலேவர், அமைச்சர் எல்லாம். காதலே எவரும் எதிர்க்காதீர்கள்—போரைக் கடவுளர் வெறுக்கிருர். நாம் கடவுளின் தோழர்களாகவும் அவரோடு சமாதான முள்ளவர்களாகவு மிருந்தால், நாம் நம்முடையஉண்மைக் காதலிகளைத் தேடிக் காணவேண்டும். ஆனல் தற்காலத்தில் அது மிக அபூர்வமாகவே இந்த உலகில் நிகழ்கிறது!



நூல்: மூன்று; நான்கு; ஐந்து

# ஆத்மீக வாழ்க்கை

1. Phaedo, 2. Theaetetus, 3. Phaedrus

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

—திருக்குறள் (இல்வாழ்க்கை, 50)

[அரசியல் சமுதாய சிந்தனையின் சரித்திரத்தில் பிளேட்டோ அதி முக்கியமானவராய் விளங்குவது போலவே, தத்துவ ஞான சரித்திரத்திலும் அதி முக்கியமானவராய் விளங்குகிறார். ஆத்மீக வாழ்வின் உன்னதத்தை எடுத்துக் காட்டும்போது அவர் காண்பது இயற்கை மதத் தத்துவம் ஆகும். அவர் தம் 'குடியரசு' நூலில், தனி மனிதனின் நீதியையும் அரசியலின் நீதியையும் பொருத்திப் பார்ப்பது போலவே, தம் ஆத்ம விசாரணையிலும், மண்ணையும் விண்ணையும்—மானுஷ்யத்தையும் தெய்வீகத்தையும்—உடலையும் ஆத்மாவையும்—இப் பிறவியையும்—மறு பிறவியையும் பொருத்திப் பார்க்கிறார்.

நம் நாட்டு ஆத்மீக நூல்களின் துவைத அத்துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களும், பகவத் கீதையின் ஆத்ம விளக்கமும் மறுபிறவியைத் தொடரும் கர்மாதத்துவமும், சௌந்தரிய லஹரி, சௌந்தரிய உபாஸனே, திருக்குறள் அறத்துப்பால், காமத்துப்பால், அகநானூறு, புறநானூறு முதலானவையும் அவரது ஆத்மீக நூல்களில் பிரதிபலிப்பதையும் காணலாம். திருக்குறள் உபநிஷத காலங்களுக்கு முன்பே தோன்றிய பிளேட்டோவின் ஆத்ம சிந்தனைகளைக் கண்டு நமக்குப் பிரமிப்பும் வரும். அவரது மூன்று நூல்களிலுள்ள ஆத்மீக வாழ்க்கை பற்றிய பொதுவான சிந்தனைகள் தாம் கீழே சுருக்கித் தரப்படுகின்றன.]

[ஆத்மாவின் அமர நிலையை வர்ணிக்கும் ('Phaedo') என்னும் நூல் சிறையில் மரணத்திற்கு முன் சாக்ரடீஸ் கூறியதாக பிளேட்டோ அமைத்திருக்கும் நூலாகும். அதில் பிறப்பையும் இறப்பையும், இம்மையையும் மறுமையையும் பொருத்திப் பார்க்கிறார் பிளேட்டோ.]

மனிதன் மரணத்தைக் கண்டு சிரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இந்த உலக வாழ்க்கை மனிதனுக்கு ஒரு சிறையாகவும் இந்த உடல் அவனுடைய ஆத்மாவுக்கு ஒரு சிறைக்கூடமாகவும் இருக்கிறது. உண்மைத் தத்துவஞானி தற்கொலைசெய்துகொள்ளக் கூடாதே தவிர, எந்தச் சமயமும் சாவை ஆனந்தத்துடன் வரவேற்கும் மனப் பக்குவமுள்ளவனுயிருப்பான். ஆத்மாவை உடல் சிறையிலிருந்து விடுதலை செய்யவே சதா முயன்றுகொண்டிருக்கும் தத்துவஞானம் என்பது உண்மையில் சாவைப் பற்றிய படிப்புத்தான்.

ஆத்மாவின் வாழ்க்கை இந்த உலகத்தோடு முடிந்து விடுவதில்லை. உறங்குவதுபோல் சாக்காடு; கண் விழிப்பதுபோல் பிறப்பு; ஒன்றிலிருந்துதான் ஒன்று தொடங்குகிறது. ஆத்மா மறு உலகிற்குச் சென்று இந்த உலகில் பெற்ற பண்புகளுக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு பரிசோ, தண்டனையோ பெற்று, அழிவற்ற தன்மையோடு இணைகிறது; அல்லது மறுபிறப்படைகிறது. மனித வாழ்க்கையில் உடல் விவகாரங்களின் விளையாட்டு ஒரு சிறு அங்கந்தான். இந்த அழியக்கூடிய மண் உலகிலிருந்து அழிவற்றதும் தெய்வீகமாகவுள்ள விண்ணுலகிற்குச் செல்லும் யாத்திரை தான் மனிதனின் வாழ்க்கை. இந்த யாத்திரையில் தோழர்களாய் வந்தமையும் ஐம்புலன் உணர்ச்சிகளை நம்பக்கூடாது. மாறுதலில்லாத நித்திய உண்மைகளை மனம் ஒன்றுதான் ஆராய்ந்தறியும். அந்த அறிவின் வழித்துணை குணப் பண்பின் வழியில் ஒழுக்கமான வாழ்க்கை ஆகும். அறிவையும் பண்பொழுக்கத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. அறிவும் ஒழுக்கமுந்தான் விழுப்பம் தரும். ஆகவே வாழ்க்கை முழுவதிலும் அறிவையும் பண்பையும் தேடி மனிதன் நற்கதி பெற முயலவேண்டும்.

ஆத்மா அழிவற்றது; அழிவற்ற ஒன்ருேடு இணையவே விரும்பு கிறது; சத்தியந்தான் நமது ஆத்மதாகம். மெய்யறிவுதான் அதன் பாதை. ஆனல் உடல் அதற்கொரு தடையாகவும் சிறையாகவும் இருக்கிறது.

பசி, பயம், துக்கம், காமம், பாசம், நோய், இன்னும் பலவித மான மனே பாவனைகளையும் நம் உடலானது நம் ஆத்மாவிற்குள் நிரப்பி, நமது அறிவைக் குழப்பிச் சிந்தனைசக்தியைச் சிதைத்து விடுகிறது.

உடலுக்கு அப்பாலிருந்தே எதையும் ஆத்மா ஆராய வேண்டும். உடலை ஒரு திருஷ்டிக் கருவியாக ஆத்மா உபயோகப் படுத்தும்போது, ஐம்புலன் உணர்ச்சிகளின் வழியாக, வழி தவறி நடத்திச் செல்லப்படுகிறது. ஆத்மா குழம்பிக் குடிபோதை கொள்ளுகிறது. ஆனல் ஆத்மா தன்னையே உணரும்போது அஃது அழிவற்ற தன்மையோடு இரண்டறக் கலந்து விடுகிறது. அந்த நிலைதான் ஆத்மாவின் ஞானமாகும்.

ஆத்மா அழிவற்றதாகையாலே, அஃது உன்னதமான பண்பையும் ஞானத்தையும் பெற்ருலொழிய, அதற்குத் தீமைகளி லிருந்து விடுதலையோ நிவாரணமோ இல்லை. ஆத்மா இந்த உலகை விட்டு மறு உலகிற்குச் செல்லும்போது தன் பயிற்சியையும் கல்வி யையும் தவிர வேறெதையும் எடுத்துச் செல்வதுமில்லை.

பிளேட்டோவின் 'Theaetetus' என்னும் நூல் கடவு ளையும் மனிதனையும் பொருத்திப் பார்க்கிறது.

மனிதன் தீமைகளிலிருந்து விடுபடவேண்டும். நன்மை என்று ஒன்றிருந்தால் அதற்கு எதிரான சக்தியாக இன்னென்றும் இருந்தே தீருகிறது. தீமைகளுக்கு வானுலகில் கடவுளரின் மத் தியில் இடமில்லை. அதனல் அவை மானுஷ்ய சுபாவத்தைச் சுற்றியே மண்ணுலகில் நடமாடுகின்றன. நன்மையும் தீமையும் ஒன்றுக்குள் ஒன்று கலந்து மருள்கிறது. நாம் எவ்வளவு இயலுமோ அவ்வளவு விரைவில் இம் மண்ணுலகை விட்டு விண் ணுலகிற்குத் தப்பிச் செல்லவேண்டும். தப்பிச் செல்வதென்ருல் கடவுளைப்போல் ஆவது.

நாம் கடவுளைப்போல் ஆகவேண்டும்; அவரைப்போல் ஆவ தென்ருல் மெய்யறிவாகவும், நேர்மையாகவும் புனிதமாகவும் ஆவது.

கடவுள் நேர்மையே பரிபூர்ண உருவமாகவுள்ளவர். அறமே வடிவானவர். அதிகமாக அறத்தைக் கைக்கொள்ளும் மனிதன் அதிகமாகக் கடவுளைப்போல ஆகிருன். இதை அறிவதுதான்

உண்மையான ஞானம்; உண்மையான பண்பொழுக்கம். (இங்கு நம் திருவள்ளுவர் 'அறவாழி அந்தணன்' என்று கடவுளை அற வடிவமாகக் கருதுவதையும் மனிதனுக்கு முதலறிவாக அறத்துப் பாலை அமைத்து அறத்தையே மனிதனுக்கு வழித்துணையாக ஆக்கியிருப்பதையும் ஒப்பு நோக்குக.)

மனிதர் முன் இரண்டுவிதத் தன்மைகள் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று தெய்வீகம்; அதுதான் உன்னதமான ஆனந்தம். இன்னொன்று தெய்வீகமற்ற தன்மை; அதுதான் ஆழமான துயரம். இவ்விரண்டையும் உணர்வதுதான் மெய்யறிவு. இந்த அறிவில்லாதவர்களுக்கு நல்வினைத் தீவினைப் பயன்கள் விளங்குவதில்லை!

அலங்கார இலக்கணமான 'Phaedrus' என்னும் நூலில் பிளேட்டோ, அறிவையும் அழகையும், முன்பிறவியையும் பின் பிறவியையும் பொருத்திப் பார்க்கிறார். ஆத்மீக வாழ்க்கையின் ஒரே நோக்கம் மெய்யறிவு என்பது அவர் கொள்கை.

[குண ஒழுங்கு, அறிவுப் பயிற்சி (பெரும்பகுதி விஞ்ஞானப் பயிற்சியும் தத்துவ ஞானப் பயிற்சியும்)—இவற்றின் ஊடேதான் மெய்யறிவுக்குரிய பாதை அமைந்துள்ளது. பல வடிவங்களாக வுள்ள அழகு (சௌந்தரிய) உபாசனைகளின் மூலமும் அதை நெருங்கலாம். அழகு (அல்லது சௌந்தரியந்தான்) விரைவில் நெஞ்சைக் கவர்கிறது. பிரபஞ்சம் முழுவதையும் அதிகமாகக் கவரும் சக்தி அழகுக்குத்தான் உண்டு. பூவனத்தின் அழகு மனிதர்களைக் கவர்வதற்குக் காரணம் அது நிரந்தர சௌந்தரியத்தின் பிரதிபிம்பமாக விளங்கி அது பற்றிய புலன்களைத் தட்டி யெழுப்புவதுதான்.]

[மனித ஆத்மாவின் சரித்திரமானது இறக்கைகளுள்ள இரண்டு ரகக் குதிரைகளால் இழுக்கப்படும் ஒரு ரதத்திற்குச் சமமானது—கண்ணியமான ஆசைகள், கண்ணியமற்ற ஆசைகள் என்ற இரண்டு குதிரைகளை உடைய ரதம் அது. அறிஞன் என்ற சாரதியால் அது செலுத்தப்படுகிறது.


ஆத்மா மண்ணில் அழகைச் சந்திக்கும்போது விண்ணின் மெய்யழகு அதற்கு ஓரளவு நினைவு வருகிறது. அழகின் முன்னிலையில் ஆத்மாவிற்குக் காதல் என்னும் இறக்கை முளைக்கிறது.]

["எந்த மனிதன் விவேகமுள்ள புத்தியைச் சாரதியாகவும் அடக்கப்பட்ட மனத்தைக் கடிவாளமாகவும் உடையவனோ அவன் ஸம்ஸாரமாகிய கருவெளியின் எல்லை நிலத்தை அடைகிறான்" என்ற கடோ உபநிஷத் கருத்து இங்கு ஒப்புநோக்குக்குரியது.]

அப்போது இலட்சிய மூலங்களோ அல்லது புலன் மூலங்களோ பிரதானம் வகிக்கின்றன—காமத்தின் ஒழுங்கற்ற மூலாம்சங்களாலோ, அறிவின் ஒழுங்கான மூலாம்சங்களாலோ காதலன் ஆளப்படுவதைப் போல, மனிதன் அழகைச் சந்திக்கும்போது அதன் புற வெளிப்பாட்டை மட்டும் காண்பவனுயிருந்தால் காமத்துக்கு இரையாகி அழகை அனுபவித்து சந்ததி விருத்தி செய்யத் துடிக்கிறன். அவனிடம் அறிவின் அம்சம் மேலோங்கியிருந்தால் அழகை உள்ளூர ஆதரித்துக் கம்பீரமும் கண்ணியமும் கொள்கிறன். இவ்வாறு ஆத்ம ரதக் குதிரைகளில் முளைக்கும் இறக்கைகளானவை கண்களின் மூலம் அழகு வசமாகி ரத்தக் கதகதப்புறுகின்றன.

["பிளேட்டோ, முன் பிறவியும் பின் பிறவியும் உண்டெனக் கருதினர். ஆத்மீக உலகம் ஒன்றுண்டெனவும், அதற்குத்தான் ஆத்மா சொந்தமானதெனவும் அங்குதான் ஆத்மா தன் உண்மையான இயல்பை உணரும் எனவும் பிளேட்டோ நம்பினர்.]

# பிளேட்டோவின் சிந்தனைகள்



## 1. மதம்

### உலகின் படைப்பு

இந்த உலகத்தைச் சிருஷ்டி கர்த்தா ஏன் படைத்தார் என்று சொல்லுகிறேன். அவர் நல்லவராக இருந்தார். நல்லவருக்கு எதைப்பற்றியும் பொறாமை இருப்பதில்லை. அதனால் எல்லாம் தம்மைப்போல் இருக்க வேண்டுமென விரும்பினார். இதுதான் உண்மையில் சிருஷ்டியின் மூலமும் உலக தத்துவத்தின் மூலமும் ஆகும்.

['ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் திருக்குறள் மொழியையும் 'ஆத்மா ஒன்றே ஆதியில் இருந்தது; வேறு எதுவும் இல்லை; உலகங்களைச் சிருஷ்டிக்க அது விரும்பியது; அது இவ்வுலகங்களைச் சிருஷ்டித்தது' என்று கூறும் ஐதரேய உபநிஷத் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்கவும்.]

பொருள்கள் அனைத்தும் நல்லனவாக இருக்க வேண்டுமே தவிர, எதுவும் கெட்டதாக இருத்தலாகாதெனக் கடவுள் விரும்பினார். ஆனால் புலப்படும் ஜட வஸ்துக்கள் அனைத்தும் ஓய்வில்லாமல் ஒழுங்கற்று அலங்கோலமாக இயங்குவதைக் கண்ட அவர், குழப்பத்திலிருந்து ஒழுங்கைக் கொண்டுவந்தார்.

அதி உன்னதமானவரின் சிருஷ்டி அதி உன்னதமான அழகைத் தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது.

இயற்கையில் புலப்படும் பொருள்களில் அவர் பிரதிபலிக்கும்போது, அறிவற்ற எந்தப் பிராணியும் அறிவுள்ளதை விட அதி அழகில்லாமலிருப்பதையும், ஆத்மா இல்லாத எதிலும் அறிவு புலப்படாமலிருப்பதையும் சிருஷ்டிகர்த்தா கண்டார். இந்தக் காரணத்திற்காகவே, அவர் இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கும்போது, உடம்பிற்குள் ஆத்மாவையும், ஆத்மாவுக்குள் அறிவையும் வைத்தார். இயற்கையில் அதி அழகும் அதி உன்னதமும் வாய்ந்த

ஒரு சிருஷ்டிக்கு மனிதன் சிருஷ்டி கர்த்தாவாக விளங்கவேண்டும் என்பதற்காகவே, கடவுள் அவ்வாறு செய்தார். ஆக, கடவுளின் கருணையால் இந்த உலகமானது அறிவும் ஆத்மாவும் பெற்ற உயிர்ப் பிராணியாக ஆயிற்று. (Timaeus எனும் நூலில்.)

['ப்ரஞ்ஞானம் பிரம்மம்' என்னும் ருக்வேத மகாவாக்கியம் ப்ரஞ்ஞானமாகிய பகுத்தறிவே கடவுள் என்று கருதுகிறது. 'உலகம் பகுத்தறிவால் நடத்தப்படுகிறது; பகுத்தறிவால் நிலை பெறுகிறது; பகுத்தறிவே பிரம்மம்' என்று ஐதரேய உபநிஷத்தும் கூறுகிறது. திருவள்ளுவரும் 'வாலறிவன்' என்ற பதப்பிரயோகம் மூலம் கடவுளைத் தூய அறிவு வடிவமாகக் கருதுவதையும், 'அறவாழி அந்தணர்' என்று கூறி அறக் கடலில் உள்ள செந் தண்மை பூண்டவர் என்று கருதுவதையும் இங்கு ஒப்பு நோக்குக.]

## இயற்கை வாதம்

அதி அழகான பொருள்கள், மாபெரும் அம்சங்கள் அனைத்தும் தற்செயலாகச் சம்பவித்த இயற்கையின் தொழில் களே ஆகும் எனப் பௌதிகவாதிகள் சொல்லுகிறார்கள். நெருப்பு நீர், நிலம், காற்று—இவை இயற்கையினாலோ தற்செயலாகவோ இயங்குகின்றனவே தவிர, (பரமாத்மாவின்) கலை விநோதத்தினால் அல்ல! இந்த மூல பூதங்களுக்கு அடுத்தபடியாக, சூரியன் சந்திரன், பூமி, நட்சத்திரங்கள் என்ற ஜடக் கிரகங்கள் வந்தன. இவை முன்பு சொன்ன ஜீவனற்ற மூல பூதங்களினால் உண் டாயின. நெருப்பு, நீர், காற்று முதலிய மூல பூதங்கள் தங்கள் சொந்த சுபாவ நியமங்களை யொட்டி ஒன்றோடொன்று ஒடியலைந்த போது, சகல வானங்களும், கிரகங்களும், அவற்றிலுள்ள பொருள்களும் தற்செயலாகவே உற்பத்தி ஆயின. காலக்கிரம வளர்ச்சியில் ஜீவப் பிராணிகளும் செடி கொடிகள் முதலான தாவர வர்க்கங்களும் உண்டாயின. எல்லாம் இயற்கையின் பரிணாம வளர்ச்சியே தவிர, இதில் கடவுளுக்கோ ஜீவாத்மாவின் மனசுக்கோ எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. எல்லாம் இயற் கையின் தொழிலே தவிர இறைவனின் லீலையல்ல!

[இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய விஞ்ஞானி டார்வினின் 'ஜீவராசிகளின் மூலம்' (Origin of Species) என்னும் ஆராய்ச்சி நூலுக்கு உதவிய பரிணாமவாதத்துக்கு மூல வித்து இங்கு பிளேட்டோவிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதைக் காணவும். 'பிரம்மமாகிற இந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டாயிற்று; ஆகாசத்திலிருந்து வாயு; வாயுவிலிருந்து அக்னி; அக்னியிலிருந்து ஜலம், ஜலத்திலிருந்து செடி கொடிகள்; செடி கொடிகளிலிருந்து அன்னம், அன்னத்திலிருந்து மனிதன்; அவ்வாறு தோன்றிய இம்மனிதன் அன்ன ரஸமே உருவாகியவன்' என்று தைத்திரீ யோபநிஷத் கருத்தையும், 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி' என்ற திருவாசகக் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்குக.]

கடவுள் என ஒன்றில்லை; உண்மையில் தெய்வங்களுக்கு எந்தவித இயல்போ நிஜமான இயக்கமோ கிடையாது; அவை சம்பிரதாயங்களை யொட்டி மனிதனுல் உண்டாக்கப்பட்ட கலா சிருஷ்டிகளே தவிர வேறல்ல; தெய்வங்கள் இடத்திற்கு இடம் மதத்திற்கு மதம் அவற்றின் சம்பிரதாயங்களை யொட்டி பலவிதப் பட்டதாக இருக்கும்—என்றெல்லாம் பௌதிக சாஸ்திரிகள் சொல்லுவார்கள். இயற்கை நீதி, தெய்வ சங்கற்பம் என்பது போல் எதுவும் கிடையாதெனவும் அவர்கள் தர்க்கிப்பார்கள். எல்லா நீதிகளையும் சட்டங்களையும் நியமங்களையும் மனிதர்களே வகுக்கின்றனர்; தேவைக்கேற்றவாறு மாற்றிக்கொள்ளுகின்றனர்; இயற்கையின் பிரகிருதி அம்சத்தில் அவற்றிற்கு அஸ்தி வாரம் கிடையாதென்பது அவர்களின் வாதம். இதனுல் வலிமை தான் உன்னத தருமம் என்று சொல்லவும் தயங்கமாட்டார்கள்!

["உலகம் தருமத்தில் நிலைபெற்றிருப்பதுமில்லை; ஆளும் கடவுளுமில்லை என்பார்கள். தொடர்பின்றி ஒன்ருேடொன்று கலந்தே எல்லாம் பிறந்தன, உலகத்திற்கு வெறும் காமமே மூல காரணம் என்பார்கள். இது அற்பறிவு என்று கூறும் பகவத் கீதைக் கருத்தையும், "(உலகின் உற்பத்திக்குக் காரணம்) பிராணன் என்று பிராணனை அறிந்தவர்களும், பஞ்சபூதங்களென அவற்றை அறிந்தவர்களும் (கூறுவார்கள்)" என்று கூறும் மாண்டுக்கியோபநிஷத் காரிகைக் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்குக.]

இவ்வாறு பேசும் பௌதிகவாதி சகல ஜட ஜீவப் பொருள் களுக்கும், நெருப்பு நீர் நிலம் காற்று முதலான பூதங்களே மூலப் பிரகிருதி அம்சங்கள் என்று கருதுகிருன். இவற்றை அவன் இயற்கையெனக் குறிப்பிட்டு, இவற்றிற்குப் பிறகுதான் ஜீவன் உருவாயிற்று என நினைக்கிருன். மூல காரணத்தைப் பின்ன தாகவும், பின்னதை முன்னதாகவும் மாற்றி உறுதி செய்ய முயல் வதால்தான் அவன் கடவுளியற்கை பற்றிக் கருத்துப் பிழை கொள்கிருன்.

அனேகமாக இத்தகைய சிந்தனையாளர்கள் அனைவருமே ஆத்மாவின் சுபாவத்தையும் சக்தியையும் அதன் மூல தத்துவத் தையும் பற்றிச் சரியாக உணரத் தவறிவிட்டார்களென்றே தோன்றுகிறது. ஆத்மாதான் ஆதி மூலப்பொருள் என்பது அவர் களுக்குத் தெரியவில்லை. சகல ஜடகோள பிரகிருதிகளுக்கும் முன்னுல் ஆத்மாதான் இருந்தது என்பதையும், பிரகிருதி அசை விற்கும் பூத கிரக இயக்கங்களுக்கும் சகல ஜடப்பொருள்களின் மாறுதலுக்கும் தாவர ஜீவ வர்க்கங்களின் பரிணும வளர்ச்சிக்கும் ஆத்மாதான் மூலமானவன் என்பதையும் அவர்கள் அறியவில்லை. உடம்பிற்கு முன் உயிர்தான் முதலே தவிர, உயிருக்கு முன் உடம்பல்ல. 'இயற்கைதான் முதன் முதலான மூல சிருஷ்டி சக்தி' என்று வாதிடும் பௌதிகவாதிகளின் இயற்கை வாதம் சரியான

தல்ல. ஆத்மாதான் முதன் முதலான மூலப்பொருளே தவிர, நெருப்பு, காற்று முதலான பூதங்களல்ல. மற்றப் பொருள்களுக் கெல்லாம் அப்பால், ஆத்மா இயற்கையாகவே இருந்து வருகிற தென்று வேண்டுமானுல் சொல்லலாம்.

### நாஸ்திகம்

'கடவுளே இல்லையெனச் சொல்லும் நாஸ்திகர்கள் கூடவோ குறையவோ எந்தக் காலத்திலும் இருந்து வருகிருர்கள். இக் கொள்கையை இளமையில் கைக்கொண்ட பலர் தங்கள் முதிய வயதில் கருத்து மாறியதை நான் பார்த்திருக்கிறேன். கடவுள் இல்லையென்ற கொள்கையைத் தவிர மற்றுமிரு கொள்கைகள் உண்டு. 'கடவுள்கள் இருக்கின்றன; ஆனுல் மனித ஜந்துக்களைக் கவனிப்பதில்லை' என்பது ஒரு கொள்கையாகும். 'கடவுள்கள் கவனிக்கின்றன; ஆனுல் பலிகாணிக்கைகளினுலும், முகஸ்துதி களினுலும் கடவுளரை வெகு சுலபமாக நமக்கு மசிய வைத்துவிட லாம்' என்பது மற்றெரு கொள்கையாகும். இத்தகைய விஷயங் களில் நீங்கள் தெளிவான நம்பிக்கை கொள்வதற்கு எதையும் அவசரப்பட்டு முடிவு செய்துவிடாமல் காத்திருந்து மெல்ல மெல்ல உண்மையைக் கிரகிக்க வேண்டும்.

['எவன் பிரம்மம் இல்லையெனக் கருதுகிருனே அவன் அஸத்து (கெட்டழிபவன்) ஆகிருன். எவன் பிரம்மம் உண்டு என அறிகி ருனே அப்போதே அவனை ஸத்து (சாது) என்று கருதுகிருர்கள்'— இவ்வாறு தைத்திரீய உபநிஷத் கூறுவதால் அக்காலத்திலேயே நாஸ்திகம் வேரூன்றியிருந்தது என்பதை உணரவும்.

கடவுளுக்குப் பலி காணிக்கைகள் கொடுத்துச் சுலபமாக அவரை நம் வசமாக்கிவிடலாம் என நினைப்போரும், கடவுள் பெயரைத் தங்கள் சுயநலத்திற்காகப் பாமர மக்களிடையே பிரயோகிக்கும் வேஷதாரிகளுங் கூட நாஸ்திகர்களெனப் பிளேட்டோ கருதுகிருர் போலும்!)

### கடவுளும் மனிதனும்

தெய்வங்கள் யார்? அவர்களின் சுபாவம் என்ன? சேனை களுக்குத் தளபதிகளைப் போலவும், உடலோடு போர் தொடுக்கும் வியாதிகளுக்கு வைத்தியர்களைப் போலவும், பயிர் வளர்ச்சியில் பருவகால விளைவுகளை ஆவலோடு கண்காணித்து வரும் குடியான வர்களைப் போலவும், ஆட்டு மந்தைகளுக்கு இடையர்களைப் போலவும், தெய்வங்களை ஒருவாறு ஒப்பிடலாம். உலகில் நன்மையைவிடத் தீமையே அதிகம் நிறைந்திருப்பதால், இரண் டுக்குமிடையே ஓயாத யுத்தம் நடந்து வரும்போது அதிசயமான தொரு கண்காணிப்புத் தேவைப்படுகிறது. அந்தத் துவந்த

யுத்தத்தில் தெய்வங்களும் அவதார புருஷர்களும் நமது நேசக் கட்சியினர்; நாமோ அவர்களின் சொத்து. அநீதியும் மமதையும், மதியீனமான தவறும் நம்முடைய அழிவாகும். நீதியும், தன்னடக்கமும், ஞானமுமே நமக்கு நிவாரணமாகும். இந்த நற்பண்புகளெல்லாம் தெய்வங்களின் ஜீவனிலேதான் குடிகொண்டுள்ளன, அவற்றின் சின்னங்கள் அபூர்வமாக மனித ஜாதியிடமும் தென்படலாம் என்றாலுங்கூட.

புராதன நம்பிக்கையின்படி கடவுளானவர் சகலவற்றின் துவக்கத்தையும் மத்திமத்தையும் முடிவையும் தம் கரங்களிலே வைத்துள்ளார். முடிவின் பூர்த்தியை நோக்கியே அவர் தம் இயற்கையின் பிரகாரம் ஒரு நேர் கோட்டில் சஞ்சரித்த வண்ணமிருக்கிறார். நேர்மை எப்போதும் அவரைப் பின்பற்றுகிறது. தெய்வ சங்கற்பத்தையும் இயற்கை நியதியையும் விட்டு விலகுபவனைக் கடவுள் கண்டிக்கிறார். செல்வத்தாலோ, அழகாலோ, இளமையாலோ, அசட்டுத் தனத்தாலோ தான் தான் என்று தருக்கித் திரிபவன் கடவுளால் கைவிடப்பட்டு இறுதியில் மூர்க்கமானதொரு குழப்பத்தில் அழிந்து போகிறான். அவன் மாபெரும் மனிதன் என்று பலர் நினைத்தாலும் கடைசியில் அவனும் அவனுடைய குடும்பத்தினரும் நகரத்தினரும் சர்வநாசமுறுகின்றனர்.

அவ்வாறானால் கடவுளுக்கு உகந்த மனித வாழ்க்கை எது? அவருடைய அடியார்களாக வழியென்ன? ஒன்றைப்போல ஒன்றுதான் இணைகிறது. அளவும் அளவுந்தான் பொருந்தும். நமக்குச் சகல விஷயங்களுக்கும் அளவுகோல் கடவுளே தவிர, மனிதன் அல்ல. ['சகல விஷயங்களுக்கும் மனிதனே அளவுகோல்' என்ற தத்துவ ஞானி புரோட்டகோரஸின் குதர்க்க வாதத்துக்கு மறுப்புரைபோல் பிளேட்டோ இக்கருத்தைக் கூறுகிறார்.] கடவுளின் அன்புக்குப் பாத்திரமானவன் இயன்றவரை இறைவனைப் போலவே இருக்கவேண்டும். நேர்மையான மனம் படைத்தவன்தான் கடவுளின் நண்பன்; ஏனெனில் அவன் அவரைப் போலவே இருக்கிறான். இதுதான் பிரபஞ்ச உண்மை. வழிபாட்டின் மூலம் நாம் அவரோடு இரண்டறக் கலந்திடல் வேண்டும். (Laws, 905, & 716)

### ஸ்துதி

தெய்வங்களே! என் அந்தராத்மாவுக்கு அழகு கொடுங்கள்! மனிதன் உள்ளும் புறமும் ஒரே மாதிரியாக இருக்கட்டும்! (Phaedrus 279)



## 2. கலைகள்

தூய்மையான காற்றோட்டமுள்ள இடத்தில் வசிப்பவன் தன்னையறியாமல் தேகாரோக்கியம் பெறுவதுபோல அழகான கலைகளின் மத்தியில் வளர்கிறவன் உயர்ந்த மனோபாவனைகளைப் பெறுகிறான். (Republic).

நீ ஹோமரின் கவிதையைப் பற்றி உன்னதமாகப் பேசும் திறமையானது, கலையினால் வருவதல்ல; ஓர் இயற்கை உத்வேகத்தினால் வருகிறது. காந்தத்திற்குள் அடங்கியிருப்பதுபோல் உன்னுள் அடங்கியிருக்கும் ஒரு தெய்வீக சக்திதான் அவ்வாறு உன்னைத் தூண்டுகிறது. (Ion).

காவிய கர்த்தர்களாயினும் கவிதை எழுதுவோராயினும், நல்ல கவிஞர் அனைவரும் அழகிய கவிதைகள் புனைவது கலைத் திறமையினாலல்ல; ஒரு தெய்வீக சக்தியின் தூண்டுதலே ஆகும். (Ion).

கவிஞர் மாபெரும் அறிவுப் பொருள்களையெல்லாம் சொல்லுகிறார்கள். அவற்றின் பொருள் நுட்பங்கள் அவர்களுக்கே தெரிவதில்லை!

### சங்கீதம்

சங்கீதத்தின் சிறப்பை, அது அளிக்கும் ஆனந்தத்தைக் கொண்டு அளவிட வேண்டும் என்பது ஜனரஞ்சகமான அபிப்பிராயம். அதை நானும் ஓரளவு ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஆனந்தம் என்பது எவனுடைய ஆனந்தமாகவும் இருக்கக் கூடாது. சிறந்தவர்களையும் சிறப்பாகப் பயின்று பண்பட்ட சுபாவங்களையும் மகிழ்விக்கக் கூடியதுதான் அதி அழகான சங்கீதமாகும். பண்பிலும் படிப்பிலும் சிறந்து விளங்கும் ஒருவனுக்கு அஃது ஆனந்தம் தருவதாயிருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். (Laws, 659).

சங்கீதப் பயிற்சியுள்ளவனுக்கு எதெதில் சீரில்லை, சிறப்பு இருக்கிறது என்று விரைவில் கண்டுகொள்ளும் திறமையும் மனப் பழக்கமும் ஏற்படுகிறது. (குடியரசு)

போலிக் கவிதைகளை நிராகரிக்க வேண்டும்.

கவிதைக் கற்பனைகள் அனைத்தும் கேட்பவரின் சிந்தனைசக்தியைக் குன்றச் செய்பவை.

[பல வகையான கட்டில்கள் இருந்தாலும் அடிப்படையில் ஒரு மூல வடிவத்தைக் கொண்டுதான் அவை தச்சனால் செய்யப்படுகின்றன. ஒரு மூல வடிவத்தின் பலவித நிழல்கள்தாம் பல வகைக் கட்டில்கள். ஒரு கட்டிலைப் பார்த்து வரையப்படும் ஓவியமானது நிழலின் நிழலாகும். அந்தப் பொய்க்கட்டில் படுத்துறங்கப் பயன்படுவதுமில்லை. அதை வரையும் சித்திரக்காரனுக்கு அதைப் போல ஒரு நிஜக் கட்டிலைச் செய்யவும் தெரிவதில்லை. கண்ணாடியில் பிரதிபலித்துக் காட்டப்படும் சூரியன் நிஜமல்ல; வெறும் தோற்றமே ஆகும். அதுபோன்றவனே சித்திரக்காரன். அவன் வெறும் தோற்றங்களைத்தான் சிருஷ்டிக்கிறான். உண்மைபோன்ற ஒன்றைப் போலியாகச் சிருஷ்டிப்பவர்கள்தாம் ஓவியர், கவிஞர், நாடகாசிரியர், முதலான கலைஞர்களெல்லாம். அவர்கள் குறைந்தபட்ச உண்மைகளையே சொல்லுகிறார்கள். உண்மைகளை ஆராயக்கூடிய ஞானசக்தி அவர்களுக்கு இல்லை.]

[கவிஞர்கள் புனையும் கவிதைகளிலே, சொல்லழகு இசையழகு, சந்த ஓசை அழகு, எல்லாவற்றிற்கும் மேலாக மெய்யான கருத்தழகு அமைந்திருக்க வேண்டுமென பிளேட்டோ கருதுகிறார்.]

## கதை இலக்கியம்

கதைகளில் ஓரளவாவது உண்மை இருக்கும் என்றாலும் பெரும் பகுதி கற்பனையாகவே இருக்கும். அவை யாவும் பொய் இலக்கியத்தைச் சேர்ந்தவைதாம்.

கதைகளிலே ஓயாமல் துயரப்படுகிற அல்லது ஓயாமல் அழுதுகொண்டிருக்கிற கதாபாத்திரங்களைக் கொண்டுவரக் கூடாது. அழுகிற வேலையையும் துயரப்படுகிற வேலையையும் கோழைகளுக்கும் அதுபோன்ற பெண்மணிகளுக்கும் விட்டு விடுவோம்.

இளைஞர்களுக்கு ஓயாமல் சிரிப்பை உண்டாக்கக்கூடிய கதைகளையும் கூறக்கூடாது. அதிகமாகச் சிரித்தால் அதற்கு நேர் மாறான விளைவுகள் உண்டாகும்.

[கோபதாபங்கள், சுக துக்கங்கள் முதலான உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நிதானத்துடன் வாழ்வதுதான் மனித வாழ்க்கையின் வெற்றிக்குரிய வழி. நாடகம் காவியம் முதலான கலைகள் மனிதனிடமுள்ள பலவிதமான உணர்ச்சிகளைச் சீராகவும் ஒருமுக

மாகவும் வளரும்படி செய்யவேண்டுமென்றும், அவை மனிதனின் அறிவை நேரான பாதையில் வழிநடத்திச் செல்ல உபயோகப்பட வேண்டுமெனவும் பிளேட்டோ கருதினர். ஆனல் அவர் காலத்திலிருந்த சோக நாடகங்களோ பார்ப்பவரின் உணர்ச்சிகளைக் கட்டுப்பாடின்றிக் கிளறிவிடக் கூடியனவாயிருந்தன. வெற்றிகரமான நாடகங்கள் என்ருல் மனித நெஞ்சில் ஆழப் புதைந்திருக்கும் உணர்ச்சிகளையெல்லாம் வெளிக் கொணர்ந்து மிதமிஞ்சித் தூண்டிவிட வேண்டியிருந்தது. இத்தகைய உணர்ச்சிகரமான நாடகங்களைக் கண்டு களித்து வருவதினுல் நமது சிந்தனை சக்தி குன்றி உணர்ச்சித் தன்மை அதிகரித்து, நிதானமின்மையும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத சுபாவமும் ஏற்படும் என்று பிளேட்டோ கருதுகிருர். ஆனல் அவருக்குப் பின் தோன்றிய அவரது மாணவரான ஞானி அரிஸ்டாடிலோ, 'உணர்ச்சிகரமான நாடகங்களைப் பார்ப்பதின்மூலம் நம்முடைய நெஞ்சின் உணர்ச்சி வேட்கைகள் விரைவில் தாகம் தணிந்துபோகின்றன; அவை முக்கியத்துவம் பெருமல் வலி குன்றி சர்வ சாதாரணமாகி விடுகின்றன. அதனுல் நிஜவாழ்க்கையில், அதிகமாக உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதும் சிரமமும் ஏற்படுவதில்லை' என்று கருதுகிருர்.]

கலைஞன் நம்முடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு விட்டு, நம்முடைய அறிவின் சக்தியைப் பலஹீனப்படுத்தி விடுகிருன்.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நிதானமாயிருப்பது ஆண் தன்மை; உணர்ச்சிகளுக்கு இடங்கொடுப்பது பெண் தன்மை என்று கருதுகிருேம்.

பிறரின் துன்பங்களைக் கண்டு அழ ஆரம்பித்தோமானல் கடைசியில் நம்முடைய துயரங்களைச் சமாளிக்க முடியாமல் அழக் கூடியவர்களாய் ஆகிவிடுகிருேம்...பிறரின் துயரங்களைக் கண்டு துக்கப்படும் உணர்ச்சியை வளர்த்துவருவதினுல் நமக்குத் துயரம் வருகிறபோது அந்தத் துயர உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவது நமக்கு மிகவும் சிரமமாகி விடுகிறது.

பிறரின் நையாண்டிகளையும் கோமாளிக் கூத்துகளையும் கண்டு முதலில் ஆனந்தமடைகிற நாம் கடைசியில் நாமே நையாண்டிகளாகவும் கோமாளிகளாகவும் ஆகிவிடுகிருேம்.

['இலட்சிய ராஜ்யத்தின்' கொள்கைகளுக்கு ஒத்துவரக் கூடிய கலைகளைத் தணிக்கைசெய்து அனுமதித்தும், ஒத்துவராத கலைகளை நாட்டில் செல்வாக்குப் பெருமல் பகிஷ்கரித்தும் வர வேண்டும் என்பதுதான் பிளேட்டோவின் முக்கிய நோக்கம்.]

### கலைகளுக்குத் தணிக்கை

[காவியம், நாடகம் முதலான கலைகளெல்லாம் அரசாங்கத்தின் கடுமையான தணிக்கைக்கு (சென்சாருக்கு ஆளான)

பிறகே பொதுமக்கள் முன் அரங்கேற வேண்டுமெனப் பிளேட்டோ வற்புறுத்துகிருர். கலைகளுக்குக் கட்டுப்பாடு விதித்து அபிப்பிராய சுதந்திரத்துக்கு விலங்கிடுவதா என நவீன சிந்தனையாளர்கள் பிளேட்டோவின்மீது குறை கூறலாம். ஆனல் இங்கு நாம் முக்கியமாக ஒன்றைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஹோமர் முதலான கிரேக்க கவிஞர்களும் அவரைப் பின்பற்றிய நாடகாசிரியர்களும், கடவுளரின் அவதாரக் கதைகளையும் புராணக் கதைகளையும் தங்கள் இலக்கியப் பொருள்களாக்கி, மனிதர் செய்யத்தகாத செயல்கள் கீழ்த்தர உணர்ச்சிகள் ஆகியவைகளையெல்லாம் கடவுளரும் தெய்வீகப் புருஷர்களும் கையாண்டதாக வர்ணித்துப் பாடியும் நடித்தும் வந்தார்கள். இத்தகைய அவதார மகிமைக் கதைகள் இளைஞர் உள்ளத்தில் தீய பண்புகளையும் அநீதமான போக்கையும் வளர்க்கும் என பிளேட்டோ கருதினர். கலைகளுக்குத் தணிக்கை விதிக்கவேண்டுமென்பது இதிகாச புராணங்களுக்குத் தடை விதிக்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தினல்தான்.]



## 3. வைத்தியர்களும் நீதிபதிகளும்

[பின்வரும் விஷயங்களைப் பிளேட்டோ நையாண்டியாகச் சொல்லுகிறார் என்றாலும், அவை நம்முடைய நவீன நாகரிகத்தின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை.]

ஒருவன் தன் வாழ்க்கை முழுவதையும் நீதி மன்றங்களிலேயே வாதியாகவோ பிரதிவாதியாகவோ கடத்துகிறான். அப்படிச் செய்வதில் ஒரு தற்பெருமையும், நீதியைத் தன் வெற்றிக்கு வளைக்கக்கூடிய சட்ட அனுபவங்கள் பெற்றிருக்கிறோம் என்ற திருப்தியும், தான் ஒரு புத்திசாலியான போக்கிரி என்ற மமதையும் கொள்கிறான். ஆனால் அவற்றைவிட மனிதன் அனுபவம் பெற வேண்டிய எத்தனையோ உன்னதமான நல்ல விஷயங்கள் உண்டு என்று உணராமல் உறங்கி வழியும் ஒரு நீதிபதியின் உதவியை எதிர்பார்ப்பது எவ்வளவு ஹீன சுபாவம் என்பதை அவன் உணர்வதில்லை.

ஒரு நாட்டிலுள்ள பாமர ஜனங்களுக்குத்தான் நீதிமன்றங்களின் சட்டங்களும் வைத்தியர்களின் மருத்துவமும் தேவை என்கிருர்கள். ஆனல் கல்வி கற்ற அறிவாளிகள்கூட அந்தச் சட்டத்தின் துணையையும் வைத்தியத்தின் துணையையும் எதிர் பார்க்கிருர்களென்ருல் அந்நாட்டின் கல்வித் திட்டத்திலேயே அடிப்படைக்கோளாறு இருக்கிறதென்பதைத் தவிர வேறென்ன?

### வைத்திய உதவி

உடம்பில் பட்ட காயத்தை ஆற்றுவதற்காகவோ, தொத்து நோய் பரவியிருக்கும் சமயத்திலோ, மனிதர்களுக்கு மருந்தின் உதவி தேவைப்படலாம். ஆனல் வெறும் சோம்பேறித்தனமான வாழ்விஞலோ இந்திரிய இச்சைகளில் மூழ்கிக்கிடக்கும் சுக போகப் பழக்கங்களினுலோ மனிதர்களின் உடல்கள் சகதித்குட்டையாக மாறும்போது அவர்கள் வைத்தியதேவர் ஆஸ்க்ளேப்பியஸின் திருக்குமாரர்களான வைத்திய சந்ததிகளைக் கூப்பிட்டு வியாதிகளுக்குப் புதுப்புதுப் பெயர்களைக் கண்டுபிடிக்கும்படி வற்புறுத்துகிருர்கள். இஃது அவமானகரமானதில்லையா?

வியாதிகளுக்குப் புதுப்புது விசித்திரமான பெயர்களைச் சூட்டி வியாதிகளைப் போற்றி வளர்க்கும் அளவுக்குத்தான் நம் வைத்திய நாகரிகம் வளர்ந்திருக்கிறது!

வைத்தியதேவரின் காலங்களில் இவ்வளவு வியாதிகள் இருந்திருக்கா. அத்தேவரின் வைத்தியக்குழு தற்காலப் புது வைத்திய முறைகளை அனுசரிக்கவில்லை!

> [தீரா ரோகமுள்ள ஒருவனுக்குச் சாவைச் சிறிது காலம் தள்ளிப்போட மருந்தொன்று கண்டுபிடிப்பதினுல் என்ன லாபம்? ஒழுங்கானதொரு ராஜ்யத்தில் ஒவ்வொரு பிரஜையும் ஏதாவதொரு தொழில் செய்ய வேண்டும். அவனுக்கு ஓயாமல் நோய்ப்பட்டுக் கிடக்க நேரமில்லை.]

தச்சனெருவனுக்கு நோய் வந்தால் வைத்தியரிடம் உடனே குணப்படுத்தக்கூடிய முரட்டு சிகிச்சையொன்றைக் கேட்கிருன். ஒரு வாந்தி மருந்து, அல்லது ஒரு பேதி மருந்து, அல்லது ஒரு சூட்டுக்கோல், சிகிச்சைச் சக்தி—இவைதாம் அவன் கோரும் நிவாரணங்கள். வைத்தியர் எவராவது அவனிடம், 'பத்திய உணவுகொள்; இத்தனை நாள் உபவாசம் இரு. நீண்ட கால சிகிச்சை செய்துகொள்' என்று ஆரம்பித்தால் அவ்வளவு காலத்துக்கு நோயுடன் இருக்கத் தனக்கு நேரமில்லையெனச் சொல்லிவிட்டுத் தன் தொழிலைப் பார்க்கப் போய்விடுகிருன்... நாளடைவில் அவன் தானகவே குணமாகி வாழ்கிருன்; அல்லது உடல் சீர்கெட்டு, விரைவில் செத்து விரைவில் தன் உபாதைகளிலிருந்து விடுபடுகிருன்!

### வைத்தியத்தின் தேவை

மனிதன் தன் உடம்பில் நோய் இருக்குமோ எனச் சதா கற்பனை செய்கிறான். தேகாரோக்கியத்திற்குத் தேவையான அளவு அக்கரை செலுத்தவேண்டுமே தவிர, அதற்கு அதிகமாகத் தேகத்தின் மீது கவனம் செலுத்துவது ஈனமாகும். இத்தகைய உடம்பைப் பற்றிய ஓயாத அக்கரையானது பண்புப் பயிற்சிக்குப் பெரும் தடையாகும். தொழில், ஆத்ம சிந்தனை, இலட்சிய எண்ணங்கள் முதலான எந்தவிதமான பயிற்சிக்கும் அது முரணாக விளங்கும்... [ஆகவே நமது வைத்திய தேவர் முன் காலத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழக் கூடியவர்களுக்கே வைத்தியம் செய்தார்.] ஆனால் தீராரோகத்தால் உடம்பு பீடிக்கப்பட்டு வாழ முடியாதவர்களுக்கு வைத்தியம் செய்ய முயலவில்லை. ஒன்றுக்கும் உபயோகப்படாதவர்களின் வாழ்க்கையை இன்னும் கொஞ்ச காலத்திற்கு நீடிக்கச் செய்யவோ, பலஹீனமான தந்தையார்கள் பலஹீனமான குழந்தைகளைப் பெறவிடவோ, அவர் விரும்பவில்லை...ஒழுங்காக வாழத் தெரியாதவனுக்கு நீடித்த காலம் சிகிச்சை செய்வதினால் நோயாளிக்கோ ராஜ்யத்திற்கோ எந்தவிதமான பயனும் இல்லை. பொதுவாகச் சொன்னால் ஆதி வைத்தியதேவர் ராஜதந்திரியாக இருந்தார். [பலஹீனமானவர்களுக்குக் குழந்தைகள் பிறக்காமல் கர்ப்பத்தடை செய்யவேண்டும், தீரா ரோகிகள் விரைவில் சாவது நல்லது. 'இயற்கை வைத்தியமே (Nature Cure) சிறந்தது, என்பனபோன்ற நவீனக் கருத்துகளுக்கு இங்கு பிளேட்டோவின் சிந்தனைகளில் மூலவேர் இருப்பதைக் காணவும்.] (வந்தபின் சிகிச்சை என்பதற்குப் பதில் வரும் முன் காப்பு என்பது போல்) வியாதிகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பது தான் நம்முடைய இலட்சியராஜ்யத்தின் நவீன மருத்துவத் திட்டம் எனச் சொல்லலாம்.

### சிறந்த வைத்தியன் யார்?

மிக்க் திறமை வாய்ந்த வைத்தியர்கள் என்போர் இளமைப் பருவத்திலிருந்தே தங்கள் கலையறிவுடன் வியாதிகளைப்பற்றிய அனுபவமும் நிறையப் பெற்றவர்களாய் இருப்பார்கள். அதற்காக அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இல்லாமல், அவர்களே சகலவிதமான வியாதிகளாலும் அவஸ்தைப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என ஏற்படும். ஆனால் அது சரியல்ல. பிறர் உடம்பைக் குணப்படுத்த அவர்கள் சொந்த உடம்புகளையே வைத்தியக் கருவிகளாக உபயோகப்படுத்துவதில்லை. ஆனால் பிறர் உடம்பைத் தங்கள் சொந்த மனத்திறமையைக் கொண்டு குணப்படுத்துகிறார்கள். நோயாக மாறிய மனமோ எதையுமே குணப்படுத்த முடியாது.

ஆனல் நீதிபதியின் நிலேயோ வேறு விதமானது. அவர் பிறர் மனதைத் தம் சொந்த மனதால் ஆளுகிறர். ஆகவே, அவர் தீய மனங்களிடையே பயிற்சி பெற்றவராகவோ இளமைப் பருவம் முதல் தீமையான செயல்களில் சம்பந்தப்பட்டுச் சொந்த அனுபவம் பெற்றவராகவோ இருக்கக்கூடாது. பிறரின் குற்றங்களே விரைவில் ஆராய்ந்து சரியான தீர்ப்புக்கொடுக்கும் திறமை பெற வேண்டுமென்பதற்காக அவரே இளவயதில் சகலவிதமான குற்றங்களேயும் செய்தவராயிருக்க வேண்டியதில்லே. நல்ல தீர்ப்பு வழங்கவேண்டிய கண்ணியமான மனசானது, இளமையில் எந்த விதமான தீய காரியங்களிலும் எந்தவிதமான அனுபவமும் பக்குவமும் தொடர்பும் கொண்டதாயிருக்கக் கூடாது. நல்லவர்கள் இளம் வயதில் வெகு எளிமையாகத் தோன்றுவதற்கும், அயோக்கியர்களால் வெகு சுலபமாக ஏமாற்றப்படுவதற்கும் இதுதான் காரணமாகும். ஏனெனில், அவர்களது உள்ளங்களிலே தீமையென்றல் என்ன என்பதற்கு உதாரணங்கள் கிடைப்பதில்லே. ஆகவே, நீதிபதியானவர் வாலிபராயும் இருக்கக்கூடாது. வயது ஏற ஏறத்தான் ஒருவர் தீமையின் தன்மைகளேப் புரிந்துகொள்ள முடியும்! தீமையென்றல் என்ன என்பதை அவர் கற்கவேண்டும்—தம் சொந்தத் தீமைகளிலிருந்தல்ல; பிறரின் தீமைகளே வெகுகாலமாக கவனித்து வந்து கற்றுத் தேர்ந்தவராயிருக்க வேண்டும். பிறர் குற்றங்களேக் கண்டுபிடிப்பதற்கு அவருக்குக் குற்றங்களேப் பற்றிய அறிவுதான் வழிகாட்ட வேண்டுமே தவிர, சொந்த அனுபவங்களல்ல. மேலும் நீதிபதியானவர் மிகவும் நல்ல மனிதராயிருக்க வேண்டும். கெட்டவன் தன்னேக்கொண்டே மற்றவர்களே அளவெடுப்பான். குற்றங்கள் புரிந்து தேர்ச்சி பெற்றவன் எவரையுமே குற்ற மனப்பான்மையுடன் பார்ப்பான். அதனல் ஒரு யோக்கியனேக்கூட கண்டுகொள்ள முடியாது. ஏனெனில் யோக்கியதாம்சத்திற்குரிய ஓர் உதாரணங்கூட அவனிடம் இருப்பதில்லே. தீவினே சுபாவமானது நற்பண்பை உணர முடியாது. ஆனல் நற்பண்போ, காலக்கிரமப் படிப்பினேயால், நல்வினே தீவினேயான இரண்டைப்பற்றிய அறிவையுமே பெறமுடியும். நற்பண்புள்ளவனுக்குத்தான் ஞானம் உண்டே தவிர, தீயவனுக்குக் கிடையாது—என்பது என் அபிப்பிராயம்.

**பிளேட்டோவின் இலட்சிய ராஜ்யத்தில், உடம்பில் தீரா ரோகமுடையவர்களே மரணமடையும்படி விட்டு விடுவதுதான் வைத்தியர்களின் வேலே; உள்ளத்தில் தீரா ரோகமுடைய குற்றவாளிகளே மரணதண்டனேக்குட் படுத்துவதுதான் நீதிபதிகளின் வேலே; அதுதான் ராஜ்யத்திற்கும் நல்லது; அந்த ஹீன நபர்களுக்கும் நல்லது!**

### சட்டங்களின் நோக்கம்

அற்ப விஷயங்களுக்கெல்லாம் சட்டத்திற்கு மேல் சட்டம் செய்து கொண்டு போவதில் புத்திசாலிகள் அர்த்தமில்லாமல் தங்கள் காலத்தை வீணாக்கமாட்டார்கள். அத்தகைய சட்ட வளர்ச்சியினால் மனித சமுதாயத்திற்கும் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. குழந்தைகளை அவைகளின் இஷ்டப்படியெல்லாம் நடக்க விடுவதில்லை; கண்காணித்து வருகிறோம். அவைகள் பெரியவர்களாக வளர்ந்து நல்லது கெட்டதைத் தாங்களாகவே ஆராயும் சக்தி பெற்று, உயர்ந்த மனோபாவனைகள் அவர்களிடம் வளர்ந்து ஸ்திரப்படும் வரை செய்து வருகிறோம். பிறகு அவர்கள் தம்மிச்சையாக அவரவர்களின் வழியில் நடந்து போகும்படி விட்டு விடுகிறோம். சட்டங்கள் ஏற்படுத்தும் நோக்கமும் இவ்வாறு தான் இருக்கவேண்டும்.



# பிளேட்டோவின் மணி மொழிகள்

### கடவுள்

நேர்மையான மனம் படைத்தவனுக்குச் சட்டந்தான் கடவுள்; முட்டாளுக்குக் கேளிக்கைதான் கடவுள். (Letters).

சத்தியந்தான் கடவுள். ஒளிதான் அவரது நிழல். (Republic)

கடவுள் ஒரு க்ஷேத்திரக் கணிதர்.

அவர் உலகத்தைச் சிருஷ்டித்தது போலவே, அவருடைய உலக பரிபாலனமும் க்ஷேத்திர கணித நுட்பமுள்ளது.

கடவுள் மாயாஜால வித்தைக்காரர் அல்லர். நினைத்தபடியெல்லாம் விதவிதமான உருவங்களில் அவதாரங்கள் எடுக்கமாட்டார். அவர் என்றென்றும் ஒரே மாதிரி இருப்பவர்.

கடவுளானவர் சொல்லிலும் செயலிலும் பரிபூரண எளிமையுள்ளவர்; மெய்மையானவர். அவர், உருவம் மாறுவதில்லை; அவதாரங்கள் எடுப்பதில்லை; அசரீரி வாக்காலோ, தெய்வீக சமிக்ஞைகளாலோ, கனவில் வந்தோ நனவில் நடந்தோ யாரையும் ஏமாற்றுவதில்லை. அவர் மாயாவி அல்லர்; மாய ரூபங்கள் எடுத்து மனித ஜாதியை ஏமாற்றுவதில்லை. (Republic).

### ஆஷாடபூதிகள்

ஆஷாடபூதிகள் கடவுளின் அருள் பிரசாதம் தங்கள் கையிலிருப்பதாக வேஷம்போட்டு, பணக்காரர்களிடம் சென்று மந்திரங்களாலும் பலி காணிக்கைகளாலும் பாபச் செயல்களுக்குப் பரிகாரம் தேடித் தருவதாகவும் பகைவரைச் சூன்ய வித்தையால் கெடுப்பதாகவும் சொல்லுகிறார்கள். மந்திரங்களை உச்சரிப்பதினாலும் வேறுவிதமான ஜால சூன்ய வித்தைகளாலும் கடவுளைத் தங்கள் மனம்போல மசியச் செய்துவிடலாம் என்று சொல்லுகிறார்கள்.

3365

### உலகம்

காணப்படும் உலகம் வேறு; அறியப்படும் உலகம் வேறு.

## மனித வாழ்க்கை

மனித வாழ்க்கை ஒரு யாத்திரை

### படிப்பு

படிப்புகள் அனைத்திலும் அதி உன்னதமான படிப்பு, மனிதன் எப்படியிருக்க வேண்டும், எதைத் தேடவேண்டும் என்ற படிப்புத் தான்.

### கல்வி

கற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமலிருப்பதே நல்லது! ஏனெனில், அறியாமை தான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர்.

### கல்வி கற்பிப்போர்

ஒளி விளக்குகள் வைத்திருப் போர், மற்றவர்களுக்கு அவை களை வழங்கிச் செல்வார்களாக!

### ஆனந்தம்

எது உண்மையான ஆனந்தம் அல்லது மேலான சுகம் என்று நிர்ணயிப்பதற்கு, அறிவு, அனு பவம், இயற்கை உணர்வு ஆகிய இம் மூன்றும் தேவை.

### ஏகாந்தம்

ஏகாந்தத்தில் பேரானந்தம் கொள்பவன் எவனுயிருந்தாலும், அவன் ஒரு மூர்க்க மிருகமாயி ருக்கிறுன்; அல்லது தெய்வமாயி ருக்கிறுன். (Protog,).

### அதர்மம்

கோபம், அச்சம், இன்ப துன் பம், பொருமை, பேராசை முதலி யவை ஆத்மாவை அடக்கியாளத் தொடங்கினுல் அதை அதர்மம் என்றழைக்கிறேன்.

### அநீதி

அநீதியால் அவஸ்தைப்படு வதைவிட அநீதி செய்வதுதான் இன்னும் அவமானகரமானது. (Gorglas.).

### நேர்மை

பணியாளர்களிடம் நேர்மை யாக நடந்துகொள்ள வேண்டும். நமக்குச் சமமானவர்களிடம் நாம் நேர்மையாக நடந்துகொள் வதை விட நமக்குக் கீழ்ப்பட்ட வர்களிடம் இன்னும் அதிக நேர் மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

அநீதியை வெறுத்து நீதிக்கு உள்ளூர மதிப்புக் கொடுக்கும் மனிதனை, அவன் வெகு சுலப மாக எந்த வகுப்பினருக்கு அநீதி இழைக்க முடியுமோ அந்த வகுப் பினரிடம் அவன் நடந்துகொள் ளும் முறைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

### குணப் பண்பு

பண்பு எனும் மங்கை எல்லா ருக்கும் பொதுவானவள். அவ ளைக் கௌரவப்படுத்தும் அள வையும் அகௌரவப்படுத்தும் அளவையும் பொறுத்துக் கூட்டவோ குறைவாகவோ அவளை மனிதன் அடைகிறுன்.

### அரசியல்

பிரஜைகளின் எண்ணங்கள் மாறுவதுபோல் அரசாங்கங் களும் மாறும். (Republic, 544.)

திருப்தியற்ற பேராசை சுபாவ மும் மூட ஜனங்களும் தேசத்தை வலுவற்றதாக்கி விடுவார்களா

கையால், அவர்களுக்குத் திருப்தியையும் புலனடக்கத்தையும் சுகாதாரத்தையும் படிப்பையும் வளர்க்கவேண்டும்.

வியாதி பிடித்த உடம்பின் சூழ்நிலையின் ஓர் அற்பக் காரணமே நோயை முற்றச் செய்கிறது. அதுபோல அதிருப்தி நிலவும் ராஜ்யத்தில் கலவரம் ஏற்படுவதற்கு ஒரு சிறு அற்பக் காரணங் கூடப் போதுமானதாயிருக்கும் (Republic)

## ஆள்வோர்

படிப்பற்றவர்களேயோ, உண்மையை அறிய முடியாதவர்களேயோ, வாழ்க்கை முழுவதும் படிப்பதிலே கழிக்க விரும்பும் (புஸ்தகப் புழுக்களேயோ) ஆளும் அதிகாரிகளாக ஆக்கக்கூடாது.

எந்த நாட்டில் ஆள்வோர் குறைவாக ஆளவேண்டும் என இச்சைப்படுகிருர்களோ, அங்கு திறமையும் அமைதியும் செழித்தோங்கும்; எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆளவேண்டுமென்ற இச்சை வெறி ஏற்படுகிறதோ, அங்கு ஒரே குழப்பந்தான் உண்டாகும்.

## நாட்டின் விஸ்தரிப்பு

ஒரு ராஜ்யத்தின் நிலை அளவை அதன் ஒற்றுமைக்குச் சீர்கேடு ஏற்படாதவரை, விஸ்தரித்துக் கொண்டு போகலாம். அந்த ஒற்றுமைக்குச் சீர்கேடு ஏற்படும் என்று தோன்றினல் அதற்கு மேல் ராஜ்யத்தை விஸ்தரிக்கக் கூடாது. அஃதாவது நமது ராஜ்யம் மிகச் சிறிதாகவும் இருத்தலாகாது; மிகப் பெரியதாயும் இருத்தலாகாது. அப்போதுதான் நாட்டில் ஒற்றுமையை நிலை நிறுத்தக் கவனம் செலுத்த முடியும்.

## யுத்தம்

உள்நாட்டு யுத்தமோ, வெளிநாட்டு யுத்தமோ, எதுவாயிருந்தாலும் அதிலிருந்து தப்பவேண்டும். ஒருவரோடொருவர் சமாதானமும் நல்லெண்ணமுமே சிறந்தன.

சமாதானத்திற்காகச் சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காகச் சமாதானத்தைப் பிறப்பிக்கும் சட்ட சபையினன் புத்திசாலியல்ல. (Laws).

எந்தக் காரணத்துக்காக எதிரிகளாக இருக்கிருர்களோ, அந்தக் காரணம் இருக்கும் வரைதான் அவர்களை எதிரிகளாகப்பாவிக்க வேண்டும். அதற்குமேல் சண்டையைத் தொடர்ந்து நடத்தக் கூடாது. (Republic)

## பொருளாதாரம்

வறுமையோ செல்வமோ இல்லாத சமுதாயத்திற்குக் கண்ணியமான பண்புகள் இருக்கும்; அதில் மமதைக்கோ அநீதிக்கோ பொருமை போட்டிகளுக்கோ இடமில்லை. (Laws.)

அளவுமீறிய செல்வமோ அளவுமீறிய வறுமையோ மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் செய்துவிடுகிறது. (Republic.)

பொது ஜனங்களிடையே அளவு மீறிய வறுமையோ அளவு மீறிய செல்வமோ வாழக் கூடாது; அவை இரண்டும் தீமைகளை உற்பத்தி செய்பவை.

அளவு மீறிய செல்வத்தினல் ஆடம்பரமும் சோம்பேறித் தன

மும் ஏற்படும். அளவு மீறிய வறுமையினல் புரட்சியும் கீழ்த் தரமும் துவேஷத் துரோக சிந்தனைகளும் ஏற்படும். (Republic)

நாம் இரண்டு எதிரிகளோடு போரிட வேண்டும்—செல்வம், வறுமை என்பனதாம் அவை இரண்டும். அவற்றுள் ஒன்று தன் ஊதாரித்தனத்தினல் மனிதனின் ஆத்மாவைக் கெடுக்கிறது. இன்னென்ரு துன்பத்தின் வழியாகமிகவும்வெட்கம்கெட்டதனத்தை நோக்கி அவனை விரட்டித் தள்ளுகிறது. (Laws).

ஒரு நாட்டில் பிச்சைக்காரர்கள் இருந்தால் அங்கே திருடர்களும் கோயிலில் கொள்ளையடிப்பவர்களும் இருப்பார்கள்.

ஒரு பொருளைப் புத்திசாலித்தனமாகக் காப்பாற்றக் கூடியவன் அந்தப் பொருளைப் புத்திசாலித் தனமாகத் திருடவும் முடியும்!

கவிஞர்கள் எவ்வாறு தங்கள் சொந்தக் கவிதைகள் மீது மோகம் உள்ளவர்களாயிருக்கிருர்களோ, பெற்றோர்கள் எவ்வாறு தங்கள் சொந்தக் குழந்தைகளிடம் பாசம் வைக்கிருர்களோ அவ்வாறே சுயமாகப் பணம் சம்பாதிப்பவர்கள் அந்தப் பணத்தின்மீது அதிக மோகபாசம் உள்ளவர்களாய் இருக்கிருர்கள்.

### ராஜீய வர்த்தக உறவு

வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்பவர்கள் உள்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

ஆகவே, உள்நாட்டுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதோடு நின்றுவிடாமல், வெளிநாடுகளுக்குத் தேவையான அளவு தரமும் பெருக்கமும் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்.

### பொதுவுடமை

எந்த ராஜ்யத்தில் மக்களிடையே 'எனது' 'உனது' என்ற உணர்ச்சி அற்றுப்போகிறதோ, உடலின் துன்பத்தை ஒவ்வொரு உறுப்பும் அனுபவிப்பதுபோல ராஜ்யத்தின் உறுப்பான ஒவ்வொரு மனிதனும் ராஜ்யத்தின் பொது சுக துக்கங்களை ஒரே மாதிரி உணர்கிருனே, அந்த ராஜ்யத்தில் எல்லாவித ஒற்றுமையுமுள்ள எல்லையற்ற ஆனந்தம் நிலவுமல்லவா?

பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் ராஜ்யத்தின் பொதுவுடைமைச் சொத்துகளாகிவிட்டால், குழந்தைகள் பிறப்பதில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஆனந்தமும், அவை மரிப்பதில் ஒரே மாதிரியான துக்கமும் உண்டாகிறது.

### அறிவு

அறிவும் சத்தியமும் நெருங்கிய உறவுடையன.

உண்மையான அறிவின் காதலனை இருந்தால் அவன் தன் அதி இளமைப் பருவத்திலிருந்தே சகலவற்றிலும் மெய்மையை விரும்புபவனுய் இருக்கவேண்டும்.

மனிதனிடம் அறிவு உறங்கினல் மிருக இச்சைகள் கண் விழித்தெழுந்து குதியாட்டம் போடுகின்றன.

எவனெருவனின் ஆசைகள் ஒவ்வொரு வடிவத்திலுமுள்ள

அறிவை நோக்கியே கவரப்படுகின்றனவோ, அவன் தன் மனதுக்கு ஏற்படக்கூடிய இன்பங்களிலே லயித்திருப்பானே தவிர, தேகத்து ஏற்படக்கூடிய இன்பங்களை உணரமாட்டான்.

இளமை எனும் பக்குவமான வயதில்தான் எந்தவிதக் குணப் பண்பும் உருப்பெறுகிறது; எந்த வித அபிப்பிராயமும் ஆழமாக வேரூன்றுகிறது.

அறிவதற்கு ஒன்றுமில்லை; நாம் அறியாததை அறிந்துகொள்ள அலைவதில் எந்தவித உபயோகமுமில்லை என்று அசமந்தப் பாவனைகளில் மூழ்கிக் கிடப்பது-இந்தக் கொள்கைக்கு எதிராக என் சக்தியை யெல்லாம் திரட்டிச் சொல்லாலும் செயலாலும் போரிடத் தயாரா யிருக்கிறேன்.

என் அறிவின் பிரதிபலிப்பில் எது எனக்குச் சிறந்ததெனத் தோன்றினாலும், அந்த அறிவின் படியே எப்போதும் வழி நடக்கும் சுபாவமுள்ளவர்களில் நானும் ஒருவன்.

நான் சொல்வதில் ஏதாவது உண்மைக்குப் புறம்பாயிருந்தால் என் தவற்றைப் பிறர் திருத்துவதை விரும்புகிறேன்; அதே போல், பிறர் சொல்வது உண்மைக்கு மாறாயிருந்தால் பிறர் தவற்றை நான் திருத்த விரும்புகிறேன். ஏனெனில் இதுதான் இரு சாராருக்கும் பெருத்த லாபம். பிறர் தீமைகளை நான் குணப்படுத்துவதைவிட எனது பெருந் தீமையைப் பிறர் குணப்படுத்துவதினால் லாபம் அதிகம் உண்டு.

### பகுத்தறிவு

ஒவ்வொரு மனிதனின் அறிவிலும் நான்கு நிலைகள் உண்டு; முதலாவது நிலை, யூகம்; இரண்டாவது நிலை, நம்பிக்கை; மூன்றாவது நிலை, சிந்தனைத் தெளிவு; நான்காவது நிலை, மெய்யான பகுத்தறிவு. ஒரு பொருளின் மெய்த் தன்மையை அறிய வேண்டுமானால் இத்தனை நிலைகளையும் நம் அறிவு தாண்டிச் செல்ல வேண்டும்.

சதுரங்கச் சூதாட்டத்தில், உருட்டிய பாய்ச்சிக் காய்களைப் பொறுத்து எவ்வாறு நமது வெற்றிக் காய்களை நகர்த்தி விளையாடுகிறோமோ, அதுபோல நம் பகுத்தறிவைக் கொண்டு நமது விவகாரங்களைச் சரியான வழியில் நடத்த வேண்டும். (எண்ணித் துணிக கருமம்)

### அறியாமை

அறிவின் எதிரில் அறியாமை தலை வணங்குகிறது.

அறியாமைகளிலெல்லாம் பெரிய அறியாமை ஒன்றுண்டு. தெரியாதவன் தனக்கு அது தெரிந்திருப்பதாக நினைத்துக் கொள்கிறான். இதுதான் அறிவின் தவறுகள் அனைத்திற்கும் மூலகாரணம் எனத் தோன்றுகிறது.

முட்டாளின் ஸ்துதி ஆபத்து நிறைந்தது; அவன் விரும்புவதற்கு நேர்மாறாக முடியக் கூடியது.

## ஆண் பெண் இன்பம்

### காதல்

காதல்—ஒரு தீவிரமான மன நோய்!

உன்னைக் காதலிக்க வேண்டுமென்றால் நீ காதலி!

காதலானது மனிதர்களைத் தங்கள் காதலிகளுக்காகச் சாகவும் துணியச் செய்கிறது. காதல் ஒன்றுதான் அவ்வாறு ஆக்குகிறது. ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும். (Symposium)

அழகில் சிறந்ததைக் காதலிப்பது இயற்கை.

ஆத்மாவிலுள்ள குறைபாடுகளைத்தான் காதல் விரும்பாதே தவிர, உடல் சம்பந்தமான குறைபாடுகளை அது பொருட்படுத்துவதில்லை.

காதலை ஒரு கொடுங்கோலன் என்று கூறலாம். (Republic).

## ஆண் பெண் காதல்

## இருவிதம்

மனிதன் பல வழிகளில் இழுக்கப்படுகிறான்; இரண்டு நோக்கங்களிடையே இழுக்கப்படுகிறான் என்பதில் சந்தேகமே இல்லை. இளமையின் அழகை அனுபவிக்கும்படி ஒன்று தூண்டுகிறது; இன்னொன்றோ அவனைத் தடுக்கிறது. ஏனெனில் முன்னவன், உடலைக் காதலிப்பவன்; பழுத்த கனிபோல் அழகைத் தேடிப் பசித்தலைபவன்; காதலியின் பண்பைப் பற்றி எந்த அக்கரையுமில்லாமல் தன் பசியை வேட்கையுடன் திருப்தி செய்துகொள்வான். மற்றவனோ உண்மையில் இன்னொரு ஆத்மாவை விரும்பும் ஓர் ஆத்மா ஆவான்; உடல் இச்சையை இரண்டாவதாகத்தான் கைக்கொள்கிறான். சரீரக் காதலின் திருப்தியை மூர்க்கத்தனமானதெனக் கருதுகிறான். சுபாவத்தையும், திடநெஞ்சையும், கம்பீரத்தையும், அறிவையுமே அவன் மதித்துப் போற்றுகிறான்; அவன் வாஞ்சைக்குப் பாத்திரமான தூய பொருளான ஒருத்தியுடன் தூய்மையான முறையில் வாழவே ஆசைப்படுகிறான். (Laws, 837)

[ஒருத்தியும் ஒருவனும் உடல் உறவில் விருப்பமில்லாமல் அறிவுத் தோழமைக்காகவும் அன்புத் தோழமைக்காகவும் பழகும் காதலை, 'தோழமைக் காதல்' (Companionship Love) என்கிறோம். உடல் ஈடுபாடில்லாமல் உள்ள ஈடுபாட்டையே விரும்பும் காதலை 'பிளேடானிக் லவ்' (Platonic Love) என்று சொல்லும் வழக்கமும் பிளேட்டோவின் இக்கருத்தைக் கொண்டே ஏற்பட்டது.]

## காதலும் காமமும்

ஆண் பெண் சிற்றின்பம் என்கிறோமே, அதைவிட வலிமையான சுகம் வேறு எதுவும் இல்லை என்பது வாஸ்தவந்தான். ஆனால் அதைப்போல் வெறியூட்டும் போதையும் வேறொன்றுமில்லை.

எது சீராகவும் அழகாகவும் அமைந்திருக்கிறதோ அதை நிதானமாகவும் ஆழமாகவும் கலையுணர்வோடும் காதலிப்பது தானே உண்மையான காதல்?

எது வெறியூட்டக்கூடியதோ, எது கட்டுக்கடங்காமல் மிதமிஞ்சிப் போவதோ, அதற்கு உண்மையான காதலில் இடமில்லையே?

உண்மையான காதல் நிலைத்திருக்க வேண்டுமானால் சிற்றின்ப ஈடுபாடு தலைகாட்டக்கூடாது. காதலர்கள் ஒருவரையொருவர் உயிருக்குயிராய்க்காதலிக்கிறவர்

களாயிருந்தால் உடலின்பத்தில் அக்கறை கொள்ளமாட்டார்கள்.

காதலர்கள் ஒருவரை யொருவர் முத்தமிடலாம்; இறுகக் கட்டியணைத்துக் கொள்ளலாம்; ஓயாமல் ஒன்ருகவே இருக்கலாம்; (ஜீவ அழகையே முக்கியமாகக் கொண்டு தாய்ப்பாசமும் குழந்தைப் பாசமும் பொங்கும்படி காதலில் கொஞ்சி மகிழ்ந்திருக்கலாம்.) ஆனுல் இந்த எல்லையைக் கடந்து அவர்கள் போகக் கூடாது; சரீர சுகத்தில் நாட்டம் கொள்ளக் கூடாது. அவ்வாறு மீறிச் செய்வார்களானுல் காதலின் நிஜச் சுவையை உணராமல் போவதோடு, சரீர ஈடுபாடு அதிகரிக்க அதிகரிக்க நாளடைவில் ஹீனசுபாவத்தைஅடைவார்கள். (Republic)

[காதல்என்பதுஉள்ளப்பசியே தவிர,உடல் பசி அல்ல.அணைப்பு, முத்தம், ஓயாமல் கொஞ்சுதல்; இவைதான் ஆசை வெளிப்பாட்டுக்கு எல்லைகள்; இந்த எல்லைகளை மீறி, மனத்தளவே இருக்கும் ஆசையானது சரீர இச்சையின் ஈடுபாட்டில் கால்பாவினுல் காதல் கரைந்துவிடும். சரீர சுகத்தின் முடிவில் மிஞ்சுவது வறட்சி அல்லது விரக்தியே தவிர, நிலையான மன லயிப்பல்ல. காதல் என்பது வெறும் மனத் தவிப்பு தான். சரீர சுக ஈடுபாட்டினுல் அந்த தவிப்புக் குறைந்துவிட்டால் காதலும் மறைந்துவிடும். மேலும் அதிகமான சரீர இச்சையின் அனுபவங்களினுல் மென்மையான பண்பே மாறிப்போய் சுபாவத்தில் ஒரு மிருகத் தன்மை ஊறிவிடும். அது கீழ்த்தர சுகானுபவங்களை நோக்கி இழுக்கும். இவை போன்ற ஆண் பெண் இயல் பற்றிய நவீன ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களைத் தான் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பு தோன்றிய பிளேட்டோ வலியுறுத்திச் சொல்கிருர். 'காமம் மலரை விட மென்மையானது. அதன் தன்மையறிந்து நுட்பமாக ஈடுபடுவார்கள் இவ்வுலகில் வெகு சிலரே' என்று 'திருக்குறள் புணர்ச்சி விதும்பல்' கருத்தையும் இங்கு ஒப்புநோக்குக.]

### மூன்றுவித ஆசைகள்

மனித வாழ்வின் அடிப்படை மூன்று தேவைகள்மீதும் மூன்றுவித ஆசைகள் மீதும் அமைந்துள்ளது. சாப்பிடுவது; குடிப்பது; ஆண் பெண் சரீர இச்சை. முதல் இரண்டு தேவைகளும் பிறப்பிலிருந்தே துவங்கிவிடுகிறது. மூன்ருவதான மாபெரும் தேவையோ சரீர இச்சையின் வடிவில் மனிதர்களைப் பைத்தியமாக்குமளவிற்கு மூர்க்கமான தீயாகக் கொழுந்து விட்டெரிகிறது. அவற்றை ஒரு சீராகக் கட்டுப்படுத்திச் சரியான வழியில் நடத்தினுல் அவை பண்பை வளர்க்கும்; இல்லையெனில் நேர்மாருன விளைவுதான்! (Laws. 782)

### திருமணம்

மனிதன் அழிவற்ற நிலையில் ஒட்டிக்கொள்ள வேண்டும். என்றென்றும் தன் ஸ்தானத்தில் தனக்குப் பின்னுல் கடவுளின் தொண்டர்களாக விளங்கத் தன் குழந்தைகளின் குழந்தைகளை விட்டுச் செல்லவேண்டும். இதைக் கவனிக்காமல் ஜனங்களின் மத்தியில் தனியாளுக இருப்பானுகில், முப்பத்தைந்து வயதுவரை இன்னும் மணம் செய்துகொள்ளாம

விருப்பானுகில், அவன் அபராதம் செலுத்துவானுக!

['சந்ததியாகிற நூலே அறுத்து விடாமலிரு'என்ற தைத்திரியோபநிஷத் கருத்தையும், 'சந்ததிக்கு அழகு வந்ததி செய்யாமை' என்ற ஔவையாரின் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்குக.]

### திருமணப் பொருத்தம்

[நாம் வீட்டில் வளர்க்கும் நாய் முதலான மிருகங்கள் நல்ல குட்டிகள் போட வேண்டுமானுல் எந்த முறையை அனுஷ்டிக்கிருேம்? நல்ல நாயை அதைப்போல் நல்ல உடலாரோக்கியமும் யௌவனமும் உள்ள நாயோடு பக்குவமான வயசில் சேர வைத்தால் நல்ல நல்ல குட்டிகள் உற்பத்தியாகும். கிழட்டு நாயை யௌவன நாயோடோ, ஆரோக்கியமற்ற நாயை ஆரோக்கியமற்ற நாயோடோ இணைய விடுவதில்லை.]

இதே முறையைத்தான் மனித இனங்கள் விஷயத்திலும் அனுசரிக்க வேண்டும்! (Republic)

உடற் பொருத்தம், மனப் பொருத்தம், சுபாவப் பொருத்தம், அறிவுப் பொருத்தம் முதலான எல்லாவற்றிலும் உயர்ந்தவர்களேயே (திருமணத்தில்) ஒன்றுசேர விடவேண்டும். பலஹீனமானவர்கள் பலஹீனமான வர்களோடு இணைவதைக் கூடிய வரைக் குறைத்துவிட வேண்டும்.

உடற்பலமும் திறமையும் வாய்ந்த வீர வாலிபர்களுக்குப் பெண்களுடன் அடிக்கடி உறவு வைத்துக்கொள்ள அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அத்தகையவர்களுக்கு முடிந்த வரை எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் நாட்டுக்கு நல்லது தானே?

['காவடியின் பாரம்போல் காதல் இருபக்கமும் பொருந்தியிருந்தால்தான் இன்பமாகும்' என்னும் திருக்குறள் கருத்தை இங்கு ஒப்பு நோக்குக.]

"ஒவ்வொரு மணமகனுக்கும் மணப் பெண்ணிற்கும் முன்னதாக ஆரோக்கிய சர்டிபிகேட் தேவை" (Laws, 772).

### பருவத்தே பயிர் செய்

யௌவன பருவத்தில் உள்ளவர்களுக்குத்தான் குழந்தைகள் உற்பத்தியாக வேண்டும்.

பெண்களுக்கு இருபது வயதிலும் ஆண்களுக்கு முப்பது வயதிலும் பரிபக்குவமான யௌவன பருவம் துவங்குகிறது.

பெண்கள் இருபது வயதிலிருந்து நாற்பது வயது வரை குழந்தைகள் பெறலாம். ஆண்களோ, வாழ்வின் ஜீவத் துடிப்பு மிகுந்த பக்குவம் அடைந்ததும் இருபத்தைந்து வயதிலிருந்து ஐம்பத்தைந்து வயது வரை குழந்தைகள் பெறலாம்—அவைதான் உடலும் அறிவும் பூரண மலர்ச்சி பெற்று வீரிய சக்தியுடன் விளங்கும் வருஷங்களாகும்.

இந்த வயது எல்லேகளைத் தாண்டிப் பிறக்கும் குழந்தைகள் புனிதமற்றவையென ராஜ்யத்தால் புறக்கணிக்கப்படும். (Republic)

[மேற்கூறிய ஜனன வரையறைக் காலத்திற்கு முன்போ பின்போ எந்த நேரத்திலும் சரியான ஜோடிகள் காதலின்பத்தில் ஈடுபடலாம். ஆனுல் குழந்தை

கள் பிறக்காமல் கர்ப்பத்தடை செய்யவேண்டும். ஏனெனில் ஆரோக்கியமற்ற குழந்தைகள் பிறக்காமல் கட்டுப்படுத்துவது தேச நலத்தை எதிர்நோக்கியுள்ள ஒரு கடமையாகும்!]

### ஜனன உற்பத்திக் கட்டுப்பாடு

[நாட்டில் ஜனப் பெருக்கம் ஏற்பட்டு வேற்று நாட்டு உணவுப் பொருள்களை எதிர்பார்க்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலேயோ, யுத்தமோ ஏற்படாமல் தடுக்கவேண்டும் எனப் பிளேட்டோ கருதுகிறார்:]

அரசாங்க அங்கீகாரம் இல்லாமல் யாரும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. விவாகங்கள், குழந்தை உற்பத்திகள் பற்றி வரையறை செய்யவேண்டிய சட்டங்கள் சந்தர்ப்பத்திற் கேற்றாற்போல் அடிக்கடித் தேவைப்படும்.

நாட்டின் ஜனத்தொகை அதிகம் பெருகிவிடாமலும் அதிகம் குறைந்து விடாமலும் கண்காணிக்க வேண்டும்.

பஞ்சம், பிணி, யுத்தங்களினல் குறைந்துவிட்டால் அதைச் சரிக்கட்டும் வகையிலும், ராஜ்யம் பெரிதாகவோ சிறிதாகவோ ஆகிவிடாமல் ஜனத் தொகையைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவாகங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ குறைக்கவோ செய்யவேண்டும்.

### [அதற்கு வழி...?]

திருவிழாச் சமயங்களில் திருமணங்கள் நடைபெறச் செய்ய வேண்டும்...ஒவ்வொரு திருவிழாவிலும் இத்தனை திருமணங்கள் தாம் நடைபெறலாம் என அவ்வப்போது அதிகாரிகள் தேவையை ஒட்டி விதி ஏற்படுத்த வேண்டும்.

சீட்டுக் குலுக்கிப் போடும் முறை ஒன்றை ஏற்படுத்தி, அதிர்ஷ்டச் சீட்டு விழுந்தவர்கள் தாம் விவாகம் செய்து கொள்ளலாம் என்று கூறித் தகுதியற்றவர்கள் திருமணம் செய்துகொள்வதைத் தந்திரமாகத் தடுத்துவிடலாம்.

### கர்ப்பத் தடை

சந்தோஷமாய் வாழ்பவர்கள் வருவாய்க்குமிஞ்சிக்குழந்தைகள் பிறக்காதவாறு ஜனன உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் கவனமாய் இருப்பார்கள். பிரஜா விருத்தியால் வறுமைக்கோ யுத்தத்திற்கோ இடமில்லாதவாறு கண்ணுங் கருத்துமாய் இருப்பார்கள்.

[ஆண் பெண் இயல் ஆராய்ச்சியாளர்களான மேரிஸ்டோப்ஸ் அம்மையார், ஹாவ்லக் எல்லீஸ், வாண்டி வெல்டி முதலான நவீன சிந்தனையாளர்களின் கருத்துகளுக்கெல்லாம் மூலவேர் பிளேட்டோவிடமிருக்கிறது.]

### ஆண் பெண் சம உரிமை

உபயோகப்படக் கூடியது தான் அழகுள்ளது. அதுபோல, பெண்கள் உபயோககரமாக இருக்கும் போதுதான் அழகுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

[சமுதாயத்தில் ஆண்களைப் போலப் பெண்களுக்குச் சம உரிமைகளும், கல்விப் பயிற்சியும் பொது வாழ்வில் சமத்துவமான பங்கும் இல்லாத காலத்தில்

தோன்றிய பிளேட்டோ, 'ஆண் பெண் சரி நிகர் சமானம்' என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். ஆண் நாய்களை விடப் பெண்நாய்கள் தேகபலத்தில் குறைந்தவை என்று நினைக்கிறோமே தவிர, காவல் காப்பது, வேட்டையாடுவது முதலிய பொதுத் தொழில்களில் ஆண் நாய் பெண் நாய் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. பெண் நாய்கள் குட்டி போட்டுப் பால் கொடுக்க வேண்டுமென்று அவற்றை வீட்டுக்குள்ளேயே அடைத்து வைப்பதில்லை. அது போல் பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பதாலும், பொது வாழ்வில் சம பங்கு பெறாமல் தடை செய்வதாலும், தேச நலனுக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படக்கூடிய தீங்கு வேறெதுவுமில்லை. ஆற்றல் திறமையில் ஆணும் கலைத்திறமையில் பெண்ணும் சிறப்புடையவர்களாய் இருப்பார்களெனச் சொல்லலாமே தவிர, அறிவுத்துறையில் வேறுபாடு இல்லை. நாய்களை ஒரே மாதிரியாக உபயோகப்படும் திறமை ஏற்படுவதற்கு ஒரே மாதிரியான பயிற்சியும் வளர்ப்பும் தருவதுபோல், மனித சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேமாதிரியான கல்விப் பயிற்சியும் தேகப் பயிற்சியும் தர வேண்டும். ஆண் பெண்கள் ஒன்றாகக் கூட்டுக் கல்விமுறை பயிற்சி பெற்று ஒன்றாக வேலை செய்தால் தான் சமுதாய ஒழுங்கு மேம்படும். ஆட்சி நிர்வாகத்திலும் பெண்களுக்குப் பங்குண்டு. ராஜ்யத்திலுள்ள சகல விதமான தொழில் துறைகளும் ஆணுக்குரியவை பெண்ணுக்குரியவை என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் திறந்து விடுபடவேண்டும். இயற்கைத் திறமையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை!]

உடலின் வெளியே காணப்படும் உருவத் தோற்றங்களல்ல, உள்ளேயுள்ள பண்புகள்தாம் வித்தியாசமானவை. ஒருத்திக்கு வைத்தியத்தில் திறமை இருக்கலாம். இன்னொருத்திக்கு அந்தப் பண்பு இராமல் சங்கீதத் துறையில் திறமையிருக்கலாம். இன்னொருத்திக்குச் சங்கீத ஞானமே இல்லாமல் அரசியலில் ஈடுபட ஆர்வமிருக்கலாம். இன்னொருத்திக்குத் தத்துவஞானத் துறையில் மனப்போக்குச் செல்லலாம்,

[அந்த அந்த சுபாவங்களுக்கு ஏற்றவாறு சந்தர்ப்பங்களும் பயிற்சியும் அளிப்பதுதான் நீதியுள்ள அரசாங்கத்தின் கடமையாகும்.]

## பெண்களுக்கு இராணுவப் பயிற்சி

"ஆண்களைப் போலப் பெண்களுக்கும் இராணுவப் பயிற்சியும் அளிக்கவேண்டும். அப்போது தான் நாட்டின் தற்காப்பு நிலைத்திருக்கும். அதற்கு மாறாக இப்போதிருப்பது போல் பெண்களுக்குச் சம உரிமை வழங்காதிருந்தால், அந்த ராஜ்யத்தின், பாதிப் பகுதி ஊனமடைந்ததாயிருக்கும்." எனப் பிளேட்டோ வலியுறுத்துகிறார். பெண்களுக்குச் சரி சமமான ராணுவப் பயிற்சியும் போலீஸ் பயிற்சியும் தரவேண்டுமென்ற பிளேட்டோவின் இந்த முற்போக்குக் கருத்து இரண்டாயிர வருஷ முன்னேற்றத்திற்குப் பிறகுகூட உலகில் சரியாக முளை ஊன்றவில்லை என்பதைக் கவனிக்கவும்.

ஆள்வோரான அரசியல் வாதிகளுக்கு அமையும் மனைவிமார்கள் அவர்களைப் போல ஒத்த கல்வியும் ஒத்த திறமையும் ஒத்த சுபாவங்களும் உடையவர்களாய் இருக்கவேண்டு மென்கிருர் பிளேட்டோ.]

[ஆணும் பெண்ணும் ஒரே இடத்தில் சரிசம்மான தேகப் பயிற்சி பெறவேண்டும் என்று பிளேட்டோ கூறும் சந்தர்ப்பத்தில், 'எதையும் மூடுமந்திரமாக வைத்திருப்பதைவிட மூடி மறைக்காமல் திறந்து வைப்பதுதான் நல்லதென அனுபவத்தால் தெரிகிறது' என்று கூறி மேலே நாடுகளில் பெருகிவரும் 'ஆண் பெண் நிர்வாண இயக்கத்துக்கும்' மூலவித்திடுகிருர்.]

### உல்லாச வாழ்க்கை

ஆடம்பர உல்லாச வாழ்க்கையினுல் அடிக்கடி வைத்தியர்களின் உதவி தேவைப்படும்.

### உணவு

உன்னுடைய தேகாரோக்கியம் நல்ல நிலையில் இருக்கவேண்டுமானுல் உனது உணவு விஷயங்களில் ருசியைப் பார்க்கக்கூடாது.

ஏக காலத்தில் பலவகையான சுருதிகளுடன் சங்கீதம் பாடினுல் அது அதிகச் சப்தத்துடனும் அபஸ்வரங்களுடனும் எப்படி நாராசமாய் இருக்கிறதோ, அது போலப் பலரகமான உணவுகளை உடலுக்குள் அள்ளியடைப்பதால் அது நாசகரமாய் இருப்பதோடு தொல்லையாகவும் இருக்கிறது. (மீதூண்விரும்பேல்) எளிமையான பாடலின் இன்னிசை லயத்தில் ஆத்மா சுருதி சேர்த்து ஸத்வகுணம் பெறுவது போல, எளிமையான உணவுகளினுல் தேகாரோக்கியத்திற்குச் சத்துக் கிடைக்கிறது.

பலரக ருசியான உணவுகளை அள்ளி விழுங்குபவன் தன்னடக்கம் இல்லாதவனுகவும் வியாதிகளுக்கு இரையாகக் கூடியவனுகவும் இருக்கிருன். (நோய்க்கு இடங்கொடேல்!)

பயில்வான்களின் உணவு வகைகள் ஒருவிதத் தூக்கக் கிரக்கத்தோடு கலந்த போதை தரக்கூடியவை. அத்தகைய உணவுத் துறையிலிருந்து ஓர் அணுவளவேனும் தவறினுல்கூட அவர்களுக்கு விரைவில் கொடும் நோய்கள் பீடித்து விடுகின்றன.

எந்த நாட்டில் மக்களிடையே பல வியாதிகளும் தன்னடக்கமில்லாத் தன்மையும் மலிந்திருக்கின்றனவோ அந்த நாட்டில் நீதிமன்றங்களும் வைத்தியசாலைகளும் பெருகிக்கொண்டே எந்நேரமும் திறந்துகிடக்கும்.

எந்தப் பொருளிலும், எந்த ஆத்மாவிலும் நல்லது கெட்டது கலந்தே இருக்கின்றது.

[காய் கறிகளடங்கிய சைவ உணவும் மிதமாக உண்டு குடிப்பதும் கிழட்டுப் பருவம் வரை அமைதியான ஆரோக்கிய வாழ்க்கையைத் தருவதோடு நீண்ட ஆயுளையும் தரும் எனப் பிளேட்டோ கருதுகிருர்.]

### தொழில் வெற்றி

ஒரே மனிதன் பலவிதமான கலைத் தொழில்களில் வெற்றி பெற முடியாது.

மனித ஜாதியில் ஒரே மாதிரியான மனப்போக்கு அல்லது

திறமை உள்ள இருவரைக் கண்டு பிடிப்பது மிகக் கடினம்.

ஒருவனுக்கு எந்தத் தொழிலைச் செய்ய இயற்கையாகவே திறமை அமைந்திருக்கிறதோ அந்த ஒரு தொழிலையே அவன் செய்ய வேண்டும். அப்போது தான் அவன் பல மனிதராயிராமல் ஒரே மனிதனுய் இருப்பான். அப்போதுதான் ராஜ்யம் முழுவதும் ஒரே சமுதாயமாக இருக்கும்.

ஞாபகசக்தி, விரைவில் கிரகிக்கும் திறமை, உயர்ந்த மனோபாவம், சரள சுபாவம், நேர்மை, நியதி, மெய்மை, தைரியம், நிதானம், இத்தகைய குணங்கள் மீது விருப்பமுள்ள ஒருவன் ஒரு தொழிலில் ஈடுபட்டால் அந்தத் தொழிலில் ஓட்டைகள் இருக்காது!

ஒரே ஆசாமி பல தொழில்களிலும் தலையிட்டால் எந்தத் தொழிலையும் அவன் பூரணமாகவும் சிறப்பாகவும் செய்ய இயலாது. ஒரு தொழிலில் மட்டும் கவனத்துடன் ஈடுபட்டால், அவன் திறமையுடன் செய்யமுடியும்.

### வயதும் வாழ்க்கையும்

நேரான வாழ்க்கை நடத்துபவர்களும் மன அமைதி உள்ளவர்களும் கிழ வயதினுல் பாதிக்கப்படுவதில்லை. தீய பண்பு உள்ளவர்கள்தாம் யௌவனத்திலும் கிழ வயதிலும் துன்புறுகிறுர்கள்.

### இன்பமும் துன்பமும்

இன்பம் துன்பம் என்பவை எல்லாம் வெறும் உணர்ச்சிகள் தாம்; ஆத்மாவின் வெறும் அசைவுகள்தாம்!

### வீரமும் ஒழுக்கமும்

மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ முரடனுகவோ ஆகிவிடுவான்.

ஒவ்வொரு மனிதனும் துணிச்சல் உள்ளவனுய் இருக்க வேண்டும்; ஆனல் அவன் கண்ணியமானவனுயு மிருக்கவேண்டும்.

அளவு மீறிய தற்செருக்குத்தான் உண்மையில் அவர்களின் தவருன செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணமா யிருக்கிறது. சுயப்பற்றுதல் நீங்கவேண்டும்.

நான்கு நல்லொழுக்கங்கள்: அறிவு, வீரம், நிதானம், நேர்மை.

### நன்மையும் தீமையும்

நல்லவர்கள் வெகு சிலரே; தீயவர்களும் வெகு சிலரே; பெரும்பாலானவர் இவை இரண்டுக்கும் மத்தியில் இருக்கிறுர்கள்

எவ்வளவுக் கெவ்வளவு கெட்டவனுயிருக்கிறுனே அவ்வளவுக் கவ்வளவு துன்பங்களை அனுபவிக்கிறுன்.

பிறரை எவ்வளவு காலத்திற்குத் துன்பப்படுத்துகிறுனே அவ்வளவு காலத்திற்குத் துன்பப்படுகிறுன்.

நல்ல தன்மை என்பது ஆத்மாவின் நல்லமைப்பும் ஆரோக்கியமும் அழகுமாகும்; தீமை என்பதோ அதன் நோயும் கோர அமைப்பும் பலஹீனமும் ஆகும்.

(Republic. 359.)

தெரிந்தே பித்தலாட்டத்தை விரும்புபவனை நம்பக்கூடாது; தெரியாமலே பித்தலாட்டத்தை

விரும்புபவன் முட்டாள். நம்பக மற்ற கபடக்காரனுக்கும், முட்டாளுக்கும் நண்பர்கள் இல்லை. அத்தகையவர்கள் இந்த உலகில் அநாதைகள் போல் தனிமை உணர்ச்சியைத்தான் காண்பார்கள்.

(Laws, 726)

பலஹீனமான சுபாவங்களுக்கு மிகப் பெரிய நன்மை செய்யவும் சக்தி இல்லை; மிகப் பெரிய தீமை செய்யவும் சக்தி இல்லை.

விபரீதமான சூழ்நிலைகளில் தாழ்ந்த சுபாவங்களை விட மேலான நுட்ப சுபாவங்கள்தாம் விரைவில் கேடு அடைகின்றன.

திறமையான நல்ல சுபாவங்களை உடையவர்கள்தாம் சரியான பயிற்சி பெறுதபோது மிகவும் கெடுதலானவர்களாக மாறுகிறார்கள்.

## பொய்யும் மெய்யும்

மெய்மை அழகுள்ளது; அழிவற்றது.

(Laws, 64)

பொய்யை மனிதரும் கடவுளரும் வெறுக்கிறார்கள்.

எவனும் தான் ஏமாற்றப்பட விரும்புவதில்லை.

பொய்யை மருந்துபோல உபயோகிக்கலாம். ஆனால் மருந்தை உபயோகிக்கத் தெரிந்தவன் தான் உபயோகப்படுத்தலாமே தவிர, எல்லோரும் அதை உபயோகிக்கக்கூடாது.

புளுகுகள் சில சமயங்களில் உபயோகப்படுவதுண்டு. முக்கியமாகப் பகைவர்கள் விஷயத்தில் பொய்யை உபயோகிக்கலாம்.

(Republic)

## கண்ணீரும் சிரிப்பும்

மனிதன் அளவுமீறிய சிரிப்பையோ அளவு மீறிய கண்ணீரையோ தவிர்க்க வேண்டும்; அண்டை அயலவரையும் அவ்வாறே செய்யும்படி தூண்ட வேண்டும். எந்த நிலையிலும் மிதமாக இருப்பதே ஆனந்தத்திற்கும் வெற்றிக்கும் வழி.

(Laws, 726.)

## நிதானமும் அமிதமும்

துன்பம் வந்த சமயத்தில் நாம் நிதானம் தவறிவிடக் கூடாது; பொறுமையுடன் இருக்க வேண்டும். (துன்பத்திற்கு இடங் கொடேல்)

பொறுமையற்று நிதானம் தவறி உணர்ச்சி வசப்பட்டு நடப்பதினால் நமக்கு ஒரு லாபமும் ஏற்படாது. (நிலையில் பிரியேல்).

பொதுமக்கள் உண்பது, குடிப்பது, ஆண் பெண் காதலில் ஈடுபடுவது முதலான விஷயங்களால் உண்டாகிற சகலவிதமான சுகங்களிலும் தன்னடக்கத்துடன் இருக்கவேண்டும். அஃதாவது எந்தச் சுகத்தையும் மிதமிஞ்சி அனுபவிக்கக்கூடாது; எல்லாவற்றிலும் ஒரு நிதானம் இருக்கவேண்டும்.

## ஆசைகளும் தேவைகளும்

ஆசைகள் அதிகரிக்க அதிகரிக்கத் தேவைகளும் அதிகரிக்கும்; அவைகளைத் திருப்தி செய்ய முடியாமல் தவிப்பான். அவனுடைய உள்ளத்தைச் சோதித்துப் பார்த்தால் அவன் தான் உண்மையில் பெரிய வறிஞன் என்பது தெரியும்!

அநாவசியமான இச்சைகளின் இன்பங்களினுல் பணச் செலவும் கால விரயமும் ஏற்படுகிறது. அவசியமான இன்பங்களினுல் இரண்டும் மிஞ்சுகிறது. ஆண் பெண் இன்பம் முதலான சகல இன்பங்களிலும் இப்படித் தான்.

### உடல்

போர் வீரர்கள் நாசூக்கான உடல் உள்ளவர்களாய் இருத்தலாகாது.

### உடலும் ஆத்மாவும்

ஆத்மா சீராய் இருப்பதற்கு உடம்பைச் சீராய் வைத்திருக்க வேண்டும்.

அழகு, பலம், ஆரோக்கியம், இவற்றை உடைய ஓர் உடலானது சீரும் சிறப்புமாக உயர்ந்து விளங்குவது போல, அறிவும் தன்னடக்கமும் தைரியமும் உடைய ஒரு நேர்மையான ஆத்மாவானது சீரும் சிறப்புமாக உயர்ந்து விளங்குகிறது.

எவனிடம் அழகான ஆத்மாவும் அழகான தேகமும் ஒன்று போல அமைந்திருக்கிறதோ அவனைக் காண்பதைவிடக் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சி வேறென்ன உண்டு?

ஓர் அழகான ஆத்மா தன் நல்ல தன்மையினுலேயே உடம்பையும் அழகாக்குகிறது.

### கனவுகள்

நல்லவனே கெட்டவனே எந்த மனிதர்களின் அந்தரங்கத்திலும் அடக்க முடியாத சில மிருகப் பிராந்தியமான இச்சைகள் இருக்கின்றன. அவை மனிதன் உறங்கும்போது கனவுகளாக வெளிப்படுகின்றன.

அன்றாட வாழ்க்கையைப் பரிசுத்தமாகவும் நிதானமாகவும் நடத்திச் செல்பவன், உறங்கப் போவதற்கு முன் மிதமாக உண வருந்தித் தன் மனசிலுள்ள இச்சைகளையும் கோபதாபம் முதலான உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டு, உறங்குவானுகில் அவன் கெட்ட கனவுகள் காண மாட்டான்!

[சமீபத்தில் மேலை நாடுகளில் பிரமாதப்படும் பேரறிஞர் ப்ரூயிடின் (Freud) கனவுத் தத்துவ ஆராய்ச்சிகளுக்கு 2300 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பிளேட்டோவின் சிந்தனைகளில் மூலவேர் இருப்பதைக் காணவும்.]

### தத்துவம்

தத்துவம் என்பது அதி உன்னதமான சங்கீதம் (Phaedo).

வியப்புத்தான் தத்துவ ஞானியின் அளவு மிகுந்த கவர்ச்சி. தத்துவ ஞானத்தின் துவக்கம் இதைத்தவிர வேறெதுவுமில்லை.

தத்துவ ஞானமானது தகுதியான வயதில் மிதமான அளவில் தேடினுல் நளினமான பயன் தரும்; ஆனுல் அளவு மீறிய தத்துவஞானம் மனித வாழ்வின் நாசமாகும்.

[தத்துவஞானிக்கு உண்மையை ஊடுருவிப் பார்க்கும் தெளிவான திருஷ்டி இருக்க வேண்டுமெனவும், சிந்தனையாளன் செயல் புரியும் கர்மவீரனுகவும், செயல் புரிபவன் சிந்தனையாளனுகவும் இருக்க வேண்டுமெனவும் பிளேட்டோ வற்புறுத்துகிறூர்.]

ஞானத்திற்கு அருகதையற்றவர்கள் ஞானிகளைப்போல

வேஷம் போடுவதினுல்தான் பொது ஜனங்களுக்கு ஞானிகள் மீதே துவேஷம் ஏற்பட்டிருக்கிறது. (Republic)

## சொற்பொழிவு

மனித மனங்களை ஆளும் கலை தாம் சொற்பொழிவு.

### மரண பயம்

எதையும் செய்யக்கூடிய மனிதன், சாகவோ வாழவோ உள்ள சந்தர்ப்பங்களைப் பற்றிக் கணித்துப் பார்க்கக் கூடாது; எதையும் செய்யும்போதும் நல்லது செய்கிருேமா, கெடுதல் செய்கிருேமா என்பதை மட்டுந்தான் கருதிப் பார்க்கவேண்டும்.

சாவைப்பற்றியோ, வேறெதையும் பற்றியோ நினைக்கக் கூடாது; தாழ்ச்சியைப்பற்றித் தான் நினைக்கவேண்டும்.

சிரமமானது சாவைத் தவிர்ப்பதல்ல; அதர்மத்தைத் தவிர்ப்பது தான் சிரமம். (Apology, 28)

உண்மையான தத்துவஞானிகள் சாவுக்கு ஒத்திகை பார்ப்பதிலேயே எந்நேரமும் ஈடுபட்டிருப்பார்கள். சாவைச் சிறிதும் பயங்கரமானதாகக் கருதாமல் அற்பமாகக் கருதுவார்கள். அவர்களைப் போல வேறு யாருமில்லை.

மரித்தவர்கள் செல்லுமிடம் என சொல்லப்படுகிறதே பிதிருலோகம் அல்லது நரகம், அதிலே நம்பிக்கையுள்ளவர்கள் அங்கு அனுபவிக்கவேண்டிய சித்திரவதைகளை நினைத்துப் பயந்து கொண்டிருந்தால் மரண பயம் இல்லாமலிருக்க முடியுமா?...... நமது நூலாசிரியர்கள் அத்தகைய பிதிருலோக வர்ணனைகளைப் பயங்கரமாகக் கற்பனை செய்து எழுதக்கூடாது.

நமது இளைஞர்கள் துணிச்சல் சுபாவமுடையவர்களாய் இருக்க வேண்டுமானுல், அவர்களுக்கு மரண பயம் இருக்கக் கூடாது. அத்தகைய தைரியம் தரக்கூடிய கதைகளைச் சிறு வயதிலிருந்தே அவர்களுக்குச் சொல்லிவர வேண்டும். (Republic)

### விதி

எவனுடைய ஆத்மா எந்த மாதிரியான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறதோ, அதுதான் பூவுலகில் அவனுடைய விதியாக அமைகிறது.

[மனிதப் பிறவியில் நாம் எதிலும் நல்லது கெட்டதையும் ஆராயும் பகுத்தறிவையும் நல்ல பண்பையும் வளர்த்துச் சதா மெய்யறிவையே நாடவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்கிருந்தாலும் சிறந்த வாழ்க்கையே வாழவேண்டும். சத்தியத்திலும் நேர்மையிலும் தளராத நம்பிக்கை கொள்ளவேண்டும். அது தான் ஆனந்தத்திற்கு வழி. அதைப் பொறுத்தே அடுத்த பிறவியும் அமையும்.

செல்வம், தற்செருக்கு போன்ற ஆசாபாசங்களினுல் மதி மயங்காமல், ஆத்மா கறை படாமல் எப்போதும் அறிவு விழிப்புடன் இருப்போமாக சகோதர மனிதர்களிடமும் கடவுளிடமும் அன்பு கொள்வோமாக. அதுதான் இப்பிறவியிலும் இனி வரும் பிறவிப் பயணங்களிலும் நம் ஆனந்தத்திற்கு உறுதுணையாகும்.—இவைதாம் பிளேட்டோவின் சிந்தனை உள்ளம்.]

## கலைச் சொற்களைப் பற்றி

[இந்த நூலில் கையாளப்பட்டிருக்கும் தமிழ்க் கலைச் சொற்களும் அவற்றுக்கு நேரான ஆங்கிலச் சொற்களும் கீழே தரப்பட்டுள்ளன.]

| | |
|---|---|
| அடிப்படைக் கொள்கை ... | Fundamental Principle |
| அறம் (நீதி) ... | Justice |
| அறிவு ... | Knowledge |
| ஞானம் ... | Wisdom |
| அழகு (சௌந்தரியம்) ... | Beauty |
| அரசியல் ... | Politics |
| அரசியல் அமைப்பு ... | Constitution |
| அராஜகம் ... | Anarchy |
| ஆட்சி முறை ... | Administration |
| அதிகார ஆட்சி ... | Authoritative State |
| அந்தஸ்து ஆட்சி ... | Timocracy |
| இராணுவ ஆட்சி, திறலாளர் ஆட்சி ... | Military State |
| ஒருசிலர் ஆட்சி ... | Oligorchy |
| கொடுங்கோலாட்சி ... | Tyranny |
| செல்வராட்சி ... | Plutocracy |
| தம்மாட்சி ... | Autocracy |
| முடியரசு ... | Monarchy |
| மேன்மக்களாட்சி ... | Aristocracy |
| பொதுக் குடியாட்சி ... | Democracy |
| யதேச்சாதிகார ஆட்சி ... | Despotism |
| ஆய்வியல், தர்க்க சாஸ்திரம் ... | Dialectic |
| இனம், சமுதாயம் ... | Community |
| இச்சை ... | Desire |
| இராஜ தந்திரம் ... | Diplomacy |
| இயக்கவியல் (பௌதீகம்) ... | Physics |
| உள்நாட்டு அமைதி ... | Internal Peace |
| உற்பத்தி ... | Production |
| ஒழுக்கம் ... | Morolity |
| கனவு இயல் கொள்கை ... | Theory of Dreams |

3365

| | |
|---|---|
| கட்சி அரசியல் ... | Party Politics |
| கலாசாரம் ... | Culture |
| கணக்கு ... | Mathematics |
| அளவியல் ... | Mensuration |
| எண் கணக்கியல் ... | Arithmetic |
| க்ஷேத்திரகணிதம், வடிகணிதம் ... | Geometry |
| சமஉடமை ... | Socialism |
| சத்தியம் (மெய்மை) ... | Truth |
| ஜாதிய முறை, வருணாசிரம தருமம் ... | Caste System |
| ஜீவராசிகளின் மூலம் ... | Origin of Species |
| தரம் வகுத்தல் ... | Classification |
| தனித்துவம் ... | Individualism |
| தற்காப்பு ... | Defence |
| தத்துவம் ... | Philosophy |
| தத்துவ ஞானிகள் ... | Philosophers |
| தேசியப் பண்பு ... | National Character |
| தேர்வு ... | Baleot |
| நகர ராஜ்யங்கள் ... | City States |
| நாகரிகம் ... | Civilisation |
| நீதி மன்றம் ... | Court |
| நோக்க முறை ... | Policy |
| பரிணாமவாதக் கொள்கை ... | Evolution Theory |
| பால் இயல் ... | Psychology of Sex |
| பிரஜை ... | Citizen |
| பிரச்னை ... | Problem |
| பேராசை ... | Avarice |
| பொதுமக்கள் அபிப்பிராயம் ... | Popular Opinion |
| பொருளாதாரம் ... | Economics |
| பொதுவுடமை ... | Communism |
| வகுப்புச் சண்டை ... | Class Conflict |
| வான சாஸ்திரம் ... | Astronomy |
| வாழ்க்கைத் தரம் ... | Standard Life |

# சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனைகளும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன்மொழிகளும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.]

## 1. டார்வின்

'குரங்கினமும் மனித இனமும் ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறிச் சிந்தனைப் புரட்சி செய்து விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் டார்வின்.

— *ஜெகசிற்பியன் எழுதியது*

## 2. பிளேட்டோ

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் கருதப் படுபவர் பிளேட்டோ.

— *அரு. ராமநாதன் எழுதியது*

## 3. கார்ல் மார்க்ஸ்

பொருளாதார விடுதலையே மனித குல மாண்பு என பொதுவுடைமைப் பொருளாதாரப் புரட்சி செய்தவர் மார்க்ஸ்.

— *ரா. தணலன் எழுதியது*

## 4. ரூஸோ

பிரெஞ்சுப் புரட்சிக்கு மூல காரணமானவர் எனவும், சுதந்திரத்தின் தந்தை எனவும் புதுமையைச் சிருஷ்டிக்கப் பிறந்தவர் எனவும் உலகம் போற்றிப் புகழும் சிந்தனையாளர் ரூஸோ.

— *கோமேதகவேலு எழுதியது*

## 5. பெஞ்சமின் பிராங்ளின்

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் புரட்சியின் போது விடி வெள்ளியாக விளங்கியவர் பெஞ்சமின் பிராங்ளின். தனி மனிதனின் முன்னேற்றத்தையும் தேச முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்தித்தவர்.

*மார்கரெட் கசின்ஸ்—அரு. ராமநாதன் எழுதியது*

## 6. அரிஸ்டாடில்

[சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கி வருகின்றன. சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.]

—*கிருஷ்ணன்பாலா எழுதியது*

**ஒவ்வொன்றும் விலை ரூபாய் 1—4—0**

# நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?

[கார்த்திகேயன் எழுதியது]

இது உயரமானவர்களின் உலகம். உங்களுடைய உயரத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டும் பயிற்சிப் புத்தகம் இது —

ஆணுக்கும், பெண்ணுக்கும் எடையும் உயரமும் எப்படியிருக்க வேண்டும்? கவர்ச்சிகரமான உடல் தோற்றத்திற்கு ஒவ்வொரு அங்கத்தின் அளவு முறை என்ன? பெண்களில் சிலர் ஆண்மைத் தோற்றத்துடனும் ஆண்களில் சிலர் பெண்மைத் தோற்றத்துடனும் காணப்படுகிறார்களே, அத்தகைய பருவ வளர்ச்சிக் கோளாறுகளுக்குக் காரணம் என்ன? பரிகாரங்கள் என்ன? குட்டையானவர்கள் எவ்வளவு அங்குலங்கள் வரை வளரமுடியும். அதற்குரிய ஆகார நியதிகள், பழக்க வழக்கங்கள், தேகப் பயிற்சிகள் எவை? உங்களுடைய குழந்தைகள் நெட்டையாக வளர நீங்கள் கவனிக்க வேண்டியவை எவை?

ஏராளமான விளக்கப் படங்களும், தேகப்பயிற்சிச் சித்திரங்களும் அடங்கிய உடற்கலை நூல்.

விலை ரூ. 1—8—0

# ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?

பி. எஸ். ராமையா எழுதிய கலை இயல். வெற்றிகரமாக ரேடியோ நாடகம் எழுதுவதற்கு வேண்டிய கதைப் பின்னல், உரையாடல், பாத்திர சிருஷ்டி, ஓசை ஒலிக் குறிப்புகள் முதலான சகல விஷயங்களும், ஒரு சிறு கதையும், அதைக் கால் மணி நேர ரேடியோ நாடகமாக மாற்றி யமைத்துக் காட்டும் மாதிரி வடிவமும் அடங்கிய சிறந்த நூல்.

விலை ரூ. 1—8—0

# புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

**துப்பறியும் காதலி** — 'மேதாவி' எழுதியது

[குறும்புக்காரியான லீலா பயங்கரச் சதிக்கூட்டத்தைத் துப்பறியப் புறப்படுகிறாள். ராயபுரம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண்ணின் பிரேதம் ஒன்று மிதக்கிறது! கடைசியில்...?] ரூ. 1-8-0

**கொலைப்பித்தன்** — வேலவன் எழுதியது

[இரண்டு ரகக் காதலிகளுக்கிடையே திண்டாடும் கதாநாயகனுக்காகப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நடந்த கொலையை மறு விசாரணை செய்து பிரமிக்க வைக்கிறார் துப்பறியும் கேசவன்] ரூ. 1-4-0

**பேய் வீடு** — சிரஞ்சீவி எழுதியது

[மாலதியின் கணவன் காட்டுப்பாதையில் ஒரு சூனியக்காரக் கிழவியைச் சந்திக்கிறான் — ஒரு பேய் வீட்டிற்குள் மாலதியும் துப்பறியும் ராஜாமணியும் அகப்பட்டுக் கொள்கிறார்கள். முடிவு என்ன?] ரூ. 1-8-0

**ரகசிய அறை** — 'மேதாவி' எழுதியது

[காதலுக்காக நடிகையாக மாறும் மனோரமாவிற்கு இரு பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. ஒன்றை எழுதியவன் கொலைப்படுகிறான், இன்னொருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயல்கிறான்.] ரூ. 1-4-0

**ரத்தப் பசி** — சிரஞ்சீவி எழுதியது

[சிறைஇருளுக்குள்ளே, இராவணன் முடி, மாயா ஜாலத் திருடன் மாலி முதலிய பயங்கர அத்தியாயங்களை உடையது.] ரூ. 1-4-0

**மர்மத் தீவு** — சிரஞ்சீவி எழுதியது

[மனிதவாடை தட்டுப்படாத மாயத் தீவிலே, மர்மக்குரல், மாய மனிதன், குறளி வித்தை, குமரி ஆசை, இவற்றிடையே அடுத்தடுத்து மர்மக்கொலைகள் நிகழ்கின்றன] ரூ. 1-4-0

**காதலன் கொலை வழக்கு** — சிரஞ்சீவி எழுதியது

[தத்ரூபமான கோர்ட் நடவடிக்கைகளுள்ள முதல் பாகமும் துப்பறிபவரின் புலன் விசாரணையுள்ள இரண்டாவது பாகமும் அடங்கியது] ரூ. 1-4-0

**இரட்டைக் கொலை** — ஜெகசிற்பியன் எழுதியது

['அபாய அறிவிப்பு' பத்திரிகாசிரியர் படுகொலை செய்யப்பட்ட மர்மத்தின் முடிவு திடுக்கிடக்கூடியது. யாரும் எதிர்பார்க்க முடியாதது] ரூ. 1-4-0

**துப்பறியும் ராஜு** — மேதாவி எழுதியது

[அக்காள் மரணத்தைக் கண்டுபிடிக்கப் பிராணபத்தான மர்மங்களிலெல்லாம் புகுந்து புறப்படுகிறான் தம்பி ராஜு] ரூ. 1-0-0

**மர்மக் கொலை** — சிரஞ்சீவி எழுதியது

[பலரின் நெஞ்சைக் கவர்ந்த மூன்றாவது பதிப்பு] ரூ. 1-0-0

**நீதி மயக்கம்** — சிரஞ்சீவி எழுதியது

[கணவன் கொலையுண்டு கிடந்தான். காதலன் குற்றவாளியாகக் கருதப்பட்டான். ஆனால் முடிவு என்ன? இரண்டாம் பதிப்பு] ரூ. 1-0-0

3365


# சுவையான புத்தகங்கள்

### சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், நூற் சுருக்கங்களும் சிந்தனைகளும், சித்திரங்களும் அடங்கிய நூல் வரிசை ; ஒவ்வொன்றும் விலை ரூ. 1-4-0]

1. டார்வின் (ஜெகசிற்பியன்)
2. பிளேட்டோ (அரு. ராமநாதன்)
3. கார்ல் மார்க்ஸ் (ரா. தணலன்)
4. ரூஸோ (கோமேதகவேலு)
5. பெஞ்சமின் பிராங்ளின் (அரு. ராமநாதன்)
6. அரிஸ்டாடில் (கிருஷ்ணன் பாலா)

### ஆராய்ச்சி :

1. ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?
2. நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?
3. இலாகிரிப் பொருள்களா? எமதூதர்களா?

ஒவ்வொன்றும் விலை. ரூ. 1-8-0

4. புதுமணத் தம்பதிகளுக்கு விலை ரூ. 2-4-0

### பல்வகை நாவல்கள் :

1. எதிர்வீட்டு ஜன்னல் (காதல் நாவல்) ரூ. 1-0-0
2. சிலந்திக் கூடு (பாலர் நாவல்) ரூ. 1-0-0
3. ஒற்றைக்கண்ணன் (பாலர் நாவல்) ரூ. 1-0-0
4. ஆசை வெள்ளம் ('சுகி'யின் நாவல்)
5. உறவு முள் (ஜெகசிற்பியன் நாவல்)

ஒவ்வொன்றும் ரூ. 0-12-0

6. நாநாவின் தாய் (எமிலிஜோலாவின் நாவல்) ரூ. 4-0-0

### அரு. ராமநாதன் கதைகள்

1. கதாநாயகி
2. அம்பிகாபதி
3. பழையனூர் நீலி

(ஒவ்வொன்றும் ரூ. 1-4-0)

### பொன்மொழிகள் வரிசை

1. ஔவையார்
2. விவேகசிந்தாமணி
3. பைபிள்
4. குர்ஆன்
5. பஞ்சதந்திரம்
6. புத்தர்

(ஒவ்வொன்றும் 0-8-0)

**பிரேமா பிரசுரம் :: சென்னை-24**

# உள்ளே


சிந்தனைகளின் மூலவேர் எது?
வாத்தியாரும் மாணவனும்
பிளேட்டோவின் வாழ்க்கை வரலாறு
பிளேட்டோவின் நூல்கள் :
நூற் சுருக்கங்கள் :

1. குடியரசு, (Republic)
**2. ஆத்மீகக் காதல்**
(கூடிக்களித்தல் - *Symposium*)
**3, 4, 5. ஆத்மீக வாழ்க்கை**

பிளேட்டோவின் சிந்தனைகள்

1 மதம்; 2. கலைகள்;
3. வைத்தியர்களும் நீதிபதிகளும்

பிளேட்டோவின் மணிமொழிகள்



# இந்த நூல்

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் மாபெரும் அறிஞராகக் கருதப்படுபவர் பிளேட்டோ. மனிதன் எதற்காக எந்தவிதமாக எத்தகைய சமுதாயத்தில் வாழ்வது எனச் சிந்தித்தார். அவர் சிந்திக்காத விஷயமே எதுவுமில்லை......

பிளேட்டோவின் வரலாறு; அவர் எழுதிய 'குடியரசு' (Republic), கூடிக்களித்தல் ஆகிய ஆத்மீகக்காதல் (Symposium), ஆத்மீக வாழ்க்கை முதலான நூல்களின் சுருக்கங்களும் விமர்சனமும்; கடவுள், கலை, கனவு, ஆண் பெண் காதல், அரசியல், உணவு, பொருளாதாரம், வாழ்க்கை முதலானவற்றைப் பற்றி அவருடைய பலவேறு நூல்களிலிருந்தும் திரட்டப்பட்ட கருத்துக்கள்; மணிமொழிகள்; அவற்றிற்கு இணையான திருக்குறள், புறநானூறு, உபநிஷதக் கருத்துகள்—இவையனைத்தும் ஒருங்கேயுள்ள அருமையான நூல்.



Prema Art Printers, Madras-24